இரா.துரைரத்தினம்

# செய்திகளின் மறுபக்கம்



# செய்திகளின் மறுபக்கம்

இரா.துரைரத்தினம்

# நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு | : செய்திகளின் மறுபக்கம் |
| நூலாசிரியர் | : இரா.துரைரத்தினம் |
| மொத்த பக்கங்கள் | : XII + 194 |
| பதிப்பாண்டு | : 2018 |
| பக்க வடிவமைப்பு | : ஹரிகரன் சுப்பிரமணியன் (கோபி) |
| அட்டை வடிவமைப்பு | : எஸ்.ரொசான் |
| அச்சுப்பதிப்பு | : யுனைட்டட் மேர்ச்சன்ட்ஸ் பிறின்றர்ஸ் |
| வெளியீடு | : தமிழ்தந்தி |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |

| | |
|---|---|
| Title | : Seithikalin Marupakkam |
| Author | : R.Thurairatnam |
| Edition | : 2018 |
| Pages | : XII + 194 |
| Cover Design | : S.Roshan |
| Page Making | : Hariharan Subramaniyan |
| Printing | : United Merchents Printers |
| Published By | : ThamilThanthi |
| Copy Right | : Author |

# பொருளடக்கம்

அணிந்துரை

முன்னுரை

01. விடுதலைப்போராட்ட வரலாற்றில்
மறக்க முடியாத 2004 மார்ச் 3

02. புலம்பெயர் தமிழர்கள் சிலரின் பிற்போக்கு தனங்கள்

03. மட்டக்களப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட யாழ். தமிழர்கள்

04. இராசதுரைக்கு துரோகி பட்டம் வழங்கிய கூட்டணி

05. 2000 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில்
ஏற்பட்ட பிளவு

06. தினக்கதிர் தமிழ் தினசரி மீதான தாக்குதல்

07. கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி மாறுபட்ட செய்திகள்

08. முதலாவது பிராந்திய செய்தியாளர் சங்கம்

09. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம்

10. வெருகலில் சிந்திய இரத்தம்

11. பிளவுகளை ஏற்படுத்திய கிழக்கு பல்கலைக்கழகம்

12. தமிழ் முஸ்லீம் கலவரங்களும்
அதன் பின்னணியில் இருந்தவர்களும்

13. கோணேஸ்வரி படுகொலையை ஞாபகப்படுத்திய
எஸ்.ரி.எவ் அதிகாரி

14. ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளை வளர்த்து விட்ட
விடுதலைப்புலிகள்

15. கிழக்கின் ஊடகத்துறை முன்னோடிகள்

16. சந்திரிக்காவை காப்பாற்ற முற்பட்ட
தமிழர் விடுதலைக் கூட்டணி

17. தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்ட உதயசூரியன் சின்னம்

18. பொருளியல்துறை தலைவர் தம்பையா படுகொலை

19. புலிகளிடமிருந்து நடேசனை மீட்ட அவனது அக்கா

20. விவசாயத்துறையை வளர்த்தெடுத்த பேராசிரியர் ரவீந்திரநாத்

21. வெற்றி பெற்று ஒருமாதத்தில் கொல்லப்பட்ட நிமலன்

22. முரசொலியில் எனது அனுபவமும், அகிலனின் மரணமும்

23. சந்திரிக்காவின் அபிவிருத்தியும்,
நிமலராசனின் படுகொலையும்

24. சிவராம் பற்றி எனது பார்வை

25. தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள்

26. புனிதர்களாகவும் நீதிமான்களாகவும் மாறிவிட்ட
தமிழ் இயக்கங்கள்

27. மட்டக்களப்பு படுவான்கரை கிராமங்களின் விருந்தோம்பல்

28. வடமுனை சிங்கள குடியேற்றமும், எமது பயணமும்

29. ஐரோப்பாவில் முதல் தமிழ் ஊடகம்

# அணிந்துரை



இலங்கையின் தமிழ் ஊடகத்துறையில் அர்ப்பணிப்பு மற்றும் கச்சிதமான செய்திகளுக் கான தேடல் என்பவற்றை முன்னிறுத்திப்ப ணியாற்றிய உயர்வான பத்திரிகையாளர்களின் சந்ததியைச் சேர்ந்தவர் இரா.துரைரத்தினம்.

யாழ்ப்பாணத்தின் வடமராட்சியைப் பிறப் பிடமாகக் கொண்ட இரா.துரைரத்தினம், மட்டக்களப்பில் நீண்டகாலம் வாழ்ந்து பத்திரிகைத்துறையில் உளப்பூர்வமாக ஈடுபட்டு தன்னை ஒரு நல்ல பத்திரிகையாளராக நிலைநிறுத் தியிருந்தார்.

ஏறத்தாள நான்கு தசாப்தகால அனுபவத்தை பத்திரிகைத்து றையில் கொண்டுள்ள இரா. துரைரத்தினம் என்னோடு செய் தித்துறையில் உறவாட ஆரம்பித்தகாலம் எண்பதாம் ஆண்டுக ளின் ஆரம்பகாலப் பகுதியாகும்.

1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் ஈழுநாடு பத்திட கையிலே எனது பத்திரிகைத்துறைப்பணியை ஆரம்பித்தேன். அப்போது இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலே தீவிரவாதம் தமிழ் அரசியலில் முளைவிட ஆரம்பித்த தரு ணம்.

பத்திரிகைத்துறையினருக்கு திரும்புமிடமெல்லாம் செய் திகளுக்குப்பஞ்சமில்லாத ஒரு சூழல் துளிர்விட ஆரம்பித் தபோதிலும், அத்தகைய அந்தகார தருணத்தில் துணிவு, பத்திரிகைதர்மம், கடமைஉணர்வு என்பவற்றை நிலைநிறுத் திப்பணியாற்றிய செய்தியாளர்களில் ஒருவராக இரா. துரைரத் தினம் விளங்கியிருந்தார்.

1983 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையில் வடமுனைப்பகுதி

யில், அத்துமீறிய பெரும்பான்மையின குடியேற்றம் குறித்து வடமுனையின் களநிலபரத்தை நேரில் சென்று பார்வையிட்டு செய்திக்கட்டுரையொன்றை ஆறுபாகங்களாக ஈழநாடு பத்திரிகையில் எழுதியிருந்தேன்

அந்த இக்கட்டான காலகட்டத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஈழநாடு பத்திரிகையின் செய்தியாளராகப் பணியாற்றிய இரா.துரைரத்தினம், வடமுனைபற்றிய நிலபரத்தை நேரில் சென்று ஆராய்ந்து எழுதுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தார்.

மிக நல்லமுறையில் செய்திக்கட்டுரை தொடராக ஈழநாடு பத்திரிகையில் வெளிவருவதற்கு இரா. துரைரத்தினம் வழங்கிய பங்களிப்பு அபரிமிதமானது.

இதுதவிர மட்டக்களப்பின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார விடயங்களில் அவர் பத்திரிகைத்துறை வாயிலாக வழங்கிய பங்களிப்பு மிகச்சிறப்பானதாகும்.

பத்திரிகைத்துறையில் இரா.துரைரத்தினம் அவர்களிடம் காணப்பட்ட நீண்டகால அனுபவம், ஆளுமை, அர்ப்பணிப்பு என்பவை அவரை இலங்கைத்தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராகவும் மிளிரவைத்திருந்தது.

சுவிற்சலாந்து தேசத்தில் தற்போது வாழ்ந்துவரும் இரா. துரைரத்தினம், தமிழ் ஊடகத்துறைக்கு தொடர்ந்தும் சளைக்காது பணி யாற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்.

தமிழ் ஊடகத்துறையில் ஒரு காத்திரமான தடம் பதித்துள்ள இரா.துரைரத்தினம் அவர்களது இந்நூல் ஊடகத்துறையினருக்கு ஒரு பிரகாசமான ஒளிக்கீற்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**அனந்த் பாலகிட்ணர்,**
**செய்தி ஆசிரியர், சிலோன் ரூடே**
**தலைவர், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்**

# முன்னுரை

நான் யாழ்ப்பாணம் முரசொலி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் பணியாற்றிய போது அந்த பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் திருச்செல்வம்.

அவர் ஒருநாள் கூறிய விடயம் இன்றும் என்னால் மறக்க முடியாமல் இருக்கிறது. இந்த தொழிலை விட்டிட்டு வேறு ஏதாவது அரசாங்க தொழில் ஒன்றை தேட சொல்லி அம்மா நெருக்கி வருகிறா என அவரிடம் நான் சொன்ன போது திருச்செல்வம் ஒன்றை சொன்னார்.

பத்திரிகை தொழிலுக்கு வந்தவனாலையும், விபச்சாரத்தொழிலுக்கு வந்தவளாலையும், தங்களுடைய தொழிலை விட ஏலாது. இரண்டு பேரும் தங்கள் தொழிலில் சலித்துக்கொள்வார்கள். ஒதுங்கிக்கொள்ளப்போகிறோம் என்று சொல்லுவார்கள்.

ஆனால் அவர்களால் அது முடியாது என சொன்னார்.

அவர் சொன்னது போல ஆபத்து மிக்க இந்த தொழிலில் 37வருடங்கள் பயணித்திருக்கிறேன் என்பதை எண்ணும் போது வியப்பாக இருக்கிறது.

1980களின் பின் லேக்கவுஸ் செய்தியாளராக ஊடகத் தொழிலை ஆரம்பித்த போது. மட்டக்களப்பில் மூத்த ஊடகவியலாளர்களான ஜோசப், கதிர்காமத்தம்பி, நாகராசா ஆகியோருடன் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை.

அதன் பின் யாழ்ப்பாணத்தில் நெருக்கடியான சூழ

லில் முரசொலி பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிய காலங்கள்.

1994ஆம் ஆண்டின் பின் மட்டக்களப்பில் விடிவானம், தினக்கதிர் பத்திரிகைகளில் ஆசிரியராக பணியாற்றிய காலங்கள்,

2007ஆம் ஆண்டில் ஐரோப்பாவிலிருந்து ஒளிபரப்பாகிய ஜி.ரி.வி தொலைக்காட்சியின் பிரதம செய்தி ஆசிரியராக பணியை ஏற்று சிங்கப்பூர், லண்டன் போன்ற இடங்களில் பணியாற்றிய காலங்கள் பல அனுபவங்களை கற்றுத்தந்திருக்கிறது.

இந்த காலங்களில் சந்தித்த நெருக்கடிகளும் சோதனைகளும் அதிகம்.

அச்சு ஊடகமான பத்திரிகையில் ஆரம்பித்து இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சி என தொடர்ந்து இன்று ஊடக குடும்பத்தில் பிந்திய வரவான இணையத்தளம் என்ற ஊடக பரப்பிற்குள்ளும் பிரவேசித்திருக்கிறோம்.

ஊடகத்துறையில் என்னுடைய ஆசான்கள் என நான் மதிக்கும் கோபு ஐயா, சிவகுருநாதன், ஊடககற்கை நெறியை மேற்கொண்டபோது எனக்கு ஆசான்களாக இருந்த சிவநேசச்செல்வன், சற்சொருபவதி நாதன், ஆகியோரையும் மறக்க முடியாது.

அனுபவ ரீதியாக ஊடகத்துறையில் கற்றதை விட பாடவிதானத்திற்கு உட்பட்ட வகையில் ஊடக வரைமுறைகளை கற்றுத்தந்தவர்கள் அவர்கள் தான். வெறுமனே

செய்திகளை கட்டுரைகளை எழுதும் அனுபவத்தால் ஊட கத்துறையில் எம்மை வளர்த்துக்கொள்ள முடியாது என் பதை அவர்களிடம் ஊடக கற்கை நெறியை மேற்கொண்ட போது அறிந்து கொண்டேன்.

1990களின் பின்னர் ஐரோப்பாவில் வாழும் தமிழர் களுக்கு ஒலி ஒளி ஊடகங்கள் ஊடாக என்னை அறிமு கப்படுத்திய ரி.ஆர்.ரி. நிறுவனத்தையும் இவ்வேளையில் நினைவு கூருகிறேன்.

2004ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்திற்கு சென்ற வேளை யில் எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிய சுவிஸ் தமிழர் இல்ல பொறுப்பாளர் கிருஷ்ணா அம்பலவாணர் மறக்க முடியாத மனிதர். சுவிஸில் நிலவரம் பத்திரிகையை ஆரம் பிக்க உதவியவர் அவர்தான்.

ஊடக பரப்பில் பயணித்த கடந்த 37 வருடகாலத்தில் சந்தித்த அனுபவங்கள், துன்பங்கள், எழுதாத செய்திகள் என்பன பல. ஊடகவியலாளன் தான் கண்டதை அல்லது கேள்விப்பட்டதை செய்தியாக்கி விடுவான் என பலரும் நினைக்கிறார்கள்.

தனக்கு கிடைத்ததை எல்லாம் தனக்கென பதுக்கி வைத்துக்கொள்ள பழகிக்கொண்ட மனிதன் தான் கேள் விப்பட்ட செய்தியை ஓடி ஓடி பரப்பினான். தனக்கு கிடைத்த செய்திகளை எல்லாம் முந்திக்கொண்டு வெளி யிட வேண்டும் என துடிப்பவன் தான் பத்திரிகையாளன்.

ஆனால் சில வேளைகளில் சில செய்திகளை வெளி யில் சொல்ல முடியாத நிர்ப்பந்தத்தில் வாழ்ந்திருக்கி றோம். பல செய்திகள் பதிப்பில் வராதவையாக இருந்தி

ருக்கின்றன.

கால சூழலை கருத்தில் கொண்டு சில தகவல்களை மறைக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் கூட ஊடகவியலாள னுக்கு ஏற்படுகிறது.

அதிலும் முக்கியமாக தன் சொந்த இனத்தோடு வாழும் ஒரு ஊடகவியலாளன் தன்னுடைய சமூகத்தின் இனத்தின் நன்மை கருதி பல செய்திகளை மறைத்து வாழ நிர்ப்பந் திக்கப்படுகிறான். அது தான் வாழுகின்ற சமூகத்திற்காக தனக்கு தானே போடும் தணிக்கை.

என்னுடைய நண்பர் நிராஜ் டேவிட் அடிக்கடி என் னிடம் வலியுறுத்துகின்ற ஒரு விடயம்.

உங்களிடம் இருக்கின்ற பல தகவல்கள் பதிப்பில் வர வேண்டும். இவை எங்களோடு பேசி காற்றில் கலங்கின்ற விடயங்கள் அல்ல. அது ஒரு வரலாறு. ஊடகத்துறை பயணத்தில் சொல்லப்படாத செய்திகளை வெளிக்கொ ணர்கின்ற போது பல உண்மைகளை வெளிக்கொணர முடியும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

வேதனைகளும், நெருக்கடிகளும் மிக்க ஊடகப்பய ணத்தில் நான் சந்தித்த பல சம்பவங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உருக்கொண்டதே இந்த பதிப்பில் வராத என் மனப்பதிவுகள் என்ற தொடர்..

காலச்சூழல் கருதி சில விடயங்களை மட்டும் இங்கு தர விளைகிறேன்.

இது குறிப்புக்களை வைத்து எழுதப்படும் தொடர் அல்ல. ஆண்டுவாரியான தொடரான சம்பவ கோவை

களும் அல்ல. அங்கொன்றும் இங்கொன்றுமாக என்மன தில் பதிந்திருக்கும் பதிப்பில் வராத விடயங்களை தரவி ளைகிறேன்.

இதில் பல சுவார்சியமான விடயங்கள் இருக்கும், கசப் பான விடயங்கள் இருக்கும், இதை எழுதுவதால் இவன் ஒரு துரோகி என்று கூட எனக்கு பட்டத்தை சிலர் சூட்ட முன்வரலாம்.

இவைகளுக்கு அப்பால் நான் கண்ட, கேட்ட, பார்த்த பல சம்பவங்கள், செய்திகளாக வெளி வராத விடயங்க ளின் தொகுப்பே இந்நூலாகும்.

வாராந்தம் சமகால அரசியல் கட்டுரைகளை எழுதி வருகின்ற போதிலும் அவை இத்தொகுப்பில் இடம்பெ றவில்லை.

எனது நீண்டகால நண்பர் அனந்த் பாலகிட்ணர் (சிலோன் ருடே ஆங்கில தினசரியின் செய்தி ஆசிரியர்) இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும் எனது நன்றிகள்.

பக்க வடிவமைப்பு செய்த ஹரிகரன் சுப்பிரமணியன் (கோபி) அவர்களுக்கும் இந்நூலை சிறப்பாக அச்சிட்டு தந்த யுனைட்டட் மேர்ச்சன்ட்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எழுத்து பிழைகளை திருத்தி நூல் சிறப்பாக வெளிவர உதவியதோடு மட்டக்களப்பில் இந்நூலை வெளியிடுவ தற்கான சகல ஏற்பாடுகளையும் செய்த எனது நீண்டகால நண்பரும், ஓய்வுநிலை பிரதேச கல்விப்பணிப்பாளரு மான அ.சுகுமாரன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

சுவிஸ் ஆர்காவு மாநிலத்தில் வாழும் எனது நண்பர் மார்க்கண்டு ஜெயமோகன் (மோகன் பரன்) அவர்கள் இந் நூலை வெளியிடுவதற்கு பெரிதும் உதவியதோடு ஆலோ சனைகளையும் வழங்கினார். அவருக்கும் எனது நன்றி கள்.

எனது முயற்சிகளுக்கு கடந்த 20வருடங்களுக்கு மேலாக ஊக்கம் தந்து வரும் பிரான்ஸில் உள்ள ரி.ஆர்.ரி. வானொலி ரங்கன் (தர்சன்) மற்றும் சுவிஸ் செம்மாக்கிறேத் தன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய தலைவர் வே.கணே சகுமார், ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

எத்தகைய நெருக்கடிகள் வந்த போதிலும் எனக்கு உறுதுணையாக இருந்து என்னோடு பயணிக்கும் என் துணைவி பார்வதி கந்தையாவுக்கும் எனது நன்றிகள்.

இரா.துரைரத்தினம்.

0041 55 442 27 93

0094 65 222 38 77

0094 76 852 48 14

thurair@hotmail.com

# 01 விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத 2004 மார்ச் 3

*2004 மார்ச் 3ஆம் திகதி புதன்கிழமை இந்த திகதியை பலரும் மறந்திருக்கலாம். ஆனால் விடுதலைப்போராட்ட வர லாற்றில் மறக்க முடியாத நாளாகவே நான் கருதுகிறேன்.*



*மட்டக்களப்பு நகரிலிருந்த தினக்கதிர் தினசரி பத்திரிகை அலு வலகம் விடுதலைப்புலிகளால் தாக்கி எரிக்கப்பட்ட பின்னர், தமிழ்அலை பத்திரிகை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பத்தி ரிகை விடுதலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டிலேயே இருந் தது.*

*தினக்கதிர் தினசரி பத்திரிகை அலுவகத்தின் மீது விடுதலைப் புலிகள் ஏன் தாக்குதல் நடத்தினார்கள் என்ற விபரத்தை பின்னர் பார்ப்போம்.*

*தமிழ்அலை பத்திரிகையின்பிரதம ஆசிரியராக வேணுகோபால் பணியாற்றினார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த விடிவானம் பத்திரிகையில் நான் ஆசிரியராக இருந்த போது வேணுகோபால் அப்பத்திரிகையில் இணைத்துக்கொள்ளப்பட்டார். மிகவும் கீழ்ப்படிவானவர்.*

*சொன்னவேலையை மிகவும் நேர்த்தியாக செய்யக்கூடியவர். ஆனால் பத்திரிகையாளருக்கு வேண்டிய துணிச்சல் இல்லை. விடிவானம்,பத்திரிகையை தொடர்ந்து தினக்கதிர் வாரப் பத்திரிகையிலும் என்னோடு பணியாற்றினார்.*

*தமிழ்அலை பத்திரிகையில் வேணுகோபாலுக்கு வாரத்தில் ஒருநாள் ஓய்வு கொடுப்பதற்காக அந்த நாளில் பணியாற்றுமாறு என்னை வேணுகோபாலும், அப்பத்திரிகையின் முகாமையாளராக இருந்த அரியநேத்திரனும் கேட்டிருந்தனர். அவர்கள் இருவரையும் பத்திரிகைதுறையில் இணைத்துவிட்டவன் என்ற வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது என் கடமை என எண்ணி அதற்கு சம்மதித்தேன்.*

*வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் தமிழ்அலை தினசரியில் பிரதம ஆசிரியருக்கு உரிய பணியை செய்ய வேண்டியது எனது பொறுப்பாக இருந்தது.*

*2004 மார்ச் 3ஆம் திகதி ஒரு புதன்கிழமை.*

*அன்று காலை 9 மணியளவில் மண்முனைதுறை படகுபாதை மூலம் மறுகரையை அடைந்த போது நகருக்கு வருவதற்காக நின்ற முனைக்காட்டைச் சேர்ந்த ஒருவர் சொன்னார். ஊருக்குள்ள கொஞ்ச பிரச்சினை போல கிடக்கு. கல்யாணத்திற்கு சமைச்சபடி எல்லாம் அரைகுறையாக்கிடக்கு, கௌசல்யனை காணயில்லையாம்.*

*கூறியவர் பாதை புறப்படுவதற்கு தயாரானபோது அவசரமாக அதில் ஏறிக்கொண்டார்.*

அன்று விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யனுக்கு கொக்கட்டிச்சோலை கோவிலில் கல்யாணம் நடக்க இருந்தது. நான் தமிழ்அலை அலுவலகத்திற்குள் மோட்டார் சைக்கிளில் சென்று இறங்கிய போது அலுவலக வாசலிலும், வெளியிலும் ஊழியர்கள் கூட்டமாக கதைத்து கொண்டிருந்தார்கள்.

அங்கு பணியாற்றுபவர்களில் கணணிப்பிரிவிற்கு பொறுப்பாக பணியாற்றும் இளைஞர் என்னோடு நட்பாக பழகுபவர். நான் போனதும் அவர் சொன்னார். அண்ணை பிரச்சினை பெரிய அளவில போகுது. கௌசல்யன் வன்னிக்கு போய்விட்டார். கல்யாணம் நின்று போச்சு. இயக்கத்திற்குள்ள பெரிய பிரச்சினை போல கிடக்கு. பெரிய பதட்டமாக இருக்கு. போராளிகள் எல்லாம் குழப்பி போய் இருக்கிறாங்கள் என்றான். இண்டைக்கு பேப்பர் அடிக்கலாமோ தெரியாது என்றான். அது ஒன்றும் இல்லை. பேப்பர் அடிக்கிறதுதான். நீங்கள் வேலையை செய்யுங்கோ என சொல்லிவிட்டு நான் வேலையை ஆரம்பித்தேன்.

கணணிப்பிரிவில் வேலை செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண் போராளிகள். அவர்களும் பதற்றத்துடன் இருப்பதை அவதானித்தேன். இவைகளைப் பற்றி எல்லாம் அலட்டிக்கொள்ளாமல் நீங்கள் வேலையை செய்யுங்கோ என அவர்களுக்கு நான் கூறிய போதிலும், அதன் பின்னர் வந்த ஒவ்வொரு தகவலும் அதிர்ச்சியாக இருந்தது.

முதல்நாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் தளபதிகள் முக்கிய பொறுப்பாளர்களை தரவைக்கு அழைத்த கருணா இனிமேல் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை பிரிவு தனியாகவே இயங்கும். வன்னியோடு நீங்கள் யாரும் தொடர்பு வைக்க கூடாது என உத்தரவிட்டிருந்தார்.

மறுநாள் திருமண ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்த கௌசல்யன்

யாருக்கும் சொல்லாமல் வன்னிக்கு சென்றுவிடுவதென தீர்மானித்தார். அவருடன் தளபதி பிரபாவும் இணைந்து கொண்டார். ஏனையவர்களுக்கு கூறினால் தான் கருணாவிடம் மாட்டுப்பட்டு விடுவேன் என்ற அச்சத்தில் ஏனைய தளபதிகளுக்கு சொல்லாமல் அம்பாறை ஊடாக வன்னிக்கு புறப்பட்டனர்.

அதேநேரம் மட்டக்களப்பு நகர அரசியல்துறை பொறுப்பாளர் சேனாதியும், அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பனையும் கௌல்யன் வாகரைக்கு கல்யாணத்திற்காக இறால் வாங்குவதற்கு அனுப்பியிருந்தார். கௌசல்யன் மட்டக்களப்பு எல்லையை தாண்டியதும் சேனாதிக்கும் குயிலின்பனுக்கும் இறால்வாங்க தேவையில்லை உடனடியாக வன்னிக்கு வாருங்கள் என தகவல் அனுப்பினார்.

புதன்கிழமை நண்பகல் அளவில் படுவான்கரை பகுதியில் இந்த பிரச்சினை தெரிய ஆரம்பித்து விட்டது. கௌசல்யனை காணவில்லை. பிரபாவை காணவில்லை, சேனாதியை குயிலின்பனை காணவில்லை என ஒவ்வொரு கதையாக வந்து கொண்டிருந்தது. மட்டக்களப்பில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலக தொலைபேசிகளும் பேச மறுத்தன. ஏனைய தளபதிகள் வன்னிக்கு செல்லாதவாறு அனைவருக்கும் கருணா தனக்கு கீழ் இருந்த போராளிகளை பாதுகாப்புக்கு அமர்த்தினார்.

கருணாவுடன் இருந்த பல தளபதிகள் கௌசல்யன், ரமேஷ் போன்றவர்களிடம் கோபத்துடன் இருந்ததாக பின்னர் அறிந்தேன். தங்களுக்கு தெரியாமல் ஓடிவிட்டார்களே என. பெரும்பாலானவர்களுக்கு கருணாவிடமிருந்து தப்பி செல்ல முடியாத நிலையிலேயே கருணாவுடன் நிற்க வேண்டிய சூழ்நிலைக் கைதியானார்கள் என்பது பின்னர் தெரியவந்தது.

வன்னிக்கும் படுவான்கரைக்குமான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தன. வன்னியிலிருந்து தமிழ்

செல்வன், தயாமாஸ்ரர் ஆகியோர் தமிழ்அலை அலுவலகத் திற்கே தொடர்பு கொண்டு நிலைமைகளை கேட்டறிந்து கொண் டனர்.

கௌசல்யன், பிரபா ஆகியோர் வந்து சேர்ந்துவிட்டார்கள் என்று வன்னியிலிருந்து தமிழ்செல்வன் சொன்னார். இந்த விடயம் கொழும்பில் உள்ள சில பத்திரிகையாளர்களுக்கும் மட்டக்களப்பிலிருந்த பத்திரிகையாளர்களுக்கும் எட்டிவிட்டது. தமிழ்அலை பத்திரிகை அலுவலகத்தின் தொலைபேசி ஓயாமல் அடித்துக்கொண்டிருந்தது. அவர்களுக்கு பதிலளிப்பதே எனக்கு பெரும் பாடாக இருந்தது.

கொழும்பிலிருந்து சிவராம் தொலைபேசி எடுத்தான். நிலை மையை சொன்னேன். நாளை நான் மட்டக்களப்புக்கு வந் துவிடுவேன் என்றான். மட்டக்களப்பு நகரிலிருந்து நடேசன், தவராசா ஆகியோர் தொலைபேசி எடுத்தார்கள். நடேசனைப் பொறுத்தவரை தான் செய்தியை எப்படியாவது முந்திக்கொ டுத்து விட வேண்டும் என்ற ஆர்வம்.

கொஞ்சம் பொறுங்கள்.. எப்படியும் பிரச்சினையை தீர்த்து விடுவார்கள். இந்த செய்திகள் வெளியில் வந்தால் அந்த முயற்சிகள் எல்லாம் கெட்டுவிடும் என சொன்னேன். எப்படியும் இதை சமாளித்து விடலாம் என்று கிளிநொச்சியிலிருந்து தமிழ் செல்வன் சொன்னார்.

மாலை முனைக்காடு மகாவித்தியாலயத்தில் படுவான்கரை மக்களுக்கு தமது நிலைப்பாட்டை சொல்வதற்காக பொதுமக் களுக்கான ஒரு கூட்டத்தை கூட்டுமாறு ரமேஷிற்கு கருணா உத்தரவிட்டிருந்தார். ரமேஷிற்கு முழுமையாக கருணாவின் நம்பிக்கைக்குரியவர்களே பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டிருந்த னர்.

தனக்கு பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டிருந்த போராளிகளை

முனைக்காடு மகாவித்தியாலயத்தில் கூட்டத்திற்காக பாது காப்பு ஏற்பாடு செய்யுமாறும் சற்று நேரத்தில் தான் கூட்டத்திற்கு வருகிறேன் என கூறிய ரமேஷ் வவுணதீவு ஊடாக யாருக்கும் தெரியாமல் வன்னிக்கு புறப்பட்டார். கூட்டத்திற்கு வந்தவர்கள் ரமேஷ் அங்கு வராததால் காத்திருந்து விட்டு கலைந்து சென்ற னர். இது கூட அங்கு பரபரப்பாக காணப்பட்டது.

மாலை 4.30 மணியளவில் ஏ.எவ்.பி செய்திக்கு கருணா வழங்கிய செவ்வி வெளியானது. கிழக்கில் விடுதலைப்புலி கள் தனது தலைமையில் இனி தனித்தே இயங்குவார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அச்செய்தி தென்னிலங்கைக்கு தேனாக ஒலித்தது. சிங்கள ஊடகங்கள் எல்லாம் அதற்கு அதி முக்கியத்துவம் கொடுத்தன.

மாலை 6 மணியளவில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தமிழ்அலைக்கு வந்தார். முடிவு எடுத்து விட்டோம். அறிக்கை தருவோம். கிழக்கு மாகாண மக்களுக்கு தமிழ்அலைதான் செய்தியை சொல்ல வேணும். நாங்கள் ஏன் பிரிந்து இயங்கப்போகிறோம் என்ற காரணத்தை விளக்கி ஆசி ரிய தலையங்கம் எழுதுங்கள் என சொல்லிவிட்டு போனார். அப்போதுதான் மிகப்பெரிய ஆபத்திற்குள் பொறிக்குள் சிக்கி கொண்டிருக்கிறேன் என உணர்ந்து கொண்டேன்.

கணணிப்பிரிவில் எனக்கு நம்பிக்கையான இருவரை வைத் துக்கொண்டு ஏனையவர்களை போகுமாறு அனுப்பிவிட்டேன்.

கௌசல்யன் வன்னிக்கு சென்றுவிட்டதால் மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளராக கரிகாலன் கருணா வால் அறிவிக்கப்பட்டார்.

இரவு 8மணி இருக்கும் கரிகாலன் கையொப்பம் இட்டு அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். அதையே தலைப்பு செய் தியாக போடவேண்டும் என்றும் ஏனைய ஊடகங்களுக்கு

அனுப்புமாறும் கூறினார்கள். தாங்கள் ஏன் பிரிந்து போகப்போ கிறோம் என்பதற்கான காரணங்களை அதில் கூறியிருந்தார்கள்.

அந்த அறிக்கையை போடுவதா இல்லையா என மனதில் மிகப்பெரிய போராட்டம்.

அப்போது மட்டக்களப்பு அம்பாறை துணைஅரசியல்துறை பொறுப்பாளர் கிரிஷன் வந்தான். அண்ணை அறிக்கை கிடைச் சதுதானே. அதை போடுங்கோ என்றான். இனி வன்னியோட ஒட்டும் இல்லை. உறவும் இல்லை. இனி யாழ்ப்பாணம் வேற, நாங்கள் வேற. மேசையில் அடிச்சு சொன்னான். அம்மான் முடிவெடுத்திட்டார். இனி முடிவில் மாற்றம் இல்லை. ஆவேச மாக கூறினான்.

இரவு 12மணியை தாண்டிய பின்னர் ஆசிரிய தலையங்கத் தையும், தலைப்புச்செய்தியையும் எழுதிக்கொடுத்தேன். கண ணிப்பிரிவில் வேலை செய்தவர் ஓடிவந்து கேட்டார். அண்ணை அறிக்கையை போடயில்லையோ என்று. நான் எதுவுமே பேச வில்லை.

விடுதலைப்புலிகளுக்குள் எந்த பிளவும் இல்லை. தலை வர் பிரபாகரன் தலைமையில் செயற்படுவதாக உறுதி என்று தலைப்புச்செய்தியை போட்டிருந்தேன். ஆசிரிய தலை யங்கமும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தியே எழுதியிருந்தேன்.

ஒரு பத்திரிகை ஆசிரியராக இருந்து கொண்டு நான் செய் தது தவறு என்றே என் மனச்சாட்சி கூறியது. விடுதலைப்புலி கள் அமைப்பில் ஏற்பட்ட பிளவை மக்களுக்கு சொல்லியிருக்க வேண்டும். கருணா தரப்பு வெளியிட்ட அறிக்கையை வெளி யிட்டிருக்க வேண்டும். இன்றும் அப்படித்தான் நினைக்கிறேன். உண்மையை மறைப்பது ஊடக தர்மமும் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கும் சராசரி மனிதனாக சிந்தித்

தால் நான் செய்தது சரி என்றே எனக்கு பட்டது. எப்படியாவது ஒரிரு தினங்களுக்குள் இப்பிரச்சினையை விடுதலைப்புலிகளின் தலைமை சமாளித்து விடும் என நம்பினேன்.

ஆனால் அந்த நம்பிக்கைகள் எல்லாம் தவிடு பொடியானது.

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வெளிவரும் தமிழ்அலை நாளை என்ன செய்தியை சொல்லப்போகிறது என கிழக்கு மாகாண மக்கள் மட்டுமன்றி வெளிஉலகமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. பிளவு என்று வெளிப்படையாக சொல்லிவிட்டால் இணக்கப்பாட்டு முயற்சி கள் எல்லாமே சிதைந்து விடுமே என எண்ணினேன்.

அதிகாலை 4.30மணிக்கு பத்திரிகை அச்சடித்து விநியோகத் திற்கு கொண்டு செல்ல தயாரான போது நான் மட்டக்களப்பு நகருக்கு புறப்பட்டேன். வழமையாக காலை 6மணிக்கு புறப் படும் நான் அன்று அதிகாலை 4.30மணிக்கே புறப்பட்டுவிட் டேன். அன்று வழமையை விட அதிக பத்திரிகையும் அடிக்கப் பட்டது.

காலை 6மணிக்கு பத்திரிகை கடைகளுக்கு சென்ற போது தான் படுவான்கரையில் இருந்த விடுதலைப்புலிகளின் முக்கி யஸ்தர்கள் கோபம் அடைந்தார்கள். வியாழக்கிழமை காலை யில் தமிழ்அலையில் வெளிவந்த தலைப்புச்செய்தியை மேற்கோள் காட்டி தமிழ்நெற் விடுதலைப்புலிகளுக்குள் பிளவு இல்லை என செய்தி வெளியிட்டது.

வியாழக்கிழமை காலை 10மணியிருக்கும் சிவராம் தொலை பேசியில் தொடர்பு கொண்டான். நான் தமிழ்அலையில நிற்கி றேன் என்றான். ஏன் அங்கு நிக்கிறாய் கரிகாலன் ஆட்கள் கொதிப்பில் நிற்கிறார்கள் என்றேன். அது பிரச்சினை இல்லை. கருணா அம்மானை சந்திக்க போகிறேன் என்றான்.

வியாழக்கிழமை இரவு சிவராம் கொக்கட்டிச்சோலையில

ருந்து மட்டக்களப்பு நகருக்கு திரும்பியிருந்தான்.

வெள்ளிக்கிழமை காலையில் சிவராமை சந்தித்த போது நான் கருணாவை சந்திக்கவில்லை என்றான். பின்னர் வீரகேசரியில் கருணாவுக்கு எழுதிய கடிதத்திலும் கருணாவை தான் சந்திக்க முயற்சித்ததாகவும், ஆனால் கருணா தன்னை சந்திக்கவில்லை என்றும் எழுதியிருந்தான்.

ஆனால் விசுவும், கரிகாலனும் சிவராமை கருணாவிடம் அழைத்து சென்றதாக சிவராமுக்கு நெருக்கமான ஒருவர் பின்னர் சொன்னார். அதேபோல இரண்டாம் நாள் வியாழக்கிழமை மாலை கருணா வெளியிட்ட அறிக்கையை தயாரித்தில் சிவராமுக்கு பங்கு இருப்பதாகவும், கொழும்பில் உள்ள ஊடகவியலாளர் ஒருவர் சொன்னபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்ததற்கு சிவராமுக்கு பெரும் பங்கு உண்டு என சொல்பவர்கள் பலர் உண்டு. இந்த குற்றச்சாட்டுகள் உண்மையா என்ற கேள்விக்கான விடையை இன்றும் நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

சிவராம் மட்டக்களப்பு மக்களின் அறியாமையை, கண்டு கோபப்பட்டான். ஆளுமை மிக்க சமுகமாக வரவேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு மடையனுகளே என உரிமையோடு திட்டினான்.

ஆனால் கருணா தான் பிரிந்து போகப்போகிறேன் என அறிவித்த பின் சிவராம் கருணாவை சந்தித்திருந்தால் ஏன் அதை எங்களுக்கு மறைக்க வேணும்? இந்த கேள்விக்கு எனக்கு இதுவரை விடைகிடைக்கவில்லை.

வியாழக்கிழமை காலையில் வேணுகோபால் உட்பட தமிழ் அலை ஊழியர்கள் வேலைக்கு சென்ற போது கருணாகுழுவின் கட்டுப்பாட்டில் அந்த அலுவலகம் முழுமையாக கொண்டு வரப்பட்டிருந்தது. கருணாகுழு மட்டக்களப்பை விட்டு தப்பி செல்

லும் வரை 41நாட்களும் வேணுகோபால் உட்பட தமிழ்அலை பத்திரிகை ஊழியர்கள் சிறைவைக்கப்பட்டே பத்திரிகை அடிக் கப்பட்டது.

பத்திரிகை ஆசிரியர்களை சிறைவைத்து பத்திரிகை அடித்த வரலாறு 1989ஆம் ஆண்டு இந்திய இராணுவ காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினாலும் நிகழ்த்தப்பட்டது. விடுதலை என்ற பத்திரிகையை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் 1989 இறுதிகாலத் தில் யாழ்ப்பாணத்தில் அடித்தார்கள். முரசொலி பத்திரிகையில் பணியாற்றிய பத்திரிகையாளர்களை கடத்தி சென்று சிறை வைத்தே அவர்களை கொண்டு அப்பத்திரிகை அடிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் முரசொலி ஆசிரிய பீடத் தில் பணியாற்றினேன்.

வெள்ளிக்கிழமை தமிழ்அலை கருணாவின் அறிக்கையை தலைப்பு செய்தியாக தாங்கி வெளிவந்தது. கருணாவின் பிளவு களேபரம் நடந்து கொண்டிருந்த அதேவேளை 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வேட்புமனுத்தாக்கல் களேபரமும் நடந்து கொண்டிருந்தது.

வெள்ளிமாலை மட்டக்களப்பு காந்திசிலை மைதானத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடை பெற்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ராஜன் சத்தியமூர்த்தி, இராசநாயகம் போன்றவர்கள் கருணாவின் தலை மையில் நாம் செயற்படுவோம் என அக்கூட்டத்தில் பேசினர். யோசப் அண்ணன் பேசும் போது தலைவர் பிரபாகரன் தலைமை யில் கருணாவின் வழிகாட்டலில் செயற்படுவோம் என்றார்.

அக்கூட்டத்தில் பிளவின் தாக்கம் வெளிப்பட்டது. மக்களும் மிகவும் குழம்பிப்போய்தான் இருந்தார்கள். சிலர் கருணாவின் முடிவு சரி என்றார்கள்.

****

# 02 புலம்பெயர் தமிழர்கள் சிலரின் பிற்போக்கு தனங்கள்

கருணா தரப்பிடமிருந்து முதலாவது அறிக்கை கரிகாலன் கையொப்பம் இட்டு மார்ச் 3ஆம் திகதி இரவு புதன்கிழமை வெளியிட்டிருந்தார். இரண்டாவது அறிக்கை 04ஆம் திகதி வியாழக்கிழமை இரவு கருணா கையொப்பம் இட்டு வெளியிட்டிருந்தார்.



முதலாவது அறிக்கையில் தாங்கள் ஏன் தனியாக இயங்கப் போகிறோம் என்பதை தெரிவித்திருந்தார்கள். கிழக்கில் உள்ள 2ஆயிரம் போராளிகளை தலைவர் வன்னிக்கு தருமாறு கேட்டிருக்கிறார். மட்டக்களப்பு போராளிகளை வன்னிக்கு அனுப்ப முடியாது. கிழக்கை தாம் காப்பாற்ற வேண்டும் என கரிகாலன் கையொப்பம் இட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

4ஆம் திகதி இரவு கருணா கையொப்பம் இட்டு வெளியிட்ட அறிக்கையில் அது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கே எழுதப்பட்டிருந்தது. கிழக்கில் கருணா தலைமையில் நேரடியாக பிரபாகரன் கீழ் இயங்குவது என்று தீர்மானித்திருப்ப

தாகவும், அது தவிர நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி, புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான், காவல்துறை பொறுப்பாளர் நடேசன் ஆகியோரை அவர்களின் பொறுப்புகளிலிருந்து வெளி யேற்ற வேண்டும் என்றும் நிபந்தனை விதித்திருந்தார்.

இந்த இரண்டு அறிக்கைகளிலுமே முரண்பாடுகள் காணப்பட் டன. இவர்களின் பிளவுக்கு இரண்டு அறிக்கையில் கூறப்பட்ட வற்றில் எது காரணமாக இருக்கும் என மட்டக்களப்பில் உள்ள பெரும்பாலான மக்களிடம் குழப்பம் நிலவியது.

அதற்கு அப்பால் இந்த பிளவுகள் குழப்பங்களுக்கு அவர்கள் வெளியிட்ட இரண்டு அறிக்கையிலும் குறிப்பிட்ட விடயங்கள் காரணமல்ல. உண்மையான காரணம் வேறு என்பதை பொது மக்கள் அறிந்திருக்கவில்லை.

மார்ச் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நகர் ஒரு வித பதற்றமாக காணப்பட்டது.

ஒவ்வொருவருக்கும் தன்னுடைய பிரதேசம் மீதான பற்றும் அதனை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற வாதமும் இருப் பது எந்த வகையிலும் தவறில்லை. தன்னுடைய இனத்திற்காக பேச வேண்டியது ஒவ்வொருக்கும் எவ்வளவு கடமை இருக்கி றதோ அது போல தன்னுடைய பிரதேசத்திற்காக தன்னுடைய தாய் நாட்டிற்காக அதன் விடுதலைக்காக பேசுவதில் அல்லது செயற்படுவதில் தவறில்லை. ஒவ்வொரு மனிதனிடமும் தன் னுடைய பிரதேசம் பற்றிய பற்றும் உறுதியும் இருக்க வேண் டும். அவ்வாறு பிரதேச பற்று இருப்பவனுக்குதான் இனத்தின் மீது பற்று வரும், தன் இனத்தின் விடுதலை மீது ஆர்வம் வரும். தமிழன் என்ற தனித்துவத்திற்காகவும், விடுதலைக்காகவும் செயற்படுபனை இனப்பற்றாளன் என்கிறோம். அது போல தன் னுடைய பிரதேசத்தின் மீது பற்றுறுதியோடு செயற்படுவதும் தவறில்லை. எனவே பிரதேசவாதம் தவறே இல்லை. பிரதேச வாதம் என்பது அபத்தமான விடயம் அல்ல. அது போற்றுதற்கு

ரியது. ஒவ்வொருவரிடமும் பிரதேசவாதம் இருக்க வேண்டும்.

ஆனால் கருணா பேசியது பிரதேசவாதம் அல்ல.இதை அறியாத சிலர் கருணா பிரதேசவாதம் பேசி விட்டான் என தலையில் அடித்துக்கொள்கிறார்கள். மட்டக்களப்பில் நல்லையா பிரதேசவாதம் பேசினார், தேவநாயகம் பிரதேசவாதம் பேசினார், இராசன் செல்வநாயகம் பிரதேசவாதம் பேசினார் என சிலர் சொல்வதுண்டு. இவர்கள் யாரும் பிரதேசவாதம் பேசவில்லை. இவர்கள் பேசியது சந்தர்ப்பவாதம்,

மட்டக்களப்பில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிராக அல்லது தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் யாழ்ப்பாண தலைவர்களுக்கு எதிராக மிகக்கடுமையாக பிரசாரம் செய்பவர்கள் மட்டக்களப்பு நகரை சேர்ந்தவர்கள். முக்கியமாக புளியந்தீவை சேர்ந்தவர்கள். வேடிக்கை என்ன என்றால் புளியந்தீவில் உள்ள 50 வீதமானவர்கள் மட்டக்களப்பை பூர்வீகமாக கொண்டவர்கள் அல்ல. மட்டக்களப்பு நகர் என கூறப்படும் புளியந்தீவில் 25 வீதமானவர்கள் தான் பூர்வீகமாக மட்டக்களப்பை சேர்ந்தவர்கள். அவர்கள் ஒருபோதும் பிரிவினைவாத அல்லது சந்தர்ப்பவாத சகதிக்குள் சிக்கியது கிடையாது.

ஆங்கிலேயர்,போர்த்துகீசர் ஆட்சிக்காலத்தில் ஆட்சியில் இருந்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தொடர்பாடல்களுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஆங்கிலம் தெரிந்தவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் புளியந்தீவில் குடியேற்றப்பட்டார்கள். அவர்களின் பரம்பரையினரே இன்று புளியந்தீவில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆகும்.

இந்த பிரிவினைவாதம், சந்தர்ப்பவாதம் மட்டக்களப்பில் யாரிடம் இருக்கிறது? மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணிகளை வெளியேற்ற வேண்டும், வன்னியிலிருந்து யாழ்ப்பாணிகளை

வெளியேற்ற வேண்டும் என மிகக்கடுமையாக பிரசாரம் செய் பவர்கள் யார் என்றால் உங்களில் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். யாழ்ப்பாணத்தவர்கள் மீது மட்டக்களப்பின் பூர்வீக குடிமக்களுக்கு கோவம் இருந்தது என்பதையும் நாங்கள் மறுப் பதற்கில்லை. அதில் நியாயமும் இருந்தது.

இது பல தமிழர்களுக்கு புரியாமல் போய்விட்டது. முக்கிய மாக புலம் பெயர் தமிழர்கள் சிலருக்கு இது புரிவதில்லை.

மட்டக்களப்பில் ஒரு புறம் பொதுத்தேர்தல் வேட்புமனுத் தாக்கல், மறுபுறம் கருணா தான் தனியாக பிரிந்து செயற்பட போவதாக வெளியிட்ட அறிவிப்பு, இன்னொரு புறம் மட்டக் களப்பு அம்பாறை மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாண தமிழர் கள் வெளியேற வேண்டும் என்ற அறிவிப்பு. இவ்வாறு மட்டக் களப்பில் அச்ச உணர்வு கலந்த அமைதி காணப்பட்டது.

நான்கு தளங்களில் இந்த பிளவின் பூகம்பம் வெடித்தது.

முதலாவது இந்த அறிவிப்பை மட்டக்களப்பில் ஒரு அதிர்ச்சி தகவலாகத்தான் பலர் பார்த்தார்கள். மட்டக்களப்பில் இன் னொரு தரப்பினர் கருணா சொல்வதில் உண்மை இருக்குமோ என பேசிக்கொண்டார்கள்.

இன்னொரு தளம் வன்னி, அங்கு போராளிகள் மத்தியில், மக் கள் மத்தியில் ஒரு கவலை காணப்பட்டது. ஆனாலும் தலைவர் அதை பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை பெரும்பாலான தமி ழர்களிடம் காணப்பட்டது. வன்னியில் கிழக்கு மாகாண மக்க ளுக்கு எதிரான உணர்வுகளோ கோபமோ காணப்படவில்லை.

மூன்றாவது தளம் புலம்பெயர் தமிழர்கள் வாழ்ந்த ஐரோப்பா மற்றும் கனடா போன்ற நாடுகள். இந்த நாடுகளில் தான் ஒரு பிற்போக்குத்தனமான போக்கு காணப்பட்டது. கருணா பிரிந்து போகப்போகிறேன் என அறிவித்த செய்தி வெளிவந்த உடன் கிழக்கு மாகாண தமிழர்களை எதிரியாக துரோகிகளாக

பார்க்கும் போக்கு பெரும்பாலான யாழ்ப்பாண தமிழர்களிடம் காணப்பட்டது. குறிப்பாக மட்டக்களப்பு மக்களை துரோகிகள் என ஒதுக்கி வைக்கும் போக்கு காணப்பட்டது. இதற்கு ஐரோப் பாவிலிருந்து ஒலிபரப்பான வானொலிகளும் வழி வகுத்தன. தொழிற்சாலைகளில், உணவு விடுதிகளில் என வேலைத்த லங்களில் பல வருடங்களாக ஒன்றாக பழகியவர்களை கூட அவர்கள் மட்டக்களப்பு என்ற காரணத்தால் நீங்கள் துரோகி கள் கருணாவின் ஆட்கள் என தூற்றி ஒதுக்கும் போக்குகளும் காணப்பட்டன. இதை நான் இலங்கையில் இருந்த போது மட்டக்களப்பை சேர்ந்த பலர் என்னிடம் தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தார்கள்.

மிக அன்னியோன்யமாக பழகியவர்களை கூட மட்டக்களப்பு என்ற காரணத்தால் அவர்களை தங்கள் கொண்டாட்டங்களிலி ருந்து ஒதுக்கி வைத்த பல சம்பவங்களும் இடம்பெற்றதை நான் அறிவேன். நான் ஐரோப்பாவிற்கு வந்ததன் பின்னர் இது போன்ற பல சம்பவங்களை மட்டக்களப்பு மக்கள் என்னிடம் கூறியிருக் கிறார்கள். இதை கேட்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் என்ற வகையில் வெட்கமும் வேதனையும் அடைந்திருக்கிறேன்.

நான்காவது தளம் தென்னிலங்கை சிங்களவர்கள். அதன் பிரதிபலிப்பை கருணாவின் பிளவின் பின்னர் ஏப்ரல் முதல்வாரத் தில் வென்னப்புவவில் தமிழ் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் உணரமுடிந்தது. அவர்கள் மத்தியில் ஒரு வெற்றிகளிப்பு காணப்பட்டது. போரில் தமிழர்களை வெல்ல முடியாது என திகைத்து நின்ற சிங்கள சமுகத்திற்கு இச்செய்தி மிக இனிப்பாக காணப்பட்டதை உணர முடிந்தது. அந்த கருத்த ரங்கில் மட்டக்களப்பிலிருந்து சென்ற தமிழ் பத்திரிகையாளர்க ளுக்கும் அனுராதபுரம், கண்டி போன்ற இடங்களிலிருந்து வந்த சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் இடையில் கருத்து மோதல் கள் பலமாக இருந்தது. மட்டக்களப்பிலிருந்து சென்ற தமிழ் ஊட

கவியலாளர்கள் கருணாவின் பிளவு முறியடிக்கப்படும் என செ ரன்னார்கள். சிங்கள ஊடகவியலாளர்கள் கருணாவை ஒரு ஹீரோவாக சித்தரித்து கொண்டிருந்தார்கள். முஸ்லீம் ஊடகவி யலாளர்கள் எந்த பிரதிபலிப்பும் இன்றி இருந்தார்கள்.

இவ்வாறு நான்கு தளங்கள் வெவ்வேறு பிரதிபலிப்பை கொண்டிருக்க இன்னொரு தளம் எந்த பிரதிபலிப்போ கரிச னையோ அக்கறையோ அற்றிருந்தது. அது வேறுயாருமல்ல. யாழ். குடாநாட்டு மக்கள்தான். அவர்கள் இந்த கருணாவின் பிளவு பற்றி பெரிதாக பேசவும் இல்லை. குழம்பவும் இல்லை. புலம்பெயர் தமிழர்கள் துரோகி பட்டம் சூட்டியது போல மட்டக் களப்பு தமிழர்கள் மீது எந்த பிரதிபலிப்பையும் காட்டவில்லை. பொதுவாக யாழ்ப்பாண இரண்டாம்தர வர்க்கம் என அழைக்கப் படும் தரப்பு தமிழ் மக்களின் விடுதலை, போராட்டம், என்பதில் அக்கறை அற்று இருந்தது போல இந்த விடயத்திலும் அதை ஒரு செய்தியாக கேள்வி பட்டதோடு பிரதிபலிப்பு எதையும் காட் டவில்லை. ஏனெனில் கருணா பிளவின் பின்னர் பல தடவை கள் யாழ்ப்பாணத்திற்கு சென்று வந்திருக்கிறேன். இந்த பிளவு பற்றி வன்னியில் இருந்தவர்கள் கவலைப்பட்டார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்கள் அதை ஒரு செய்தியாக வாசி த்து விட்டு ஏதோ நடக்கட்டும் என இருந்தார்கள்.

மட்டக்களப்பு நகரில் மார்ச் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை காந்திசிலை சதுக்கத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது. வேட்பாளர் அறிமு கக் கூட்டம் முடிந்ததும் வெள்ளி இரவு வான் ஒன்றில் பத்திரி கையாளர்களாகிய நாம் கிளிநொச்சிக்கு புறப்பட்டோம். நாங் கள் புறப்பட்ட வெள்ளிஇரவுதான் யாழ்ப்பாண வர்த்தகர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆகியோரை மட்டக்களப் பிலிருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது

யாழ்ப்பாண வர்த்தகர்களில் பலர் மட்டக்களப்பில் பிறந்து

*வளர்ந்தவர்கள். அவர்களில் பலர் பல தலைமுறைகளாக மட்டக்களப்பில் வாழ்ந்தவர்கள். அவர்களின் பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணமே தெரியாமல் இருந்தது.*

*தமிழர்களாலேயே தமிழர்கள் வெளியேற்றப்படும் அவலம் நடந்து கொண்டிருந்தது.*

*கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் சனிக்கிழமை பத்திரிகையாளர் மகாநாடு கூட்டப்பட்டிருந்தது. அங்கு சென்ற போது அங்கே மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு ஓடிவிட்டார் என சொல்லப்பட்ட கௌல்யன், சேனாதி, பிரபா, ரமேஷ், என பலரை கண்டோம்.*

*இதற்கான ஏற்பாடுகளில் இளந்திரையன், (மார்ஷல்) ஈடுபட்டிருந்தார். அப்போதுதான் ஒரு போராளியை காட்டி இளந்திரையன் மட்டக்களப்பிலிருந்து சென்ற பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அண்ணை இவன்தான் சர்ச்சைக்குரிய கம்சன் என இளந்திரையன் சொன்னான்.*

*விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா விலக்கப்பட்டுள்ளதாக அந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் அறிவித்தார். தமிழ்செல்வனுடன் அந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் ரமேஷ், கௌசல்யன், ஜெயார்த்தன், பிரபா, என மட்டக்களப்பு தளபதிகளே இருந்தனர்.*

*பத்திரிகையாளர் மகாநாடு முடிந்ததும் மட்டக்களப்பு தளபதிகள் இளைந்திரையன் உட்பட மட்டக்களப்பு பத்திரிகையாளர்களிடம் நாங்கள் மட்டக்களப்புக்கு வருவோம் என உறுதியாக கூறினர். அன்று இரவு கிளிநொச்சியில் தங்கிவிட்டு காலையில் நாங்கள் புறப்பட தயாரானோம். அப்போது தயா மாஸ்ரரின் அலுவலகத்திற்கு வந்த தமிழ்செல்வன் கொஞ்சம் பொறுங்கோ, முக்கியமான ஒரு ஆள் வாறார். அவரை சந்தித்து விட்டு போங்கோ*

என தமிழ்செல்வன் சொல்லிவிட்டு வழமையான அவரின் சிரிப்பு வெளிப்பட்டது.

சற்றுநேரத்தில் அங்கு மட்டக்களப்பிலிருந்து கரிகாலன் வந்து சேர்ந்திருந்தார். கிளிநொச்சிக்கு கரிகாலன் வந்த உடன் மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் இருந்த இடத்திற்கு கரிகாலனை அழைத்து வந்தார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு முதல் மட்டக்களப்பில் இருந்த கரிகாலனை எனது மனம் எண்ணிப்பார்த்தது.

நான் எந்த சலனத்தையும் வெளிப்படுத்தவில்லை. கரிகாலனை அதற்கு பின்னரும் ஒருதடவை நான் சுவிட்சர்லாந்தில் சந்தித்திருக்கிறேன். அப்போதும் நான் அதுபற்றி எதுவும் பேசவில்லை. கருணாவிடம் இருக்கும் போது அவர்கள் சூழ்நிலையின் கைதியாக சில வேளைகளில் செயற்பட்டிருக்கலாம்.

ஞாயிறு பிற்பகல் வவுனியா நகரை சென்றடைந்தோம். வவுனியா நகரில் ஊடகவியலாளர் விவேகராசாவின் வீட்டில் சிறிது நேரம் தங்கி மட்டக்களப்பில் நிலமை எப்படி இருக்கிறது என விசாரித்தோம். தான் நேரடியாக தனது வீட்டிற்கு கொழும்புக்கு செல்வதாக சிவராம் கூறினான். மட்டக்களப்பில் நிலமை மிக மோசமாக இருப்பதாகவே பலரும் சொன்னார்கள். நீங்கள் கிளிநொச்சிக்கு சென்ற விடயம் இங்கு மட்டக்களப்பில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. நீங்கள் இங்கு திரும்பி வருவது ஆபத்து என்று மட்டக்களப்பிலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் சொன்னார்.

சிவராம் இதைவிட பெரிதாக எமக்கு அச்சம் தரும் கதை ஒன்றை சொன்னான். நீங்கள் மட்டக்களப்புக்கு திரும்பி போவது நல்லதாக எனக்கு படவில்லை. என் உள்மனம் நீங்கள் போவது ஆபத்து என்றுதான் சொல்லுகிறது. இப்படித்தான் 1987ல் வாசுதேவா தலைமையில் புளொட் இயக்கத்தினர் கல்குடாவுக்கு போனபோது நீங்கள் போவது அவ்வளவு நல்லதல்ல என்று கூறி

னேன். வாசுதேவாவும் மற்றவர்களும் போனார்கள். அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அப்படி ஒரு உணர்வுதான் எனக்கு இப்ப வருகிறதுஎன சொல்லிவிட்டு சிவராம் கொழும்புக்கு புறப் பட்டு விட்டான்.

மனக்குழப்பம், அச்சம் இருந்த போதிலும் என்ன செய் வது மட்டக்களப்பிற்கு போய்தானே ஆகவேண்டும். நானும் நடேசனும், தவராசாவும், சாரதியும் வானில் மட்டக்களப்புக்கு புறப்பட்டோம்.

வவுனியா மகாவித்தியாலயத்தை அடைந்த போது மட்டக் களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் கல்வி சுற்றுலா வுக்கு வந்து தங்கி நிற்பதை கண்டோம். புனித மிக்கேல் கல் லூரி அதிபர் அருட்சகோதரர் ஜேம்ஸ் அவர்களும் வந்திருந்தார்.

எங்களைக் கண்டதும் மட்டக்களப்புக்கா போகிறீர்கள், கொஞ்சவேலை இருக்கு இல்லை என்றால் உங்களுடன் வந்து விடுவேன் என்றார் அருட்சகோதரர் ஜேம்ஸ். எங்களுக்கு தெய்வம் வந்து காப்பாற்றியது போல இருந்தது அருட்சகோத ரர் ஜேம்ஸின் வார்த்தைகள்.

பரவாயில்லை உங்களின் வேலை முடித்து விட்டு வாருங் கள். நாங்கள் உங்களை எங்கள் வானில் அழைத்து செல்கி றோம் என்றோம்.

அருட்சகோதரருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி, எங்களுக்கு பல தடவை நன்றி சொன்னார். சுமார் மூன்று மணிநேரம் காத்தி ருந்து அருட்சகோதரர் ஜேம்ஸையும் அழைத்து கொண்டு மட்டக் களப்புக்கு புறப்பட்டோம். பிறதர் நீங்கள் முன் சீற்றிலையே இருங்கோ என முன்னுக்கு இருத்தி விட்டு எங்களுக்கு நித்திரை வருகிறது. நாங்கள் பின் சீற்றில் படுக்கப்போகிறோம் என சொல்லிவிட்டு சாறனையும் உடுத்திக்கொண்டு போர்த்திக் கொண்டு படுத்துவிட்டோம். ஆனால் எங்களுக்கு நித்திரையே

வரவில்லை. கிரான் சந்தியில் நின்று கருணாவின் ஆட்கள் வாகனங்களை சோதிக்கிறார்கள் என்றும் சொல்லிவிட்டார்கள், கிரானில் எங்கள் வாகனத்தை மறித்துசோதித்தால் கற்பனையே பண்ண முடியாத அச்சமடைந்திருந்தோம்.

பொலனறுவையை தாண்டியதும் அருட்சகோதரர் ஜேம் ஸிற்கு சொன்னோம். பிறதர் கிரானிலை வாகனத்தை நிறுத்தி பார்க்கிறார்களாம். அப்படி நிற்பாட்டினால் பின் சீற்றிலை எங் கட பெடியள்தான் படுக்கிறாங்கள் என்று சொல்லுங்கோ, ஊட கவியலாளர்கள் என்றதை சொல்லிப்போடாதையுங்கோ என சொன்னோம்.

அப்போதுதான் அவர் ஆபத்தான வான் ஒன்றில் ஏறிவிட் டேன் என சிந்தித்திருப்பார். கிரானில் அவர்கள் ஆயுதங்களுடன் நின்றார்கள். அருட்சகோதரர் வெள்ளை உடுப்புடன் இருந்ததை கண்டதும் பாதரா சரி சரி போங்கோ என்றான் ஒருவன். அந்த இடத்தை விட்டு வான் கடந்து வந்து விட்டது. அதன் பின்னர் தான் அருட்சகோதரர் ஜேம்ஸிற்கு சொன்னோம். பிறதர் நீங்கள் இல்லை என்றால் எங்களின் கதை இன்று முடிந்திருக்கும் என சொன்ன போதுதான் இவர்கள் ஏன் பல மணிநேரம் காத்தி ருந்திருந்து என்னை அழைத்து வந்தார்கள் என்பது அவருக்கு புரிந்திருக்கும். அன்று நாங்கள் தான் வாகனத்தில் வருகிறோம் என தெரிந்திருந்தால் அருட்சகோதரர் ஜேம்சும் எங்களுடன் மேலே அனுப்பபட்டிருப்பார். எங்களை காப்பாற்றுவதற்காக அவரை சிக்கலில் மாட்டவைத்து விட்டோமோ என்று பின்னர் குற்றஉணர்வோடு எண்ணி நான் கவலைப்பட்டதுண்டு.

*****

# 03 மட்டக்களப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட யாழ்.தமிழர்கள்

சிங்களவர்கள் தமிழர்களை அடித்து, விரட்டி, கொலை செய்து வெளியேற்றிய பல சம்பவங்களை நாம் அறிந்திருக் கிறோம், தமிழர்கள் முஸ்லீம்களை வெளியேற்றிய சம்பவங் களும், முஸ்லீம்கள் தமிழர்களை வெளியேற்றிய சம்பவங்க ளையும் நாம் கண்டிருக்கிறோம்.



ஆனால் தமிழர்கள் தமிழர்களை அடித்து விரட்டி கொலை செய்து அனுப்பிய சம்பவங்களை உங்களில் பலர் அறிந்திருக்க மாட்டீர்கள். மட்டக்களப்பில்தான் அந்த அவலம் நடைபெற்றது.

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்தவர்கள் வெளியேற வேண்டும் என்ற அறிவிப்பால் யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல மட்டக்களப்பு மக்களும்தான் அதிர்ந்து போனார்கள்.

மட்டக்களப்பில் உள்ள யாழ்ப்பாண வர்த்தகர்கள் 24மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும், அவர்கள் தங்களது எந்த உடமைகளையும் எடுக்காது வெளியேறிவிட வேண்டும் என ஆயுதமுனையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. வைத்தியர்கள், பொறியியலாளர்கள், உட்பட அரச உத்தியோகத்தர்கள் என பல யாழ்ப்பாணத்தவர்கள் மட்டக்களப்பில் இருந்தார்கள். அது தவிர திருமண உறவுகளுடன் காலங்காலமாக இருந்தவர்கள் பலர். இவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**யாழ்ப்பாணத்தமிழனை அடித்து விரட்டிய தேவநாயகம்**

1977ஆம் ஆண்டு கல்குடா தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட கே.டபிள்யூ.தேவநாயகத்தின் அடியாட்களால் செங்கலடியில் இருந்த யாழ்ப்பாண தமிழர்களின் கடைகளை அடித்து உடைக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட சம்பந்தமூர்த்திக்கு வாக்களித்து விட்டார்கள் என்பதற்காக தேவநாயகத்தினால் செங்கலடியில் வர்த்தக நிலையங்களை வைத்திருந்த யாழ்ப்பாணத்தவர்கள் அடித்து விரட்டப்பட்டு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

கடைவைத்திருந்த யாழ்ப்பாண தமிழர்களை அடித்து விரட்டிய தேவநாயகத்தால் அவரின் வீட்டில் இருந்த யாழ்ப்பாண தமிழிச்சியான தனது மனைவியை அடித்து விரட்ட முடியாமல் போய்விட்டது.

**வெறிச்சோடிப்போன மட்டக்களப்பு**

24மணி நேரத்தில் மட்டக்களப்பை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற கருணா குழுவின் அறிவிப்பால் மட்டக்களப்பு நகரமே ஸ்தம்பித்து போனது. வாழைச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு நகர், களுவாஞ்சிக்குடி, கல்முனை என பல

நகரங்களில் பலசரக்கு கடைகளையும், கொழும்பிலிருந்து பொருட்களை தருவித்து விநியோகிக்கும் பிரதான முகவர்களாகவும் யாழ்ப்பாண வர்த்தகர்களே இருந்தனர்.

மட்டக்களப்பு நகரில் இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், முருகன் ஸ்ரோர்ஸ், முருகேசு ஸ்ரோர்ஸ், குகன் ஸ்ரோர்ஸ், உட்பட பலசரக்கு கடைகள் பலவற்றின் உரிமையாளர்கள் யாழ்ப்பாண தமிழர்கள். அது போல சன்சையின், ஆஞ்சநேயர் மரக்காலை, ஆடைத்தொழிற்சாலை, சண்முகா ஏஜன்சி என பல வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தவர்கள்தான். சிலரின் பெற்றோர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில் பலர் மட்டக்களப்பில் திருமணம் செய்திருந்தனர். வீடுவாசல், சொத்து அனைத்தும் மட்டக்களப்பில்தான் இருந்தது. இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு 24மணி நேரத்தில் வெளியேறி விட வேண்டும் என துப்பாக்கி முனையில் வந்த உத்தரவால் காலம் காலமாக வாழ்ந்த மட்டக்களப்பு மண்ணை விட்டு, தங்கள் வீடுவாசல்கள், சொத்துக்களை விட்டு, கண்ணீருடன் புறப்பட்டார்கள்.

இந்த உத்தரவு வந்ததும் அப்போது மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவராக இருந்த ராஜன் சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு முன்னால் மட்டக்களப்பில் இருந்த யாழ்ப்பாண வர்த்தகர்கள் கூடினர்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அம்மானின் கண்டிப்பான உத்தரவு. உயிரை காப்பாற்ற வேணுமாக இருந்தால் உடனடியாக மட்டக்களப்பை விட்டு வெளியேறுங்கள் என ராஜன் சத்தியமூர்த்தி சொன்ன போது வேறு வழி இன்றி தமது சொத்து, வாழ்விடங்கள், உறவுகள் அனைத்தையும் விட்டு வெளியேறினார்கள்.

சிலர் கொழும்புக்கு சென்றார்கள், சிலர் வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் சென்றார்கள்.

மட்டக்களப்பில் இருந்த வர்த்தக நிலையங்களில் பெரும் பாலானவை யாழ்ப்பாண தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சொந்தமாக இருந்தது. ஒரு சில மட்டக்களப்பு தமிழர்கள் தான் பலசரக்கு கடைகளை வைத்திருந்தனர். இதனால் ஹர்த்தால் வேளையில் கடைகள் பூட்டப்பட்டிருந்தது போல நகரில் பெரும் பாலான பலசரக்கு கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

கொழும்புக்கு சென்ற சில தமிழ் வர்த்தகர்கள் அங்கிருந்த படியே தங்கள் வர்த்தக நிலையங்கள் சிலவற்றை விற்றுவிடு வதென முடிவு செய்தார்கள். இந்த கடைகள் அனைத்தும் முஸ் லீம் வர்த்தகர்களால் வாங்கப்பட்டது.

யாழ்ப்பாண வர்த்தகர்களை வெளியேற்றியதன் பலன் மட்டக்களப்பு நகரில் உள்ள வர்த்தகம் முஸ்லீம் வர்த்தகர்க ளிடம் சென்றது. இந்த விடயத்தில் முஸ்லீம் வர்த்தகர்களில் எந்த தவறும் இல்லை. சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாக பயன்ப டுத்தி கொண்டார்கள். இது கிழக்கை காப்பாற்றப்போகிறோம் என புறப்பட்டவர்களின் தவறு.

மட்டக்களப்பு தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அவர்கள் வேளாண்மை செய்கையில் நாட்டம் கொண்டிருந்தார்களே ஒழிய வர்த்தக நடவடிக்கைகளில் பெருமளவு நாட்டம் கொண் டிருக்கவில்லை. இப்பொழுது சற்று மாறியிருக்கிறது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்த யாழ்ப் பாண வைத்தியர்களும் வெளியேறினார்கள். இதனால் வைத்தியசாலை சேவைகளும் பாதிக்கப்பட்டது. நோயாளர் கள் பாதிக்கப்பட்டார்கள். இதனால் பலத்த எதிர்ப்பு கிளம்பிய தையடுத்து வைத்தியர்கள் மற்றும் அத்தியாவசிய சேவையில் உள்ளவர்கள் திரும்பி வந்து மட்டக்களப்பில் பணியாற்றுவ

தற்கு அனுமதிக்கப்பட்டார்கள். சில யாழ்ப்பாண வைத்தியர்கள் திரும்பிவரவில்லை.

யாழ்ப்பாண தமிழர்களுக்கு எதிராக மட்டக்களப்பில் நடைபெற்ற அநியாயங்கள், கொடுமைகளை கண்டு மட்டக்களப்பில் உள்ள பொதுமக்கள் எதுவும் பேசமுடியாதவர்களாகவே இருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டபோது எவ்வாறு யாழ்ப்பாண தமிழ் பொதுமக்கள் எதுவும் பேசமுடியாதவாறு மௌனமாக இருக்க வேண்டிய சூழல் இருந்ததோ அதே போன்றுதான் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாண தமிழர்கள் வெளியேற்றப்பட்ட போது மட்டக்களப்பு தமிழர்கள் மௌனமாக இருந்தார்கள். மட்டக்களப்பு தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு கூட முடியாதவர்களாக அஞ்சியிருந்தார்கள்.

மட்டக்களப்பு நகரில் தமிழர்களின் ஆதிக்கத்திலிருந்து வர்த்தகத்தை பறித்து எங்கோ கொடுக்கிறோம் என்பது தெரிந்தும் அந்த முட்டாள்தனமான காரியங்களை செய்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 75 வீதமானவர்கள் தமிழர்கள். ஆனால் அம்மாவட்டத்தில் உள்ள வர்த்தகம் 5வீதம் கூட தமிழர்களிடம் இல்லை. தமிழர்களிடம் இருந்த வர்த்தகத்தை பறித்து கொடுத்த பெருமை தமிழ் இயக்கங்களையே சாரும்.

தமிழ் இயக்கங்கள் அனைத்தும் தமிழ் வர்த்தகர்களை கடத்தி கப்பம் பெறுவதை வழங்கமாக கொண்டிருந்தன. இதில் முக்கிய பங்கு விடுதலைப்புலிகளுக்கு இருந்தது. இயக்கங்களின் தொல்லை தாங்க முடியாது தமது வர்த்தக நிலையங்களை முஸ்லீம்களுக்கு விற்று விட்டு சென்ற தமிழர்கள் அதிகம். 1980 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் இயக்கங்களின் தொல்லையால் தமிழ் வர்த்தகர்கள் பலர் தமது கடைகளை முஸ்லீம்களுக்கு

*விற்ற வரலாறுதான் அதிகம்.*

*மட்டக்களப்பு நகரில் சுமார் 15க்கும் மேற்பட்ட புடவை கடைகள் இருக்கின்றன. வீதியோர கடைகளும் பல உள்ளன. இவற்றில் ஒன்று கூட மட்டக்களப்பு தமிழர்களுக்கு சொந்தம் இல்லை.*

*மொழி, மதம், கலாசாரம், உட்பட பல்வேறு வழிகளில் இணைந்திருந்த மட்டக்களப்பு யாழ்ப்பாண தமிழர்களை தங்க ளின் சுயநலங்களுக்காக பிரித்து கூறுபோட்டார்கள்.*

*யாழ்ப்பாண தமிழர்களை மட்டக்களப்பிலிருந்து வெளியேற் றுவதோடு நின்று விடாது யாழ்ப்பாண கல்விமான்கள், ஊடகவி யலாளர்கள் ஆகியோரையும் கொலை செய்து தமது வெறியை தீர்த்துக்கொண்டனர்.*

*அதேவேளை புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள யாழ்ப்பாண தமிழர்கள் சிலர் கிழக்கு மாகாண மக்களுக்கு எதிராக மிக மோச மான அவதூறு பிரசாரங்களையும், துரோகி பட்டங்களையும் வழங்கி கொண்டிருந்தனர்.*

**புலம் பெயர்ந்தவர்கள் வழங்கிய துரோகி பட்டம்**

*சில வானொலிகள், பத்திரிகைகளும் மட்டக்களப்பு மக்க ளுக்கு ஒட்டுமொத்தமாக துரோகி பட்டம் வழங்கினர். லண்ட னிலிருந்து ஒலிபரப்பான வானொலி ஒன்றில் மட்டக்களப்பு தமிழ் மக்களை கொச்சைப்படுத்தி கேவலப்படுத்தும் வகையில் கருத்துகளும் பரிமாறப்பட்டன. மட்டக்களப்பில் முஸ்லீம்களும், தமிழர்களும் வாழ்கின்றனர். மட்டக்களப்பு தமிழர்களுக்கும் தொப்பி பிரட்டும் குணம் காணப்படுகிறது. அவர்களின் பிறப் பில் சந்தேகம் ஏற்படுவதாக கூட அந்த வானொலியில் கருத்து பரிமாறப்பட்டது. தொழிலகங்களில் ஒன்றாக வேலை செய்த மட்டக்களப்பு தமிழர்களை துரோகிகள் என்றும், அவர்கள் கரு ணாவின் ஆட்கள் என்றும் ஒதுக்கி வைத்தனர்.*

மறுபுறத்தில் தமிழர் விடுதலைக்கு எதிராக செயற்பட்ட சிறிலங்கா அரசுக்கு ஆதரவான வானொலிகள், மற்றும் இணையத்தளங்கள் இதை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு பிரிவினை வாதத்தை தீவிரமாக பரப்பினர்.

காலம் காலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக செயற்பட்ட மட்டக்களப்பு தமிழ் மக்கள் பலரையும் இந்த புலம்பெயர்ந்தவர்களின் செயல்கள் வெகுவாக பாதித்தது. கருணா என்ற தனிமனிதனின் செயலிற்காக ஒட்டுமொத்த மட்டக்களப்பு தமிழ் மக்களையும் தண்டிக்க முற்பட்ட புலம்பெயர்ந்த சிலரை எண்ணி வேதனைப்படத்தான் முடிந்தது.

நான் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் சுவிட்சர்லாந்திற்கு வந்த போது மட்டக்களப்பை சேர்ந்த தமிழர் ஒருவரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். நான் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவன் என்ற காரணத்தாலோ அல்லது யாழ்ப்பாணத்தவன் என்ற காரணத்தாலோ என்னவோ என்மீது வெறுப்பாக பேசினார். இதுவரை காலமும் பிரபாகரனை நாம் பெரிதாக மதித்தோம். அவர்தான் எங்கள் தலைவர் என்று போற்றினோம். ஆனால் மட்டக்களப்பு மக்களை துரோகிகள் என்றும் காட்டிக் கொடுப்பவர்கள் என்றும் கேவலப்படுத்தி பேசியதை ஏன் விடுதலைப்புலிகள் தடுக்கவில்லை. இங்குள்ள விடுதலைப்புலிகளும் இதை ஏற்றுக்கொள்வது போல மௌனமாக தானே இருக்கிறார்கள் என சொன்னார்.

அவர் தன்னுடைய அறை ஒன்றிற்கு அழைத்து சென்றார். அங்கே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் ஒன்று இருந்தது. இந்த புகைப்படம் எனது ஹோலில் வைத்திருந்தேன். இப்போது நான் அதை கழற்றி றூமில் வைத்திருக்கிறேன். இன்னும் அதை தூக்கி எறியவில்லை. தூக்கி எறியும் வகையில் இவர்கள் நடத்து கொள்ளக் கூடாது. மட்டக்களப்பு மக்களை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு கேவலப்

படுத்தி விட்டார்கள் என என்னிடம் பொரிந்து தள்ளினார்.

இந்த சம்பவங்கள் காலம் காலமாக நெருக்கமாக பழகிய யாழ்ப்பாண- மட்டக்களப்பு மக்களை இரண்டாக பிளவு படுத்தி விட்டது.

அதன் பின்னர் மட்டக்களப்பு மக்களை எழுந்தமானத்தில் கருணாவின் ஆள், துரோகி, உளவாளிகள் என பட்டம் சூட்டி ஒதுக்கி வைக்கும் போக்கு சில யாழ்ப்பாணத்தவர்களிடமும் காணப்படுகிறது. மட்டக்களப்பு மக்களை மட்டுமல்ல மட்டக் களப்பில் வாழ்ந்தவர்களை அல்லது அவர்களுடன் நெருங்கிய உறவுகளை கொண்டவர்கள் மீது பழி சுமத்த வேண்டும் என் றால் உடனடியாக அவர் கருணாவின் ஆள் என பட்டம் சூட் டும் போக்கு இந்த புலன்பெயர்ந்தவர்களிடம் காணப்படுகிறது. இதற்கு பல உதாரணங்களை குறிப்பிடலாம்.

லங்காசிறி இணையத்தளத்தை நடத்துபவர்கள் நான் என் னுடைய இணையத்தளத்தில் வெளியிட்ட பிரத்தியேகமான செய்தி ஒன்றை திருடி தங்கள் இணைத்தளத்தில் வெளியிட் டார்கள். இப்படியான திருட்டை செய்ய வேண்டாம் என அந்த இணையத்தளத்தை நடத்தியவர்களிடம் நான் கூறினேன். இதை நான் கூறி அரை மணிநேரத்தில் என்னை கருணாவின் உளவாளி என்றும் துரோகி என்றும் லங்காசிறி நடத்தும் இணையத்தளங் களில் செய்தி வெளியிட்டார்கள். பின்னர் நான் அவர்கள் மீது வழங்கு தொடர்ந்த போது பகிரங்கமாக என்னிடம் மன்னிப்பு கோரினார்கள்.

இந்த புலன்பெயர்ந்தவர்களின் முட்டாள்தனத்தை பலரால் புரிந்து கொள்ள முடிந்தாலும் புரிந்து கொள்ள முடியாத அப் பாவி மட்டக்களப்பு தமிழனுக்கு ஒட்டு மொத்த யாழ்ப்பாண தமி ழனிலும் கோபம் வருவது இயல்பானதுதான்.

*****

# 04 இராசதுரைக்கு துரோகிப் பட்டம் வழங்கிய கூட்டணி

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்ற போது உதாரணமாக பேசப்பட்ட இன்னொரு விடயம் பற்றி எழுத இருக்கிறேன்.



கருணாவின் பிளவு பற்றி பேசுபவர்களில் சிலர் மட்டக்களப்பார் காலம் காலமாக துரோகம் செய்து வந்திருக்கிறார்கள். இராசதுரை, கனகரத்தினம் வரிசையில் இப்போது கருணாவும் துரோகம் செய்து விட்டார் என சிலர் பேசியதை நான் கேட்டிருக்கிறேன்.

கருணா தமிழீழ விடுதலைப்புலிகளிலிருந்து வெளியேற்றம், இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேற்றம், இந்த இரண்டு காலப்பகுதியிலும் இந்த விடயங்களை நேரடியாக அவதானித்தவன் என்ற வகையில் இந்த இரண்டு பிளவுகளுக்கும் நிறைய வித்தியாசத்தை நான் காண்கிறேன்.

இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்றதற்கான காரணம் என்ன என்பதை அறியாமல் இருப்பதும் கருணாவையும் இராசதுரையையும் ஒன்றாக இணைத்து பேசுவதற்கு காரணம் என்று நினைக்கிறேன்.

சொல்லின் செல்வன் செல்லையா இராசதுரை என்று மட்டக்களப்பில் பெரும்பாலானவர்களால் அழைக்கப்படும் இராசதுரை 1956ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியில் போட்டியிட்டு மட்டக்

களப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய் யப்பட்ட போதிலும் அதற்கு முதல் 1950ஆம் ஆண்டுகளில் தமி ழரசுக்கட்சியில் இணைந்து மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வராக தெரிவு செய்யப்பட்டதன் மூலம் அரசியலுக்கு பிர வேசித்திருந்தார்.

1956ஆம் ஆண்டிலிருந்து 1979ஆம் ஆண்டுவரை 23ஆண் டுகள் தமிழரசுக்கட்சியிலும் அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இருந்த இராசதுரை பிரிந்து சென்றதற்கு உடன டியாக சில காரணங்கள் கூறப்பட்டிருந்தாலும் தந்தை செல்வ நாயகம் அவர்களின் மறைவிற்கு பிறகு தமிழர் விடுதலைக் கூட் டணி தலைமையோடு இருந்த முரண்பாடுகளின் தொடர்ச்சியே அவர் பிரிந்து செல்வதற்கு காரணமாக அமைந்திருந்தது.

தந்தை செல்வநாயகத்தின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் செயலாளர்நாயகமாக தெரிவு செய்யப்பட்டவர் அப்பா பிள்ளை அமிர்தலிங்கம், இராசதுரையும் அமிர்தலிங்கமும் 1956 ஆம் ஆண்டில் சமகாலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட போதிலும் அமிர்தலிங்கம் 1970ஆம் ஆண்டு தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியில் தோல்விய டைந்திருந்தார்.

இராசமாணிக்கத்திற்கு பின்னர் கிழக்கில் தமிழரசுக் கட்சியிலும், அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இராசதுரையே மூத்தவராக இருந்தார். தந்தை செல்வநாயகத் தின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பதவி தனக்கே கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த இராசதுரைக்கு அமிர்தலிங்கம் அப்பதவியை பெற்றுக்கொண்டது முதல் கசப் புணர்வு வளர ஆரம்பித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவர், அல்லது செயலாளர் பதவிகளில் ஒன்று கிழக்கை சே ர்ந்தவர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது.

இதனால் கசப்புணர்வுகள் வளர ஆரம்பித்தது.

அமிர்தலிங்கம் தன்னை ஓரங்கட்டுகிறார் என்ற உணர்வு இராஜதுரைக்கு ஏற்பட்டிருந்தது. இராசதுரைக்கு இணையாக மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை பதவிக்கு காசி ஆனந்தனை வளர்த்தெடுப்பதிலும், அமிர்த லிங்கம் ஈடுபட்டிருக்கிறார் என இராசதுரையின் ஆதரவாளர் கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டது.

இதன் உச்சக்கட்டம் 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெளிப்பட்டது. ஒரு தொகுதியில் ஒரே கட்சியை சேர்ந்த இரு வர் ஒருவரை ஒருவர் எதிர்த்து போட்டியிட்ட வரலாறும் மட்டக் களப்பில் தான் நடைபெற்றது. அந்த வரலாற்று சாதனையை செய்து முடித்ததில் பெரும் பங்கு அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருந்த அமிர்தலிங்கத் தையே சாரும்.

அந்த தேர்தலின் மூலம் காசி ஆனந்தனை மட்டக்களப்பு தொகுதியில் போட்டியிட வைத்து இராசதுரையை தோற்க டிக்க வேண்டும் என அமிர்தலிங்கம் திட்டமிட்டார்.

தொகுதிவாரியான தேர்தலில் ஒரு தொகுதியில் ஒரு கட்சி யை சேர்ந்த ஒருவர் மட்டுமே போட்டியிட முடியும். மட்டக் களப்பு தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூ ரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இராசதுரைக்கே சந்தர்ப் பம் வழங்கப்பட வேண்டும் என மட்டக்களப்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகளும், பொது அமைப்புக்களும் வலியுறுத்தி வந்தன. இதனை நிராகரிக்க முடியாத தமிழர் விடுத லைக் கூட்டணி தலைமை இராசதுரைக்கு மட்டக்களப்பு தொகு தியில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய அதேவேளை அவரை தோற்கடிப்பதற்கும் அமிர்தலிங்கம் திட்டம் தீட்டினார். அதேதொகுதியில் செயலி ழந்து போய் இருந்த தமிழரசுக்கட்சியில் காசி ஆனந்தனை

மட்டக்களப்பு தொகுதியில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

ஒரே கட்சியை சேர்ந்த இருவரையும் ஒரு தொகுதியில் போட்டியிட வைத்து விட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் அமிர்தலிங்கம் சொன்ன காரணம். மட்டக்களப்பு தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி. எனவே இருவரும் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது என சொல்லியிருந்தார்.

**இரட்டை அங்கத்தவர் தொகுதி என்றால் என்ன?**

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களுக்கான காப்பீட்டு ஏற்பாடுகளுள் ஒன்றாக 1947ம் ஆண்டில் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இரட்டை அங்கத்தவர் அல்லது பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1959ல் அரசியலமைப்பின் புதுச்சேர்க்கை விதிகளுக்கமைய இலங்கையில் தேர்தல் தொகுதி நிர்ணயத்தின்போது பல அங்கத்துவ அல்லது இரட்டை அங்கத்துவ தொகுதிகள் ஏற்படுத்தப் பட்டன.

விசேடமாக ஒரு தொகுதியில் அண்ணளவாக சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரும் அல்லது இரண்டு சிறுபான்மை இனத்தவர்கள் சமனாக வசிப்பார்களாயின் இவர்களுக்கு தத்தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இதன் முலம் வழங்கப்பட்டது.

இதன்படி இலங்கையில் 6 தொகுதிகள் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாக வகுக்கப்பட்டிருந்தது. பேருவளை, 2பேர் (சிங்களவர், முஸ்லீம்) மட்டக்களப்பு, 2பேர் (தமிழர், முஸ்லீம்) பொத்துவில் 2பேர் (தமிழர் முஸ்லீம்) ஹரிஸ்பத்துவ 2பேர் (சிங்கள, முஸ்லீம்) கொழும்பு மத்தி 3 பேர் (சிங்கள, தமிழ், முஸ்லீம்) நுவரெலிய மஸ்கெலியா 3பேர் (சிங்களவர், தமிழர், முஸ்லீம்) என்ற எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தெரிவு செய்

யப்படும் வகையில் இரட்டை அங்கத்தவர் அல்லது பல அங்கத் தவர் தொகுதி அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த இரட்டை அங்கத்தவர் முறை அறிமுகப்படுத்தப் பட்ட நோக்கத்திற்கு விதி விலக்காக 1970ஆம் ஆண்டு மட்டக் களப்பு தொகுதியில் நடைபெற்ற தேர்தல் அமைந்திருந்தது. தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட இராசதுரை முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகவும், சுயேச்சையாக போட்டியிட்ட ராசன் செல்வநாயகம் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பின ராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தெரிவு செய்யப்பட்ட இருவருமே தமிழர்கள்.

1970ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. மட்டக்களப்பு தொகுதியில் இராசதுரை, (தமிழரசுக்கட்சி) ராசன் செல்வநாயகம் (சுயேச்சை) ஆகியோரும், கல்குடா தொகுதி யில் தேவநாயகமும், (ஐ.தே.க) பட்டிருப்பு தொகுதியில் தம்பி ராசாவும் (ஐ.தே.க) தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

1970ஆம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பு முஸ்லீம் மக்கள் தங்களுக்கு கிடைத்த படிப்பினையை கருத்தில் கொண்டு அதன் பின்னர் நடந்த அனைத்து தேர்தல்களிலும் தங்களின் பிரதிநித் துவத்தை காப்பாற்றிக் கொள்ளும் வகையில் மிக சாதுர்யமா கவும், புத்திசாலித்தனமாகவும் நடந்து வருகின்றனர். ஆனால் தமிழர்கள் கடந்த கால படிப்பினைகளிலிருந்து அனுபவங்களை பெற்று செயற்பட்டதாக தெரியவில்லை.

அமிர்தலிங்கம் கூறியது போல அப்போது மட்டக்களப்பு தொகுதியில் இருவரும் தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டால் அது இன்னொரு இனத்திற்கு கிடைக்க வேண்டிய உரிமையை பறித்தெடுப்பதற்கு சமனானதாகும். இந்த விடயங்கள் அமிர்த லிங்கத்திற்கு சுட்டிக்காட்டிய போதிலும் இராசதுரையை தோற் கடிக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

தேர்தல் பிரசாரங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் தமிழரசுக்கட்சியில் போட் டியிட்ட காசி ஆனந்தனுக்காகவே பிரசாரம் செய்தனர். தமிழ ரசுக்கட்சியில் போட்டியிட்ட காசி ஆனந்தனும், அவர்களது குழுவினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட இராசதுரைக்கு எதிராகவே பிரசாரங்களை மேற்கொண்டனர்.

வழமையாக தங்களை எதிர்த்து போட்டியிடும் சிறிலங்கா சு தந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்ளும் மட்டக்களப்பு தொகுதியில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இராசதுரை, காசி ஆனந்தன் என பிரிந்து நின்று ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டனர். ஒரு வர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசினர்.

ஒரு கட்டத்தில் இராசதுரை தனது மேடையில் வெளிப்படை யாக யாழ்ப்பாண அரசியல் தலைமைக்கு எதிராக பேசி வந்தார். மறுபுறத்தில் இராசதுரை தோற்கடிக்கப்பட வேண்டும் என அமிர் தலிங்கம் தரப்பு மிகத்தீவிரமாக காசி ஆனந்தனுக்காக பிரசாரம் செய்தது. அப்போது தமிழ் இளைஞர் பேரவை காசி ஆனந்த னுக்கே தேர்தல் பிரசாரம் செய்தனர்.

ஆனால் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என காலம் காலமாக இருந்த சுகுணம் யோசப் (பரராசசிங்கம்), கலா தம்பிமுத்து (கலா மாணிக்கம்) உட்பட பலர் இராசது ரையின் பக்கமே நின்றனர். (தமிழரசுக்கட்சியின் செனட்டர் மாணிக்கத்தின் மகள் கலா அவரது கணவர் சாம். தம்பிமுத்து ஆகியோர் ஒரு காலகட்டத்தில் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுத லைக் கூட்டணி தூண்களாக விளங்கியவர்கள். கலாவும், பாரா ளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவும் 1989ல் விடுதலைப்பு லிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.)

இராசதுரையின் தேர்தல் பிரசார மேடைகளில் யாழ்ப்பாண அரசியல் தலைமைக்கு எதிராக மிக காரசாரமான விமர்சனங்

கள் முன்வைக்கப்பட்டன. யாழ்ப்பாண தலைமையின் கீழ் நாம் இருக்க கூடாது என்று கூட சிலர் பேசினர். மட்டக்களப்பில் இருந்த பெரும்பாலான யாழ்ப்பாணத்தவர்கள் காசி ஆனந்த னுக்கே வாக்களித்தனர்.

தேர்தலில் இராசதுரை வெற்றி பெற்ற போதிலும் இராது ரைக்கும் அமிர்தலிங்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் வளர்ந்து கொண்டே சென்றது.

இந்நிலையில்தான் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிழக்கு மாகாணத்தை சூறாவளி முற்றாக அழித்திருந்தது. தமிழ் இளை ஞர் பேரவையைச் சேர்ந்த யாழ்ப்பாண இளைஞர்கள் மட்டக் களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் வந்து தங்கி நின்று மீட்பு பணிகளிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதிலும் ஈடுபட் டனர். அவர்கள் மீது கே.டபிள்யூ. தேவநாயகத்தின் ஆட்கள் தடிகள், இரும்பு கம்பிகள் கொண்டு தாக்குதல் நடத்தியதுடன் அரசடி மகாவித்தியாலயத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். அப்போது தேவநாயகம் அமைச்சராக அதிகாரத்தில் இருந்தார். அரச கட்டிடம் எதிலும் அவர்களுக்கு இடம் வழங்க கூடாது என்ற கடுமையான உத்த ரவும் போடப்பட்டிருந்தது.

அரசடி மகாவித்தியாலய கட்டிடத்தில் இருந்து வெளியேற் றப்பட்ட தமிழ் இளைஞர் பேரவை மற்றும் யாழ் பல்கலைக்க ழக மாணவர்களுக்கு முன்னாள் பாராளுமன்ற மன்ற உறுப்பின ராக இருந்த ராசன் செல்வநாயகம் அடைக்கலம் கொடுத்தார். மட்டக்களப்பு திருமலை வீதியில் இருந்த செல்வநாயகம் ஞாப கார்த்த மண்டபத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த விடயங்களில் இராசதுரை பாதிக்கப்பட்ட தமிழ் இளை ஞர் பேரவையினருக்கு உதவவில்லை என்ற குற்றச்சாட்டும் விமர்சனங்களும் அப்போது எழுந்திருந்தது.

அக்காலப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளு மன்ற உறுப்பினர்கள் யாரும் அரசாங்க அமைச்சர்கள், ஜனாதி பதி, பிரதமர், ஆகியோர் கலந்து கொள்ளும் எந்த கூட்டத்திலும் கலந்து கொள்ளக் கூடாது என அக்கட்சியின் தலைமைப்பீடம் கட்டுப்பாடு விதித்திருந்தது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பை பார்வையிடு வதற்கும், புனரமைப்பு பணிகள் பற்றி ஆராய்வதற்குமாக 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போது பிரதமராக இருந்த பிரேம தாஸ மட்டக்களப்புக்கு வருகை தந்தார். மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் விசேட ஹெலிகொப்பரில் வந்து இறங்கிய பிரேமதாஸாவை மட்டக்களப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பி னர் செல்லையா இராசதுரை சென்று வரவேற்றார். மாவட்ட செயலகத்தில் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற கூட் டத்திலும் இராசதுரை கலந்து கொண்டார்.

இந்த விடயங்கள் அடுத்த நாள் தலைப்பு செய்தியாக வெளி வந்தன. கூடவே தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாய கம் அமிர்தலிங்கம் விளக்கம் கேட்டு இராசதுரைக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அச்செய்தியும் வெளியாகியிருந்தது.

அழிந்து போன மட்டக்களப்பை மீட்டெடுப்பதற்காக அந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியது மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனது கடமை. அந்த கடமையை செய்த என் மீது கட்சி தலைமை கேள்வி கேட்க முடியாது. விளக்கம் கேட்க முடியாது என இராசதுரை பதிலளித்திருந்தார்.

இராசதுரை உரிய காலத்தில் சரியான பதிலை கட்சி தலை மைப்பீடத்திற்கு வழங்கவில்லை என்றால் அவரை கட்சியிலி ருந்து நீக்க வேண்டும் என அமிர்தலிங்கம் தரப்பு கூறிக்கொண் டிருந்தது. அப்போது உயிருடன் இருந்த திருமதி செல்வநாயகம், திருமதி திருச்செல்வம், ஆகியோருக்கு இராசதுரை உருக்கமான

*கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். தந்தை செல்வநாயகம் உயிருடன் இருந்திருந்தால் தான் இவ்வாறு பழிவாங்கப்பட்டிருக்க மாட்டேன் என்றும் தன்னை திட்டமிட்டு ஒதுக்கி ஓரங்கட்ட வைப்பதும், கட்சியிலிருந்து நீக்க நினைப்பதும் மட்டக்களப்பு மக்களுக்கு செய்யும் துரோகம் என எழுதியிருந்தார்.*

*தமிழர் விடுதலைக் கூட்டணியில் உருவாகிய உள்கட்சி முரண்பாட்டை சிறிலங்கா சிங்கள தரப்பு தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டது.*

*இராசதுரை தமிழினத்திற்கு துரோகம் இழைத்து விட்டார் என ஒரு தரப்பினர் கூறிவந்தனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்த போதும் இராசதுரை முதல் கருணா வரை கிழக்கில் உள்ளவர்கள் துரோகிகள் என்று சிலர் பிரசாரம் செய்தனர்.*

*இராசதுரை செய்தது சரி என்றோ அல்லது தவறென்றோ நான் வாதிட வரவில்லை. இராசதுரை துரோகி என்றால் அவர் அரசின் பக்கத்திற்கு செல்வதற்கு காரணமான அமிர்தலிங்கம் போன்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களும் துரோகிகள்தான்.*

*அவர் வாக்களித்த மட்டக்களப்பு மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டார் என குற்றம் சாட்டுவதற்கு மட்டக்களப்பு மக்களுக்கு மட்டும் தான் உரிமை இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்கு உரிமை கிடையாது. ஏனெனில் இராசதுரை அமைச்சர் பதவி பெற்றதை விட மிகப்பெரிய துரோகத்தை தமிழ் இனத்திற்கு அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி செய்தது.*

*1978ல் அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் உறவாடி பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்து வாக்களிக்காத அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடு*

தலைக் கூட்டணி தமிழ் மக்களுக்கு செய்த அநீதியை விடவா இராசதுரை தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்து விட்டார்?

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன், ஆனந்தசங்கரி போன்றோர் எதிர்த்து வாக்களிக்காத பயங்கரவாத தடைச்சட் டத்தால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சித்திரவதை செய்யப் பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். இன்றும் அந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழேயே வகை தொகை இன்றி தமிழர்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட் டிருக்கின்றனர். அமிர்தலிங்கம் போன்றவர்களின் இந்த மகா தவறை விடவா இராசதுரை அரசின் பக்கம் சேர்ந்து அமைச்சர் பதவி பெற்றது பெரிதாகிவிட்டது?

விடுதலைப்போராட்டம் ஆரம்பமான கால கட்டத்தில் அரச பக்கம் சேர்ந்து அவர்களுக்கு முண்டு கொடுப்பது விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி விடும் என்பது உண்மைதான். ஆனால் அரசின் பக்கம் சேர்ந்த இராசதுரை போன்றவர்களுக்கு துரோகி பட்டம் வழங்கும் அதிகாரம் பயங்கரவாத தடைச்சட் டத்தை கொண்டு வந்த அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுக்கு நிச்சயம் கிடையாது. என்னைப்பொறுத்தவரை இராசதுரையின் பிளவு என்பது அமிர்தலிங்கம் போன்ற தலைமைத்துவங்களின் தவறான போக்கினால் ஏற்பட்டதே ஆகும்.

அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களின் செயல்பாடுகளால் தான் மட்டக்களப்பு மக்களுக்கு யாழ்ப்பாண மக்கள் மீது வெறுப்பு ஏற்பட காரணம் எனலாம்.

எனவே கருணாவின வெளியேற்றத்தையும் இராசதுரையின் வெளியேற்றத்தையும் ஒன்றாக கணித்து விட முடியாது.

*****

# 05 2000 ஆம் ஆண்டில் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு

விடுதலைப்புலிகளின் தலைமைக்கும், மட்டக்களப்பு அம் பாறை விடுதலைப்புலிகளின் தலைமைகளுக்கும் இடையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம்தான் பிளவு ஏற்பட்டது என பல ரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த பிளவு பூதாகரமாக வெளி உலகிற்கு தெரியும் வகையில் வெடித்தது 2004 மார்ச்சி ல் என்றாலும், சுமார் 4 வருடங்களாக முரண்பாடுகளும், பிளவு களும் தொடர்ந்து வந்திருக்கின்றன. மட்டக்களப்பில் இருந்த ஊடகவியலாளர்களில் சிலர் இதை அறிந்திருந்தனர். பல சந்தர்ப் பங்களில் இந்த முரண்பாடுகள் எம்மையும் பாதித்திருந்தது.

விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை குழுவில் கருணா ஐரோப்பா உட்பட உலக நாடுகளில் வலம் வந்த வேளையில் இந்த முரண்பாடுகளும், பிளவுகளும் உச்சக்கட்டத்தை அடைந்தி ருந்தன. வன்னிக்கு செல்ல மறுத்த கருணா பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பாவிற்கு சென்ற வேளையில் அவரை அழைத்து செல் வதற்கு நேரடியாக ஹெலிகொப்டர் கரடியனாற்றுக்கு வந்தி ருந்தது. கிளிநொச்சியிலிருந்து தமிழ்செல்வன் ஆகியோர் புறப் பட கருணா கரடியனாற்றில் இருந்து புறப்பட்டு கொழும்பில் அனைவரும் இணைந்து பேச்சுவார்த்தைக்கென சென்றனர். ஆரம்பத்தில் கிளிநொச்சிக்கு சென்று அங்கிருந்து கொழும்பு செ ன்ற கருணா இறுதி காலத்தில் கரடியனாற்றிலிருந்தே நேரடி யாக கொழும்புக்கு சென்றார்.

பாரிய பிரச்சினையும் பிளவும் வரப்போகிறது என விடுத லைப்புலிகளின் தலைவருக்கு தெரிந்திருந்தும் ஏன் அவர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது இன்றும் கேள்

விக்குறியாக இருக்கும் விடயம் தான்.

விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் மட்டக்களப்பில் உள்ள விடுதலைப்புலி தளபதிகளுக்கும் இடையில் 2000ஆம் ஆண்டு முதல் உறவுகள் நல்ல நிலையில் இருக்கவில்லை என்பதை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது.

கருணா மட்டுமல்ல பிற்காலத்தில் கருணாவின் முடிவை எதிர்த்து விடுதலைப்புலிகளுடன் இருந்த கௌசல்யன், கேணல் ரமேஷ், சேனாதி, குயிலின்பன், ரமணன், கரிகாலன், என அனைவருமே வன்னியில் இருந்த விடுதலைப்புலிகளின் தலைமையுடன் முரண்பட்டு நின்றனர்.

**வன்னியிலிருந்து கால்நடையாக சென்ற தளபதிகள்**

ஜயசிக்குறு முதல் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 20ல் மீட்கப்பட்ட ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல் வரை மட்டக்களப்பு அம்பாறை படைப்பிரிவான ஜெயந்தன் படைப்பிரிவு முக்கிய பங்காற்றியது. அதன் பின் 2000ஆம் ஆண்டு இறுதியில் கருணா தலைமையில் சுமார் 200பேர் வன்னியிலிருந்து கால்நடையாகவே மட்டக்களப்பிற்கு சென்றனர்.

அந்த பயணம் கூட சில மனக்கசப்புக்கள், பிளவுகளினாலேயே யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கருணா தலைமையிலான மட்டக்களப்பு தளபதிகள் சிலரும் போராளிகளும் கால்நடையாக வன்னியிலிருந்து மட்டக்களப்புக்கு சென்றிருந்தனர். வன்னியில் மட்டக்களப்பு போராளிகளை அவமதிக்கும் சில சம்பவங்கள் நடைபெற்றதாகவும் கேள்விப்பட்டேன்.

சமாதான ஒப்பந்தத்திற்கு முன்னைய காலம் என்பதால் அவர்கள் பெரும் ஆபத்தின் மத்தியிலேயே அப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இராணுவ முகாம்கள், இராணுவ நடமாட்டங்கள் நிறைந்த பகுதிகள் ஊடாகவும் அவர்களின் பயணம் அமைந்திருந்தது. இதில் சில போராளிகளும் உயிரிழந்தி

ருந்தனர்.

## அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதல்

சமாதான ஒப்பந்தத்திற்கு முதல் 2001ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி இரவு (மாவீரர்தினத்தின் போது) தரவையில் மாவீரர் தின நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு தனது ஆயித்தியமலை அலுவலகத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த அற்புதன் மாஸ்ரர் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அற்புதன் மாஸ்ரர் ஒருகாலை இழந்திருந்தார். இத்தாக்குதல் கருணாவின் நேரடி உத்தரவின் பேரிலேயே நடத்தப்பட்டது.

அற்புதன்மாஸ்ரர் பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வு பிரிவின் மட்டக்களப்பு அம்பாறை பொறுப்பாளராக இருந்தவர். பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுப்பிரிவுக்கும், கருணா தரப்பிற்கும் இடையிலான மோதலின் உச்சக்கட்ட வெளிப்பாடாகவே அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் இரு புலனாய்வுப்பிரிவுகள் செயற்பட்டன. ஒன்று பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வு பிரிவு. இதற்கு பொறுப்பாளராக அற்புதன் மாஸ்ரர் இருந்தார். கருணாவின் கீழ் உள்ள மட்டக்களப்பு அம்பாறை இராணுவப்பிரிவின் கீழ் இருந்த புலனாய்வுப்பிரிவுக்கு ரமணன் பொறுப்பாக இருந்தார். மட்டக்களப்பில் ரமணன் தலைமையிலான புலனாய்வு பிரிவுதான் பலம் வாய்ந்ததாக இருந்தது.

2001ஆம் ஆண்டு இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உச்சக்கட்ட போர் நடந்து கொண்டிருந்த காலம். அப்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடைபெறும் மாவீரர் தின நிகழ்ச்சிகளுக்கு செல்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்திருந்த காலம்.

வருடாவருடம் இராணுவ நெருக்கடிகள், கெடுபிடிகள்

இருந்த போதிலும் மட்டக்களப்பில் இருந்த சில ஊடகவிய லாளர்கள் சில மாற்று வழிகளால் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டு பிரதேசத்தில் நடைபெறும் மாவீரர்தின நிகழ்ச்சிக்கு செ ன்று வருவது வழக்கம்.

2000ஆம் ஆண்டு மாவீரர் தின நிகழ்ச்சிகளுக்கு நானும், சிவரா மும், தினக்கதிர் நிறுவன உரிமையாளர் மனோ இராசசிங்கமும் எஸ்.ரகுராமும் (தற்போது யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை நெறியின் சிரேஷ்ட விரிவுரையாளராக இருப்பவர்) செல்வதற்கு திட்டமிட்டிருந்தோம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதே சத்தில் நடைபெறும் மாவீரர் நாள் நிகழ்வுக்கு மக்கள் செல்வதை தடுக்கும் முகமாக வவுணதீவு, மண்முனை பாதைகள் மூடப்பட்டி ருந்தது. அம்பிலாந்துறை பாதை மட்டுமே திறந்திருந்தது.

விசேட அதிரடிப்படையினரின் சோதனை சாவடியில் சிவ ராமை தடுத்து வைத்து விட்டார்கள். அவரின் அடையாள அட் டையில் கல்கிசை விலாசமே வதிவிடமுகவரியாக குறிப்பிடப் பட்டிருந்தது. தனக்கு கொக்கட்டிச்சோலையில் வயல் இருப் பதாகவும் அதை பார்ப்பதற்காகவே அங்கு செல்வதாகவும் சி வராம் இராணுவத்தினருக்கு தெரிவித்தார். எங்கள் நால்வரின் அடையாள அட்டையையும் வாங்கி வைத்துக்கொண்ட இரா ணுவத்தினர் வரும் போது சிவராமுக்கு கொக்கட்டிச்சோலை யில் வயல் இருப்பதற்காக அத்தாட்சி கடிதம் ஒன்றை பிரதேச செயலாளரிடம் வாங்கி வர வேண்டும் என்றும் நிபந்தனை போட்டிருந்தனர். மறுநாள் பட்டிப்பளை பிரதேச செயலாள ரிடம் ஒரு கடிதத்தை பெற்று வந்து கொடுத்த பின்பே எங்களின் அடையாள அட்டையையும் இராணுவத்தினர் தந்தனர்.

அற்புதன்மாஸ்ரர் மாவீரர் நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் புறப் பட்டு சென்றார். அப்போதுதான் ஆயித்தியமலைக்கு அருகில் வைத்து அற்புதன் மாஸ்ரர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

*****

# 06 தினக்கதிர் மீதான தாக்குதல்

கிழக்கு மாகாணத்திலிருந்து முதல் முறையாக வெளிவந்த தமிழ்தினசரி தினக்கதிர் பத்திரிகையாகும். அப்பத்திரிகையை உரிமையாளராக இருந்தவர் மனோ இராசசிங்கம்.

மன்று என்ற அரசசார்பற்ற நிறுவனத்தை நடத்தி வந்த மனோ இராசசிங்கம் 1995ஆம் ஆண்டில் விடிவானம் என்ற மாதம் இரு முறை வெளிவரும் பத்திரிகையை ஆரம்பித்தார். அப்பத்திரிகையின் ஆரம்பத்தில் வீ.சு.கதிர்காமத்தம்பி பிரதம ஆசிரியராக இருந்தார். 1996ஆம் ஆண்டின் பின் அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நான் கடமையாற்றினேன்.




அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தினக்கதிர் பத்திரிகை வாரப்பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நான் பணியாற்றினேன். மைக்கல் கொலின் பிரதி ஆசிரியராக கடமையாற்றினார். ஓப்செற் நவீன அச்சு தொழில்நுட்பத்தில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த முதலாவது பத்திரிகை தினக்கதிர் ஆகும்.

பின்னர் அப்பத்திரிகை தினசரி பத்திரிகையாக வெளிவந்த போது எஸ்.எம்.கோபாலரத்தினம் பிரதம ஆசிரியராக பணியாற்றினார். சில காரணங்களால் நான் அதிலிருந்து வெளியேறியிருந்தேன். போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இரா

ணுவ நெருக்கடிக்குள் இருந்து அப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்புக்களில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டது. மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பொறுப் பாளராக இருந்த கரிகாலன் நீக்கப்பட்டு கௌசல்யன் அந்த பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டார். இதுவும் உள்முரண்பாடுக ளின் வெளிப்பாடாகத்தான் இடம்பெற்றது. இந்த மாற்றங்கள் பற்றி தினக்கதிர் தலைப்பு செய்தியாக வெளியிட்டது.

அது மட்டுமன்றி அப்பத்திரிகையின் உரிமையாளரான சாந்தி சச்சிதானந்தன் தொடர்ச்சியாக எழுதி வந்த அரசியல் கட் டுரையும் ஒரு காரணமாக இருந்தது. சாந்தி சச்சிதானந்தனின் அரசியல் கட்டுரையை வெளியிடக் கூடாது என அப்பத்திரிகை ஆசிரியரை அழைத்த விடுதலைப்புலிகள் எச்சரித்திருந்தனர். ஆனாலும் சாந்தி சச்சிதானந்தனின் கட்டுரை தொடர்ச்சியாக வெளிவந்தது. சஞ்சயன் என்ற பெயரிலேயே அக்கட்டுரை வெளிவந்தது.

மட்டக்களப்பில் இருந்த விடுதலைப்புலி தளபதிகளின் தன் னிச்சையான போக்கு, சிறுவர்களை கட்டாயமாக படைக்கு சேர்ப்பது உட்பட பல விடயங்களை சாந்தி சச்சிதானந்தன் அக்கட்டுரைகளில் சுட்டிக்காட்டி இருந்தார். அக்கட்டுரைகள் அனைத்தும் சிறந்த அரசியல் விமர்சன கட்டுரைகளாக அமைந் திருந்தன. ஆனால் அவை விடுதலைப்புலிகளுக்கு பிடிக்க வில்லை.

2002ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு வேளையில் மட்டக்களப்பு நகரில் திருமலை வீதியில் இருந்த தினக்கதிர் அலுவலகத்திற்குள் புகுந்த விடுதலைப்புலிகள் அங் கிருந்த பத்திரிகைகளுக்கு தீ வைத்து விட்டு அங்கிருந்த கண

ணிகள் மற்றும் பெறுமதியான பொருட்களை ஏற்றிச்சென்றனர். மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த கௌசல்யன் தலைமையில் வந்த குழுவினரே தினக்கதிர் பத்திரிகை அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தினர். கருணாவின் நேரடி உத்தரவின் பேரிலேயே கௌசல்யன் குழுவினர் இதனை செய்திருந்தனர்.

இதனை கண்டித்து கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. அப்போது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவராக இருந்த நானும், செயலாளர் தவராசாவும் உட்பட எமது சங்கத்தை சேர்ந்த சிலருமே அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அதனை விடுதலைப்புலிகளே செய்தனர் என பின்னர் அறிந்ததால் பெரும்பாலானவர்கள் (எமது உறுப்பினர்கள் நடேசன் உட்பட) அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இருந்த போதிலும் சொற்பமானவர்களின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தோம். எங்களுக்கு கூட உடனடியாக இதை யார் செய்தார்கள் என்று தெரியவில்லை. அன்று மாலை தான் விடுதலைப்புலிகளே இதை செய்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இத்தாக்குதலை கண்டித்து நாம் ஆர்ப்பாட்டம் செய்த போது அதில் அப்பத்திரிகையின் அப்போது ஆசிரியராக இருந்த ருஷாங்கன் கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பாக பின்னர் ஒருமுறை வன்னியில் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் அவர்களை சந்தித்த போது மட்டக்களப்பில் வெளிவந்த ஒரேஒரு பத்திரிகையையும் தடுத்துவிட்டீர்களே என கேட்ட போது தினக்கதிர் பத்திரிகை மீதான தாக்குதலுடன் எங்களுக்கு உடன்பாடு இல்லை என சொன்னார். அது மட்டக்களப்பில் உள்ள விடுதலைப்புலிகளின் முடிவு என்றார்.

**தமிழச்சு அச்சகம் மீதான தாக்குதல்**

*2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி பகல் 10 மணியளவில் மட்டக்களப்பு நகரில் இருந்த தமிழச்சு அலுவலகத் திற்குள் புகுந்த விடுதலைப்புலிகள் அங்கிருந்த இயந்திரம், கண ணிகள், உட்பட அனைத்தையும் வாகனத்தில் ஏற்றிச்சென்றனர். மட்டக்களப்பு நகர அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த சே னாதி, துணை அரசியல்துறை பொறுப்பாளர் கிருஷன், குயி லின்பன் ஆகியோரே நேரடியாக சென்று ஊழியர்களை வெளி யேற்றிவிட்டு அனைத்தையும் எடுத்து சென்றனர். கருணா நேரடியாக கௌசல்யனுக்கு உத்தரவிட்டிருந்ததாகவும், இந்த உத்தரவிற்கு அமையவே மட்டக்களப்பு நகரப் பொறுப்பாளர் சேனாதி தலைமையிலான குழுவினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சில நாட்களின் பின்னர் வன்னியில் அப்போது தலைமைச்செயலகத்தில் இருந்த மார்ஷலை (இளந்திரையனை) சந்தித்தேன். அப்போது நான் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றிற்கு தலைவராக இருந்தேன். அப்போது இளந்திரையன் என்னிடம் கேட்ட விடயம் ஆச்சரிய மாகவும், விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் மட்டக்களப்பில் உள்ள விடுதலைப்புலிகளுக்கும் இடையில் முரண்பாடுகளும், மோதல்களும் முற்றி வருவதை உணர முடிந்தது.*

*ஏன் அண்ணை நீங்கள் தமிழச்சு அச்சகம் தாக்கப்பட்டதை கண்டிக்கவில்லை என மார்ஷல் என்னிடம் கேட்டார். நான் செ ான்னேன் உங்களுடைய (விடுதலைப்புலிகள்) ஆட்கள் தான் அதை செய்தார்கள். நாங்கள் கேட்டதற்கு அது எங்களுடைய அச்சகம்தான். அதுதான் எடுத்து சென்றோம் என்றார்கள். நீங்கள் அதை கண்டிக்கவில்லை என்கிறீர்கள் என்றேன்.*

*அது கருணாவின் தனிப்பட்ட முடிவு என மார்ஷல் சொன் னார். உங்களுடன் இருந்த பத்திரிகையாளர் யசியின் அச்ச*

கத்தை தாக்கியதற்கு நீங்கள் கண்டனம் தெரிவித்திருக்கலாம் என மார்ஷல் சொன்னார். இரண்டு பக்கத்திலும் அடிவாங்கும் மேளத்தின் நிலையில் மட்டக்களப்பில் இருந்த பத்திரிகையாளர்கள் இருந்தனர்.

**தமிழ்செல்வனின் மட்டக்களப்பு விஜயம்**

சமாதான ஒப்பந்த காலத்தில் இந்த உள்முரண்பாடுகள், வளர்ந்து வந்த நிலையில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் மட்டக்களப்பிற்கு வந்திருந்தார். சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியில் கிளிநொச்சியிலிருந்து கரடியனாற்றிற்கு வந்திருந்தார். தமிழ்செல்வன் தங்கியிருந்த நாளில் கொக்கட்டிச்சோலையில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தார். இந்த சந்திப்பில் கருணா, ரமேஷ், உட்பட மட்டக்களப்பு அம்பாறையில் உள்ள அத்தனை தளபதிகள், அரசியல் துறை பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

அந்த சந்திப்பில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்டது. விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறார்களே ஒழிய மக்களை அரசியல்மயப்படுத்தும் வேலைகளில் ஈடுபடவில்லை போன்ற பல குறைபாடுகளை நாம் முன்வைத்தோம்.

சமாதான ஒப்பந்தத்தின் பின் கிளிநொச்சி வேகமாக வளர்ந்து வரும் அதேவேளை மட்டக்களப்பில் ஒரு முன்னேற்றமும் இல்லை. விடுதலைப்புலிகளின் தலைமை மட்டக்களப்பை பாராமுகமாக இருக்கிறதா என சிவராம் காரசாரமாக சில விடயங்களை கூறினார். மட்டக்களப்பில்தான் போராளிகள் பலர் மாவீரர்களாகியிருக்கிறார்கள். தமிழ்செல்வனுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் வகையிலும் சில விடயங்களை கூறினார். தமிழ்செல்வன் வழமையான தனது சிரிப்புடன் சிவராமின் குற்றச்சாட்டுக்களை சமாளித்துக்கொண்டார்.

*பின்னர் எங்கள் எல்லோருக்கும் இரவு விருந்து இடம்பெற்றது. உணவு உண்டபின் நாம் பேசிக்கொண்டிருந்த போது கருணா சிவராமை தனியாக அழைத்து சென்று பேசிக்கொண்டிருந்தார். தமிழ்செல்வனுடன் சிவராம் காரசாரமாக பேசியதால் கருணா சிவராமை தனியாக அழைத்து ஏசுகிறாரோ என நினைத்துக்கொண்டோம். சந்திப்பு முடிந்து இரவு 11மணிக்கு பின்னர் நாம் மண்முனை படகு ஊடாக வந்து கொண்டிருந்த போது என்ன கருணா கடும் ஏச்சு தந்தானோ என சிவராமை பகிடியாக கேட்டோம்.*

*சிவராம் சிரித்து விட்டு சொன்னான். அவன் ஏன் ஏச, தமிழ்செல்வனுக்கு குடுத்தது காணாது என கருணா சொன்னான். தமிழ் செல்வனுக்கு ஏசினால் கருணாவுக்கு சந்தோஷம் தானே.சிவராமின் பதில் எமக்கு ஆச்சரியமாக இருந்தது.*

**மாவீரர் தினத்திற்கு கிளிநொச்சி சென்ற நடேசன்**

*2003ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஆறுக்கும் மேற்பட்ட மாவீரர் இல்லங்களில் நடைபெற்றது. மாவீரர் நாள் ஏற்பாடுகள் தொடர்பாக மட்டக்களப்பு நகரில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்திய மட்டக்களப்பு அம்பாறை ஊடகத்துறை பொறுப்பாளர் கிரிஷன் மாவீரர்நாள் நடக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் இரு ஊடகவியலாளர் படி சகல இடங்களுக்கும் செல்வதற்கான ஏற்பாட்டை செய்யுமாறு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை கேட்டிருந்தார்.*

*அதன் படி ஒவ்வொரு இடத்திற்கும் தலா இரு ஊடகவியலாளர்களை அனுப்புவதற்கு ஏற்பாட்டை செய்தோம். ஆனால் நடேசன் தான் கிளிநொச்சியில் நடைபெறும் மாவீரர்நாள் நிகழ்ச்சிக்கு தான் செல்லப்போகிறேன். இங்கு வரமாட்டேன் என கூறிவிட்டான். இது கருணா, ரமேஷ், கிரிஷன் உட்பட மட்டக்களப்பில் இருந்த விடுதலைப்புலிகளுக்கு பிடிக்கவில்லை.*

* * * * *

# 07 கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி மாறுபட்ட செய்திகள்

ஆயுதப்போராட்டம் 2009ஆம் ஆண்டு மேமாதத்தில் முடிந்த பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என மக்களால் அடையாளம் காணப்பட்டது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தான். இன்றும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமையாக இருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்புதான். அதே வேளை தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கும் கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தான்.



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவர்களின் இலட்சியத்திலிருந்து வழி தவறி செல்வதாக குற்றம் சாட்டுபவர்கள் பலர். எதிர்க்கட்சி தலைவர் பதவி, நாடாளுமன்ற குழுக்களின் பிரதிதலைவர் பதவி என சில பதவிகளை பெற்றுக்கொண்டு சுயநலமாக செயல்படுகின்றனர் என்ற குற்றம்சாட்டுபவர்களும் பலர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புதான் இன்று தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரே துரும்பு, அவர்களினால் தான் தமிழ் மக்களுக் கான தீர்வு கிடைக்கும் என நம்புபவர்களும் உள்ளனர்.

இது தவிர தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமாதான காலத் தில் 2004ஆம் ஆண்டே உருவாக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலேயே அவர்கள் முதல் தடவையாக போட்டி யிட்டனர் என சொல்பவர்களும் உண்டு. விடுதலைப்புலிகளின் பணிப்புரைக்கமைய ஊடகவியலாளர் சிவராம் தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார் என செ ால்பவர்களும் உண்டு.

இலங்கையில் உள்ள தொலைக்காட்சி ஒன்றிற்கு செவ்வி வழங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராசவ ரோதயம் சம்பந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக் குவதன் பின்னணியில் விடுதலைப்புலிகள் இருந்தார்களா என தனக்கு தெரியாது என தெரிவித்திருந்தார்.

சட்டத்தரணி நல்லையா குமரகுருபரன் தொலைக்காட்சிக்கு ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் உருவாக்கினார்கள் என சொல்வது தவறு என தெரிவித்திருந்தார். ஆரம்பகாலத்தில் தமிழ் தேசியக் கூட் டமைப்பு அங்கம் வகித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட் சியின் செயலாளராக நல்லையா குமரகுருபரனே இருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் கிழக்கில் தான் இடம்பெற் றது, அதன் பின்னணியில் கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் இருந்தனர் என தெரிவித்திருந்தார்.

வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு கூட் டத்தில் பேசும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில்

*உள்ள சில தமிழ் பிரமுகவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. அதில் முக்கியமாக இருந்தவர் முன்னர் யு.என்.டி.பியில் வேலை செய்த நிமலன் கார்த்திகேயன் என தெரிவித்திருந்தார். வடமாகாணசபையின் ஆலோசகராக நிமலன் கார்த்திகேயனை நியமிக்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிபார்சு செய்திருந்தார். இதற்கு எதிர்ப்புக்கள் வந்த போது நிமலன் கார்த்திகேயன் பற்றி குறிப்பிடும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ஒருவராக இருந்தவர் என சுட்டிக்காட்டியிருந்தார்.*

*தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரை இருந்த செல்வராசா கஜேந்திரன் அவர்கள் கடந்த பொதுத்தேர்தல் பிரசார மேடையில் பேசும் போது தமிழீழ தேசிய தலைவரால் 2004 ஆம் ஆண்டு வன்னியில் வைத்து உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று வழி தவறி செல்வதாக குற்றம் சாட்டியிருந்தார்.*

*தமிழர்கள் புலம்பெயர்ந்திருக்கும் நாடுகளிலும் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று தமிழ் மக்களின் இலட்சியத்தை கைவிட்டு சுயநலத்துடன் செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.*

*ஐரோப்பா, ஒஸ்ரேலியா மற்றும் மேற்குலக நாடுகளுக்கு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போக்கும் அதிகரித்து வருகிறது.*

*இந்த எதிர்ப்புக்களுக்கு பிரதான காரணம், தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் இலட்சியத்திலிருந்து விலகி செல்கிறது என்ற குற்றச்சாட்டாகும்.*

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரகத்தி*

ஆனந்தசங்கரி அடிக்கடி எழுதும் கடிதங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய கட்சியான தமிழர் விடுதலைக் கூட்ட ணியை ஒதுக்கி விட்டு விடுதலைப்புலிகளின் உதவியுடன் தமி ழரசுக்கட்சி உட்புகுந்து கொண்டது என குற்றம் சாட்டி வருகி றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தின் பின்னணியில் மட்டக்களப்பில் இயங்கி வந்த கிழக்கிலங்கை செய்தியாளர் ச ங்கம் இருந்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பங் காளி கட்சி ஒன்றின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்த கருத்திலிருந்து இதனை ஆரம்பிக்கலாம் என எண்ணு கிறேன்.

*****

# 08 முதலாவது பிராந்திய செய்தியாளர் சங்கம்

பத்திரிகையாளர்களை கொண்ட ஒரு சங்கத்தினால் அரசியல் கட்சி தலைவர்களை ஒன்றிணைக்கும் சக்தி உண்டா, என்ற கேள்விகளும் பலருக்கும் எழலாம்.

எனவே கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் அதன் பின்னணிகள் பற்றி அறிந்து கொண்டால் மேலே எழுப்பபடும் கேள்விக்கு விடை கிடைக்கலாம்.



கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் 1981ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலங்கையில் அக்காலத்தில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் என்ற அமைப்பே கொழும்பில் இருந்தது. அந்த அமைப்பு தமிழ் பத்திரிகையாளர்கள் பற்றி அக்கறைப்பட்டது கிடையாது. பிராந்திய பத்திரிகையாளர்களுக்கு என எந்த ஒரு சங்கமும் இருக்கவில்லை.

1980களில் தமிழ் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் ஆரம்பமாகியிருந்தது. இது பற்றி கொழும்பில் உள்ள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் அக்கறைப்பட்டது கிடையாது. தமிழ் பத்திரிகையாளர்கள் மீதான நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு தமிழ் பத்திரிகையாளர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்து அப்போது மட்டக்களப்பில் இருந்த பத்திரிகையாளர்கள் மத்தியில் எழுந்திருந்தது.

இக்காலத்தை போல நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் அப்போது இருக்கவில்லை. ஆளுக்கொரு இணையத்தளங்களும் இருக்கவில்லை.

அக்காலப்பகுதியில் வீரகேசரி, தினகரன், தினபதி ஆகிய தமிழ் பத்திரிகைகள் கொழும்பிலிருந்தும் ஈழநாடு யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவந்தன. சண், டெயிலி நியூஸ், ஐலண்ட் ஆகிய ஆங்கில பத்திரிகைகள் வெளிவந்தன. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் வானொலி சேவைகள் மட்டுமே இருந்தன. 1981 ஆம் ஆண்டு ரூபாவாஹினி தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. தனியார் வானொலிகளோ தொலைக்காட்சிகளோ இருந்ததில்லை. மிக சொற்பமான செய்தியாளர்களே இருந்தனர்.

மாவட்ட செய்தியாளர் அலுவலக செய்தியாளர் உதவி ஆசிரியர் என்ற நிலைகளை அடைவதற்கு பல படிகளை தாண்ட வேண்டியிருந்தது. ஒரு பிராந்திய செய்தியாளரின் செய்தி பிரசுரமாகிறது என்றால் பல நக்கீரர்களின் கைகளை தாண்டியே அச்சுக்கு செல்லும்.

தொலைநகல் மற்றும் கணணி பயன்பாடுகள், மின்னஞ்சல் வசதிகள் எதுவும் கிடையாது. தொலைபேசி மூலமும் கடித மூலமுமே அப்போது செய்திகளை அனுப்பி வந்தோம்.

இந்நிலையில் மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரையும் இணைத்து கிழக்கு மாகாணத்திற்கான சங்கம் ஒன்றை உருவாக்குவது என மட்டக்களப்பில் இருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் இணக்கம் காணப்பட்டது.

அப்போது தமிழ் பத்திரிகையாளர்கள் முஸ்லீம் பத்திரிகையாளர்கள் என்ற பிரிவு கிடையாது. அனைவரும் தமிழ் பத்திரிகையாளர்கள் என்ற வட்டத்திற்குள்ளேயே அடங்கியிருந்தனர்.

*இதற்கான முயற்சியில் அப்போது இலங்கை ஒலிபரப்பு கூட் டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளராக இருந்த செல்லையா நாகராசா ஈடுபட்டார். (அவர் இப்போது சட்டத்தர ணியாக ஒஸ்ரேலியாவில் வசித்து வருகிறார்)*

*அவருக்கு உதவியாக நான், நித்தியானந்தன், உதயகுமார் ஆகியோர் செயற்பட்டோம்.*

*கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் அங்குரார்ப்பண கூட்டம் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மண்டபத்தில் 1981ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் இடம்பெற்றது.*

*அதன் தலைவராக பி.ஜோசப் தெரிவு செய்யப்பட்டார், தினபதி சண் பத்திரிகைகளின் மட்டக்களப்பு செய்தியாளராக இருந்த இவர் அந்நாட்களில் சுகுணம் ஜோசப் என அறியப்பட் டவர். அக்காலத்தில் சுகுணம் அவர்களும் தனது கணவருடன் இணைந்து பத்திரிகையாளராக பணியாற்றினார். பின்னர் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.*

*செயலாளராக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்தி யாளர் செல்லையா நாகராசா தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கை வானொலியின் செய்திவாசிப்பாளராகவும் இருந் தார். 1980காலப்பகுதியில் இவரின் குரலை பலரும் கேட்டி ருப்பார்கள். பொருளாளராக லேக்கவுஸ் பத்திரிகையாளர் அந்தோனிப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக திருகோணமலை வீரகேசரி செய்தியாளர் இரத்தினலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். உபசெயலாளராக நான் தெரிவு செய் யப்பட்டேன்.*

*அக்காலப்பகுதியில் தினபதி பத்திரிகை தமது செய்தியாளர் களை பத்திரிகையாளர் சங்கங்களில் இணைவதற்கு அனுமதிப் பதில்லை. பத்திரிகையாளர் சங்கங்களில் இணைந்தால் தமது*

பத்திரிகையிலிருந்து நீக்கிவிடுவோம் என தினபதி பத்திரிகை நிர்வாகம் எச்சரித்திருந்தது.

ஆனால் ஜோசப் அவர்கள் இந்த எச்சரிக்கையை மீறியே கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவரானார். ஏனைய பத்திரிகையாளர்களை போல ஜோசப் அவர்களில் இலகுவில் கைவைக்க முடியாது என்பது தினபதி நிர்வாகத்திற்கு தெரியும்.

ஜோசப் 1983ஆம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போனவர்களுக்காக பல்வேறு பணிகளை ஆற்றினார். இதன் மூலம் அவர் மட்டக்களப்பு மக்களின் நன்மதிப்பை பெற்றார். 1983ஆம் ஆண்டின் பின் மட்டக்களப்பில் படையினரால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ மக்கள் பிரதிநிதிகள் யாரும் இருக்கவில்லை.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த செ.இராசதுரையும் கல்குடா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தேவநாயகமும் ஆளும் கட்சியில் அமைச்சர்களாக இருந்தனர். இதனால் படையினரின் கைதுகள் படுகொலைகள் பற்றி அவர்கள் கவனம் எடுப்பது கிடையாது.

மட்டக்களப்பு நகரில் இருந்த ஜோசப் அவர்களிடமே மக்கள் சென்று முறையிட்டனர். அவர் அப்போது அரசியல்வாதி கிடையாது. எனினும் பத்திரிகையாளர் என்ற ரீதியில் தனக்கு இருந்த அறிமுகங்களை வைத்து பொலிஸாரிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டு சிலரை விடுவித்தார். சமகாலத்தில் மட்டக்களப்பில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றிய ஆவணங்களை திரட்டி சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற மனித உரிமை அமைப்புக்களுக்கு வழங்கினார்.

ஜோசப் அவர்கள் 1990ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினரான பின்னர் செழியன் பேரின்பநாயகம் தலைவராக தெரிவானார். செயலாளராக நான் தெரிவு செய்யப்பட்டேன். முகமட்

பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார். 1991 ஆம் ஆண்டின் பின்னர் நடேசன் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

1990களின் பின் கடத்தல்கள் படுகொலைகள் அதிகரித்த காலத்தில் மட்டக்களப்பு சமாதான குழுவின் செயலாளராகவும் செழியன் பேரின்பநாயகம் பணியாற்றினார். மிகவும் நெருக்கடியான காலத்தில் மட்டக்களப்பில் செழியன் பேரின்பநாயகத்தின் பணி மக்களால் போற்றப்பட்டது.

மட்டக்களப்பு கத்தோலிக்க கழக மண்டபத்தில் சமாதான குழுவின் செயலகத்தின் அலுவலகம் இருந்தது. ஆயர் இல்லத்தின் உதவியுடன் அது இயங்கி வந்தது. காணாமல் போனவர்களின் உறவினர்களால் அந்த அலுவலகம் எப்போதும் நிறைந்திருக்கும்.

1993ஆம் ஆண்டு செழியன் பேரின்பநாயகம் மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு மேயராக தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் ஏ.எல்.எம்.சலீம் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். நான் தொடர்ந்து செயலாளராக இருந்தேன், நடேசன் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார்.

1999ஆம் ஆண்டு அச்சங்கத்தின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன், செயலாளராக சண்.தவராசாவும் உபதலைவர்களாக நடேசன், ஜெயானந்தமூர்த்தி ஆகியோரும், பொருளாளராக அரியநேத்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். ஆலோசகர்களாக கோபு ஐயாவும் (எஸ்.எம்.கோபாலரத்தினம்) சிவராமும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஜோசப் பரராசசிங்கம், செழியன் பேரின்பநாயகம், ஜெயானந்தமூர்த்தி, அரியநேத்திரன் என மக்கள் பிரதிநிதிகளையும் உருவாக்கியிருக்கிறது.

பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்குள் மட்டுமன்றி அரசியல் கருத்தரங்குகளையும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்த தொடங்கியது.

மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் முக்கிய உறுப்பினராக இருந்தது.

மன்று என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் ஸ்தாபகரான மனோ இராசசிங்கம் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்கியதுடன் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கும் இடவசதியை வழங்கினார்.

மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மாதாந்தம் கருத்தரங்குகளை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்தியது. மனித உரிமை விடயங்கள், பயங்கரவாத தடைச்சட்டம், உட்பட மாதாந்தம் கருத்தரங்குகளை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்தியது. இதற்கு கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் உட்பட கிழக்கு பல்கலைக்கழக சமூகம், மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சி கலாசாலை நிர்வாகம் ஆகியன கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பெருமளவு ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சி கலாசாலை நிர்வாகம் மாதாந்தம் கருத்தரங்குகள் கலந்துரையாடல்களை நடத்த மண்டபத்தை ஒதுக்கி தந்தது.

மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஆயர் இல்லத்தின் கீழ் இயங்கிய எகெட், மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், சரீரம் உட்பட அரசசார்பற்ற நிறுவனங்கள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் நடவடிக்கை

களுக்கு உதவிகளை வழங்கின.

மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய செயலாளராக இருந்த அ.செல்வேந்திரன் எமது செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர்கள் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட தலைவர் சட்டத்தரணி தமிழ்மாறன், கொழும்பில் உள்ள மனித உரிமைகள் இல்ல பணிப்பாளர் கந்தசாமி மற்றும் ஊடகவியலாளர் எஸ.;ஜே.திசநாயகம், மற்றும் சட்டத்தரணிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்திய கருத்தரங்குகளுக்கு வளவாளர்களாக வருகை தந்தனர்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் நடைபெறும் சமகாலத்தில் சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைமை ஒன்று இருக்க வேண்டும் என்பது இந்த கருத்தரங்குகளில் வலியுறுத்தப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களையே சர்வதேசம் அங்கீகரிக்கும். எனவே உறுதியான தமிழ் அரசியல் தலைமை ஒன்று உருவாக வேண்டும் என்ற எண்ணக்கரு உருவானது.

இந்நிலையில் இந்த பணிகளை தனியே கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் முன்னெடுப்பதை விட கிழக்கு பல்கலைக் கழக ஆசிரிய சங்கம், மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் எல்லோரும் சேர்ந்து மக்களை அரசியல் மயப்படுத்துவது, தமிழ் அரசியல் தலைமை ஒன்றை உருவாக்குவது போன்ற பணிகளை முன்னெடுக்கலாம் என எண்ணி ஒரு அமைப்பை உருவாக்கும் நோக்கில் மட்டக்களப்பு கத்தோலிக்க கழக மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த கூட்டத்திற்கு

நான் தலைமை தாங்கினேன். அந்த கூட்டத்தில் பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு தமிழர் மறுமலர்ச்சிக்கழகம் என்று அதற்கு பெயர் சூட்டப்பட்டது. அதன் இணைப்பாளர்களாக கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க செயலாளர் தம்பையாவும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க செயலாளர் சண்.தவரா சாவும் நியமிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல்களில் முஸ்லீம்கள் தேர்தலில் வாக்களிக்க ஆர்வம் காட்டும் அளவிற்கு தமிழ் மக்கள் ஆர் வம் காட்டுவதில்லை, எனவே இது தொடர்பான விழிப்புணர்வு வேலைகளை கிராமமட்டத்தில் செய்வதென முடிவு எடுக்கப்பட் டது.

வாழைச்சேனை தொடக்கம் கல்லாறு வரை கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. மக்களை அரசியல்மயப்படுத்தும் கருத்தரங் குகளில் சிவராம், நடேசன், ஜெயானந்தமூர்த்தி, தவராசா, கிழக்கு பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலா நிதி கெனடி விஜயரத்தினம், மட்டக்களப்பு மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் ஒன்றிய செயலாளர் செல்வேந்திரன், ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

எனினும் சில நெருக்கடிகள் காரணமாக தமிழர் மறுமலர்ச்சி கழகம் இயங்க முடியாமல் போனது.

எனினும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தமிழ் அரசி யல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடத்தியதுடன் தமிழ் அரசியல் தலைமை ஒன் றின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

*****

# 09 தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தோற்றம்

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஏற்பட்டில் மட்டக் களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் மாதாந்தம் கருத்தரங்குகள் கூட்டங்கள் நடைபெற்றன.



2001 செப்டம்பர் 22ஆம் திகதி சனிக்கிழமை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மாவை சேனாதிராசாவை அழைத்திருந்தோம்.

இந்த கருத்தரங்கு முடிந்த பின் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையின் வகுப்பறை ஒன்றில் மாவை சேனாதிராசா, ஜோசப் பரராச சிங்கம், செல்வராசா ஆகியோருடனான சந்திப்பு இடம்பெற்றது. இதில் குறிப்பிட்ட சிலர் மட்டும் கலந்து கொண்டனர். இதில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்றும் நடக்க இருக்கும் தேர்தலில் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிடுவதால் ஏற்படும் பின்னடைவுகள் பற்றியும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு கூறப்பட்டது. தமிழ் கட்சிகளின்

கூட்டில் இணைந்து கொள்வதில் பிரச்சினை இல்லை, ஆனால் தமிழ் இயக்கங்கள் மீது மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். அவர்களுடன் நாங்கள் சேர்ந்தால் எப்படி மக்கள் எங்களை ஏற்றுக்கொள்வார்கள் என ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.

தமிழ் இயக்கங்கள் செய்த படுகொலைகளை எப்படி தமிழ் மக்கள் மறப்பார்கள். அப்படி பட்டவர்களுடன் நாங்கள் எப்படி சேர்வது என ஜோசப் பரராசசிங்கம் கூறினார். இதனால் கோபமடைந்த சிவராம் அந்த இடத்தை விட்டு சென்று விட்டார். தொடர்ந்து நடந்த உரையாடலில் மாவை சேனாதிராசா எதிர்காலத்தில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார். இந்த விடயத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையில் பேசி ஒரு முடிவுக்கு வருவோம் என்றும் கூறினார்.

இந்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற பேச்சு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் மட்டக்களப்புக்கு வந்து சில சந்திப்புக்களை நடத்தினர்.

2001 ஒக்டோபர் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சி தலைவர் அ.விநாயகமூர்த்தி, செயலாளர் ந.குமரகுருபரன் ஆகியோரை கொழும்பில் குமார் பொன்னம்பலத்தின் வீட்டில் சிவராம், கெனடி விஜயரத்தினம், ஜே.எஸ்.திசநாயகம், எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் சந்தித்தனர். திருமதி குமார் பொன்னம்பலம் அவ்வீட்டில் இருந்த போதிலும் அப்பேச்சுகளில் கலந்து கொள்ளவில்லை.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட கெனடி விஜயரத்தினம் பின்வருமாறு கூறினார்.

தமிழ் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிட்டாலும் தமது கட்சி

*யின் சின்னமான சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று நிபந்தனையை விநாயகமூர்த்தி முன்வைத்தார். தமது கட்சியே மூத்த கட்சி என்றும் ஏனைய கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி,ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியன பிற்பட்ட காலத்தில் வந்த இளைய கட்சிகள் என்றும் எனவே மூத்த கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியே தமிழ் கட்சிகளுக்கு தலைமை தாங்க வேண்டும் என்றும், தமது கட்சியின் கீழ் தமது கட்சி சின்னத்திலேயே அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார்.*

*இது எப்படி சாத்தியமாகும், கிழக்கில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் ஒரு போதும் வெற்றி பெற்றதும் கிடையாது, வடக்கிலேயே தேர்தல்களில் போட்டியிட்டு வந்திருக்கிறது. இந்நிலையில் இது நியாயமற்ற கோரிக்கை என சிவராமும் ஏனையவர்களும் கூறினர். இதன் பின்னர் அப்படியானால் யாழ். மாவட்டத்தில் தமது கட்சி சின்னத்தில் தமிழ் கட்சிகள் போட்டியிடலாம், ஏனைய மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடலாம். இதற்கு சம்மதிக்கவில்லை என்றால் தமது கட்சி யாழ்ப்பாணத்தில் தனித்து போட்டியிடும் என விநாயகமூர்த்தி கூறினார்.*

*இந்நிலையில் சிவராமுக்கும் விநாயகமூர்த்திக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியது. இதனால் கோபமடைந்த சிவராமும், திசநாயகமும் எழுந்து சென்று வெளியில் பேசிக்கொண்டிருந்தனர்.*

*விநாயகமூர்த்தி அடிக்கடி எழுந்து சென்று உள்ளே இருந்த திருமதி குமார் பொன்னம்பலத்திடம் பேசிவிட்டு வந்தார்.*

*தமிழ் கட்சிகளை இணைப்பது உறுதியாகி விட்டது. நீங்கள் இதற்கு முட்டுக்கட்டை போட்டால் அதன் விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி வரும் என நான் (கெனடி) கூறியபோது விநாயகமூர்த்தி பதற்றம் அடைந்தவராக காணப்பட்டார். நாங்களும்*

எழுந்து வந்து விட்டோம் என கெனடி கூறினார்.

ஆனால் குமரகுருபரன் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் திம்பு கோட்பாடு, தன்னாட்சி என்பவற்றோடு விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என தாம் வலியுறுத்திய போது கோபமடைந்த சிவராம் எழுந்து சென்று விட்டார் என தெரிவித்திருந்தார். ஆனால் இரு தினங்கள் கழித்து தாம் யாழ்ப்பாணத்தில் தனித்தே போட்டியிடப் போவதாக வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அ.விநாயகமூர்த்தி அறிவித்தார். இதனால் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இணையும் முயற்சிகளில் இழுபறிகள் தொடர்ந்தன.

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் ஆரம்பத்தில் மட்டக்களப்பில் நடைபெற்றாலும் இறுதி சந்திப்புக்களும் முடிவுகளும் கொழும்பில் எடுக்கப்பட்டது.

நான்கு கட்சிகளையும் அழைத்து பேசுவதற்காக கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் கொழும்பு இந்துமா மன்றத் தலைவர் கைலாசபிள்ளை, கந்தையா நீலகண்டன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்திற்கான கொழும்பு அலுவலக திட்ட உத்தியோகத்தராக இருந்த நிமலன் கார்த்திகேயன், தில்லைக் கூத்தன், ஜெயபாலசிங்கம், வடிவேற்கரசன், ஆகியோருடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளின் தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலேயே நான்கு கட்சிகளுக்கிடையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள், பற்றி ஆராயப்பட்டது.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள், தாயகக்கோட்

பாடு, விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் வலியுறுத்தியது.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள், தாயகக்கோட்பாடு என்பனவற்றை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ந்துக் கொண்டாலும் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என சிலர் வாதிட்டனர். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவராக இருந்த ஆனந்தசங்கரி முக்கியமானவர். விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் யார், அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இல்லையா என்ற கேள்வியை எழுப்பினார். அவர் இன்றுவரை அக்கொள்கையிலிருந்து மாறவில்லை.

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதற்கு ரெலோ தலைவர் என்.சிறிகாந்தாவும் எதிர்ப்பு தெரிவித்தார்.

நான்கு கட்சிகளும் இணைந்து ஒரு கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதா அல்லது நான்கு கட்சிகளும் கூட்டாக இயங்குவதென ஒப்பந்தம் செய்து அதனை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பதா என்ற விவாதமும் இடம்பெற்றது.

தனியான ஒரு கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில்லை என்றும் நான்கு கட்சிகளின் கூட்டாக இயங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இறுதியில் நான்கு கட்சிகளும் ஒப்பந்தம் செய்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பது என முடிவாகியது. ஆனால் விடுதலைப்புலிகளே தமிழ்

மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் உறுதியாக இருந்தது. ஏனைய கட்சிகள் அதனை எதிர்த்து வந்தன. இது பெரும் பிரச்சினையாக காணப் பட்டது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த கூட்டத்தை தொடர்ந்து தொடர்ச்சியாக கொள்ளுப்பிட்டியில் உள்ள தொழி லதிபர் எஸ்.வடிவேற்கரசன் அவர்களின் வீட்டில் சந்திப்புக்கள் நடைபெற்றன.

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என தேர் தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும், அவ்வாறு கூறிப்பிட தேவையில்லை என ஏனைய கட்சிகளும் முரண்பட்டுக் கொண்டிருந்தன. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக வடிவேற்கரசனின் வீட்டிற்கும் குமார் பொன்னம்பலத்தின் வீட்டிற்கும் தான் மாறி மாறி ஓடித் திரிந்ததாக அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் செய லாளர் நல்லையா குமரகுருபரன் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இறுதியாக விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநி திகள் என குறிப்பிடாவிட்டாலும் தமிழ் மக்களின் முக்கிய அரசி யல் அமைப்பு என குறிப்பிடலாம் என தமிழர் விடுதலைக் கூட் டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன் ஆலோசனை கூறினார்.

இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு 2001 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயம் சேர்க்கப்படவில்லை (ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 2004ஆம் ஆண்டு தேர்தல் விஞ் ஞாபனத்தில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி கள் என்ற விடயம் சேர்க்கப்பட்டிருந்தது.)

ஒரு வாரகாலமாக கொழும்பில் நடந்த சந்திப்புக்கள் பேச்சு

*வார்த்தைகளை அடுத்து 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி சனிக்கிழமை நான்கு தமிழ் கட்சிகளுக்கிடையில் வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கொள்ளுப்பிட்டியில் உள்ள தொழிலதிபர் எஸ்.வடிவேற்கரசன் அவர்களின் வீட்டில் செய்து கொள்ளப்பட்டது.*

*நான்கு கட்சிகளும் இணைந்து ஒரே கொள்கையின் அடிப் படையில் செயல்படுவது என்றும், தமிழர் விடுதலைக் கூட் டணியின் உதயசூரியன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடு வதென்றும், நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக செயல்படுவது என எடுக்கப்பட்ட முடிவையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தேர்தல் ஆணையாளருக்கு நான்கு கட்சி செயலாளர்களும் இணைந்து அறிவிப்பதென அந்த ஒப்பந்தத் தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரே கொள்கையின் கீழ் செயல் படும் அதேவேளை தங்கள் தங்கள் கட்சிகளின் தனித்துவங்க ளையும் தொடர்ந்து பேணுவது என்றும் இக்கட்சிகள் இணங்கி கொண்டன.*

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந் தன், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் செயலாளர் ந.குமரகுருபரன், ரெலோ கட்சியின் தலைவர் என்.சிறிகாந் தா,ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் எஸ்.வடிவேற்கரசன், நிமலன் கார்த்தி கேயன், கந்தையா நீலகண்டன் உட்பட கொழும்பு தமிழ் பிரமு கவர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.*

*நான்கு கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்றும் தமி ழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னம் தமது பொதுசின்னமாக இருக்கும் என்றும் தேர்தல் ஆணையாள ருக்கு இந்நான்கு கட்சிகளின் செயலாளர்களும் கூட்டாக அறி வித்திருந்தன.*

தமிழ் பிரதேசங்களில் பொருளாதார தடையை நீக்க வேண்டும், யுத்த நிறுத்தம் செய்து நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என ஆட்சிக்கு வரும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய விடயம் என ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு மாவட்டத்தில் வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டது.

2001ல் தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் பணிகளின் போது விடுதலைப்புலிகளுக்கு பங்கு இருக்கவில்லை, அவர்கள் இதில் தலையிடவும் இல்லை, ஆனால் 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின்னரே விடுதலைப்புலிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர் என அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த நல்லையா குமரகுருபரன் செவ்வி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

2001ஆம் ஆண்டு தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து விடுதலைப்புலிகள் அறிக்கை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தேர்தல் முடியும் வரை ஆதரவை வெளிப்படுத்தவில்லை என்றும் நல்லையா குமரகுருபரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆதரித்து அறிக்கை விட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியை பெறாவிட்டால் அது தமக்கு பாதகமாக அமைந்து விடும் என்ற காரணத்தினால் தான் விடுதலைப்புலிகள் ஆதரித்து அறிக்கை வெளியிடாமல் இருந்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

*****

# 10 வெருகலில் சிந்திய இரத்தம்

யுத்தம் நடைபெற்ற 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் கட்சிகளை இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கருக்கொள்ளப்பட்ட போதிலும் 2001ஆம் ஆண்டு பொதுத்தேர் தலில் முதல்தடவையாக தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ்,ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய நான்கு கட்சிகளும் போட்டியிட்டன. இந்த வேட்பாளர் தெரி வில் விடுதலைப்புலிகளின் தலையீடு இருக்கவில்லை. நான்கு கட்சிகளுமே யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தினார்கள்.



விடுதலைப்புலிகள் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உரு வாக்கினார்கள் என தற்போது கூறிவரும் சிலருக்கு இந்த விட யங்கள் எரிச்சலை ஊட்டலாம். ஆனால் 2002ல் சமாதான ஒப் பந்தம் செய்யப்பட்ட பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் அதிகரிக்க தொடங்கியது. இதன் உச்சக்கட்டமாக 2004ஆம் ஆண்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட போது தமிழ் தேசியக் கூட் டமைப்பின் வேட்பாளர்களில் பெரும்பாலானவர்களை விடுத லைப்புலிகளே தெரிவு செய்தனர். ஒவ்வொரு மாவட்டத்திற்கு மான வேட்பாளர் தெரிவு நடந்த சமயத்தில் கருணாவின் பிளவு

அறிவிக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் ஜோசப் பரராசசிங்கத்தை தவிர ஏனைய 7பேரையும் அப்போது விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம் பாறை தளபதியாக இருந்த கருணாவே தெரிவு செய்தார்.

மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் விடுதலைப்புலி களால் சிபார்சு செய்யப்பட்ட தங்கேஸ்வரி, சிவநாதன் கிசோர், கனகரத்தினம், ஆகியோர் இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முதல் தினத்தில் தான் கருணா பிரிந்து போகப்போவதாக அறிவிப்பு வெளியானது. இது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட வேட்பாளர்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யிருந்தது.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட இரு தினங்களின் பின் கரடியனாற்றில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்திற்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தமிழ் தேசியக் கூட் டமைப்பு வேட்பாளர்களை கருணா அழைத்திருந்தார். தனக்கு கீழ் உள்ள கிழக்கு தலைமையின் கீழேயே மட்டக்களப்பு அம் பாறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் செயற்பட வேண்டும் என்றும் வன்னித்தலைமையுடன் எந்த தொடர்பையும் வைக்க கூடாது என உத்தரவிடப்பட்டது. ஜோசப் பரராசசிங்கம் மட்டும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பிரபாகரன் தலைமை யிலான விடுதலைப்புலிகளின் தலைமையை அவர் நிராகரிக்க மறுத்து விட்டார். ஏனைய 7பேரும் கருணாவின் உத்தரவை ஏற் றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். ஜோசப் பரராசசிங்கம் ஏற்கனவே 14 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவருக்கான பாதுகாப்பு ஒன்று இருந்தது. அரசியல் தளம் ஒன்றும் இருந்தது. ஏனையவர்க

ளுக்கு இந்த அரசியல் தளமோ, பாதுகாப்போ இருக்கவில்லை. அவர்கள் கருணாவின் உத்தரவின் படியே செயற்பட்டார்கள்.

இவர்களில் ராசன் சத்தியமூர்த்தி, கிங்ஸ்லி இராசநாயகம் ஆகியோர் கருணாவின் அதிதீவிர விசுவாசிகளாக செயற்பட்டு, வன்னித்தலைமைக்கு எதிராக பிரசாரம் செய்து வந்தனர். விடு தலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை தவிர வேறு யாரையும் தான் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை என ஜோசப் பரரா சசிங்கம் அறிக்கை வெளியிட்டதையடுத்து கருணாவின் சீற்றம் அவரின் பக்கம் திரும்பியது. தேர்தல் முடியும் வரை அவர் வெளி யில் சென்று தேர்தல் பிரசாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட் டது. அவர் தங்கியிருந்த சுபராஜ் தியேட்டரில் விசேட அதிரடிப்ப டையினரின் பாதுகாப்புடன் முடங்க வேண்டிய நிலை ஜோசப் பரராசசிங்கத்திற்கு ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து போகப்போ வதாக கருணா அறிவித்த நாளிலிருந்து மட்டக்களப்பை விட்டு அவர் வெளியேறும் வரையான அந்த 42 நாட்கள் மட்டக்களப் பில் அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என தெரியாத காலமாக இருந்தது. நிமிடத்திற்கு நிமிடம் மாற்றங்களும், அச்சமூட்டும் சம்பவங்களும் நடைபெற்றன. சில இடங்களில் விடுதலைப்பு லிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக கருணா குழுவால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. சில இடங்களில் பிரபாகர னின் உருவப்பொம்மைகளும் எரிக்கப்பட்டன. கிழக்கு பல்க லைக்கழக மைதானத்திலும் சிலரால் விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தேர்தல் பிரசாரம் ஒரு புறம், விடுதலைப்புலிகளுக்கும், கரு ணாகுழுவுக்கும் இடையிலான மோதல் மறுபுறம், யார் விடுத லைப்புலிகளின் பக்கம்? யார் கருணாவின் பக்கம்? என அறிந்து கொள்ளமுடியாத திரிசங்கு நிலையில் மக்கள் இருந்தனர்.

அப்போது மட்டக்களப்பு பொதுமக்களின் மனநிலை எவ்

வாறு இருந்தது என்பதற்கு நான் கண்ட அனுபவம் ஒன்று பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

தாண்டவன்வெளியில் பத்திரிகை விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு தினசரி காலையில் நான் செல்வது வழக்கம், அக்கடையின் முகாமையாளராக இருந்தவர் வாசிப்பு பழக்கம் உடையவர். அரச திணைக்களம் ஒன்றில் வேலைபார்த்து ஓய்வு பெற்றவர். கருணாவின் பிளவு அறிவிக்கப்பட்டு அதற்கான காரணங்களையும் கூறி அறிக்கை வெளிவந்த அன்று அவரை சந்தித்தேன்.

கருணா கூறியிருக்கும் காரணங்கள் சரிதானே, மட்டக்களப்பை இவர்கள் இப்படிதான் புறக்கணித்து வருகிறார்கள் என சொன்னார். சுமார் ஒரு வாரகாலம் கழித்து அவரின் மன நிலை சற்று மாறியிருந்தது. கருணாவிலும் பிழை இருக்கிறது போல தெரிகிறது. வன்னி பக்கத்திலையும் பிழை தெரிகிறது. இரண்டு பக்கமும் பிரச்சினையை பேசித்தீர்த்திருக்கலாம் என்றார். அதன் பின் சுமார் ஒருமாதம் கழித்து அவரின் மனநிலை முற்றாகவே மாறியிருந்தது. கருணா கள்ளன். இவன் தன்னிலை இருக்கிற பிழைகளை மறைக்கிறதிற்காகத்தான் இப்படி செய்திருக்கிறான். என்ன இருந்தாலும் இவ்வளவு காலமும் கட்டிக்காத்த இயக்கத்தை உடைக்க நினைச்சிருக்க கூடாது என அவரின் கோபம் முழுவதும் கருணாவின் பக்கம் திரும்பியிருந்தது.

ஒரு மாதகாலத்தில் மக்களின் மனநிலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஊடகங்களும், சில தமிழ் ஊடகவியலாளர்களும்தான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி தினசரி ஒவ்வொரு பொது அமைப்பின் பெயரில் அறிக்கைகள் ஊடகங்களில் வெளிவரும். மக்களின் மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அறிக்கைகளும் செய்திகளும்

தொடர்ச்சியாக வெளிவந்ததன் பலன் சரியாக ஒரு மாதத்தில் மக்களின் ஆதரவை கருணா இழக்க வேண்டி ஏற்பட்டது.

கருணாவின் சதியை முறியடிப்பதில் கொழும்பிலிருந்து வெளி வந்த தினக்குரல், சுடர்ஒளி, சூரியன் எப்.எம் ஆகியன முக்கிய பங்கு வகித்தன. வீரகேசரியை பொறுத்தவரை ஞாயிறு பதிப்பு ஓரளவு கருணாவின்சதியை முறியடிப்பதற்கு ஒத்துழைத்தது.

மறுபுறம் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருந்தது. கருணா குழு ராசன் சத்தியமூர்த்தி, தங்கேஸ்வரி, இராசநாயகம் ஆகியோ ருக்கே அதிக ஆதரவை வழங்கினர். விருப்பு வாக்கில் ஒன்றை ராசன் சத்தியமூர்த்திக்கு வழங்க வேண்டும் என கருணாகுழு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கும் அறிவுறுத்தியிருந்தது.

இந்நிலையில் மார்ச் 30ஆம் திகதி காலையில் ராசன் சத்தி யமூர்த்தி அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். தேர்தல் பிரசாரத்திற்கு உதவி செய்வதாக வந்த இரு இளைஞர் களே அவரை வீட்டில் வைத்த சுட்டுக்கொன்றனர். இச்சம்பவம் கருணா தரப்பிற்கு பெரும் இழப்பாக அமைந்தது.

இந்த வேளையில் ராசன் சத்தியமூர்த்தி பற்றியும் குறிப்பிட வேண்டும். மலையகத்தை பூர்வீகமாக கொண்ட ராசன் சத்தி யமூர்த்தி மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவராக இருந்தவர். சிங்கள, ஆங்கில மொழிகளை பேசக் கூடியவர். 2001ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர்.

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த அலிசாகிர் மௌலானா, மௌனகுருசாமி, ராசன் சத்தியமூர்த்தி ஆகிய மூவரும் 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தையடுத்து விடுதலைப்புலிகளின் கிழக்கு தளபதி கருணாவுடன் நேரடியான உறவை வளர்த்துக் கொண்டனர்.

2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருணாவை கரடியனாறு அலுவலகத்தில் சந்தித்த போது விடுதலைப்போராட்டத்திற்கு மிகவும் ஆபத்தான பேர்வழிகளான ராசன் சத்தியமூர்த்தி, அலி காகிர் மௌலானா போன்றவர்களுடன் ஏன் உறவை வைத்தி ருக்கிறீர்கள் என கேட்ட போது கருணா அளித்த பதில் அதிர்ச்சி யாக இருந்தது.

எங்கள் பெடியள் கைது செய்யப்பட்டால் அல்லது கொழும் பிற்கு சென்று ஒரு அலுவலை முடிக்க வேண்டும் என்றால் உடனடியாக ராசன் சத்தியமூர்த்திதானே மறுக்காமல் உடன டியாக செல்கிறார். சில உதவிகளுக்கு ராசன் சத்தியமூர்த்தி போன்றவர்களைத்தானே நாட வேண்டியிருக்கிறது என செ ான்னார். கருணாவிற்கும், ராசன் சத்தியமூர்த்திக்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவு வளர்ந்திருக்கிறது என்பதை அப் போது உணர்ந்து கொண்டேன்.

ராசன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கருணா தரப்பிற்கு பெரும் இழப்பாக அமைந்தது. இதனையடுத்து கருணா தரப்பிற்கு தங்களுடன் இருக்கும் போராளிகள் மீதே சந்தேகம் ஏற்பட தொடங்கியது. கருணா தரப்புடன் போர் புரிந்து விடுதலைப்புலிகள் மீண்டும் மட்டக்களப்பை கைப்பற்றி னார்கள் என பலரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. கருணா மட்டக்களப்பை விட்டு செல்வ தற்கு காரணம் தன்னை சுற்றியிருந்த போராளிகளிலேயே நம் பிக்கை இழந்து அவர்களே தன்னை சுட்டு விடுவார்கள் என்ற சந்தேகம் எழுந்த போதுதான் கருணா அலிசாகிர் மௌலானா வின் உதவியுடன் மட்டக்களப்பை விட்டு சென்றார்.

மட்டக்களப்பை மீண்டும் விடுதலைப்புலிகள் மீட்பதற்கு அவர்கள் புரிந்த உளவியல் போர்தான் முக்கியகாரணமாகும். மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு சென்ற விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களான ரமேஷ், கௌசல்யன், தயாமோகன், ரம

ணன், இளந்திரையன் போன்றவர்கள் மட்டக்களப்பில் இருந்த போராளிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து கருணாவுடன் இருந்த தளபதிகள் சிலரின் மனங்களில் கூட மாற்றம் ஏற்பட்டிருந்தது. வன்னியிலிருந்த ரமேஷ் ஒரு தடைவ கூறும் போது மட்டக்களப்பில் கருணாவுடன் இருக்கும் போராளிகளில் 90வீதமானவர்கள் எங்களின் நேரடி தொடர்பில் இருக்கிறார்கள். நாங்கள் அங்கு சென்று இறங்கியதும் அந்த மாற்றத்தை புரிந்து கொள்வீர்கள் என தெரிவித்திருந்தார்.

ராசன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம், உட்பட சில சம்பவங்களால் கருணாவுக்கு யாரை நம்புவது? யாரை சந்தேகிப்பது என்ற பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டது.

2004 ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்த போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணாகுழுவின் ஆதிக்கமே இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் வெற்றிபெறுபவர்கள் தங்களின் பக்கமே நிற்பார்கள் என கருணா குழுவினர் பெரிதும் நம்பியிருந்தனர். அதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கூறி சில வேட்பாளர்களின் இலக்கங்களையும் விநியோகித்திருந்தனர்.

தேர்தல் முடிந்ததையடுத்து வென்னப்புவ என்ற இடத்தில் ஒரு கருத்தரங்கிற்காக சென்றிருந்தேன். அந்த கருத்தரங்கில் சிங்கள மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற அக்கருத்தரங்கில் சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் மட்டக்களப்பிலிருந்து சென்ற ஊடகவியலாளர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருந்தது. தற்கால அரசியல் நிலை பற்றி கலந்துரையாடல் நடைபெற்ற போது விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்ற விவகாரம் சூடுபிடித்திருந்தது. விரைவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் மட்டக்களப்பு வரும், கருணா வெளியேற வேண்டி ஏற்படலாம் என மட்டக்களப்பிலி

ருந்து சென்ற ஊடகவியலாளர்கள் தெரிவித்த போது அது நடக்காது, இனி விடுதலைப்புலிகள் தலையெடுக்க முடியாது என அனுராதபுரத்திலிருந்து வந்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார். கருணாவை ஒரு ஹீரோவாக சித்தரித்த சிங்கள ஊடகவியலாளர்கள் இனிமேல் கருணாவை வெல்ல முடியாது என தெரிவித்தனர்.

அந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் நான்கு முகாம்களாக பிரிந்து நின்றதை அவதானிக்க முடிந்தது.

சிங்கள ஊடகவியலாளர்கள் கருணாவின் கைஓங்கும், விடுதலைப்புலிகள் அழிக்கப்படுவார்கள் என தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து சென்ற தமிழ் ஊடகவியலாளர்கள் கருணா மட்டக்களப்பை விட்டு வெளியேற வேண்டி ஏற்படும். அங்கு மீண்டும் விடுதலைப்புலிகளின் பிரசன்னம்தான் இருக்கும் என்றனர்.

முஸ்லீம் ஊடகவியலாளர்கள் கருணாவையும் ஆதரிக்காத, விடுதலைப்புலிகளையும் ஆதரிக்காத அரச ஆதரவு போக்கை கொண்டவர்களாக காணப்பட்டனர். வடபகுதியிலிருந்து வந்த தமிழ் ஊடகவியலாளர்கள் எந்த பக்கமும் சாராத ஒரு நழுவல் போக்கையே கடைப்பிடித்தனர்.

கருத்தரங்கை முடித்துக்கொண்டு அம்பாறையை சேர்ந்த சில முஸ்லீம் ஊடகவியலாளர்களும், மட்டக்களப்பை சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களும் பிரத்தியேக வான் ஒன்றில் வந்து கொண்டிருந்தோம். அன்று காலையில் வெருகலுக்கு விடுதலைப்புலிகள் வந்து விட்டதாக கேள்விப்பட்டோம்.

பொலனறுவையிலிருந்து மட்டக்களப்பு செல்லும் பிரதான வீதி கருணா குழுவின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாகும். இதனால் ஓட்டமாவடிக்கு வந்ததும் முஸ்லீம் ஊடகவியலாளர்களை வானின் முன் ஆசனத்தில் அமர்த்தி விட்டு நாம் பின் ஆச

னங்களில் இருந்தோம்.

முன் ஆசனத்தில் முஸ்லீம் நண்பர் ஒருவர் இருந்ததால் கிரான் போன்ற இடங்களில் நின்றிருந்த கருணாகுழுவினர் நாங்கள் பயணம் செய்த வானை மறிக்கவில்லை.

அன்றிரவே விடுதலைப்புலிகளின் அணி வாகரையில் தரையிறங்கியது. அந்த தரையிறக்கத்தின் போது விடுதலைப்புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையில் சில இடங்களில் மோதல்கள் ஏற்பட்ட போதிலும் எதிர்பார்த்ததை விட இலகுவாக விடுதலைப்புலிகள் அப்பிரதேசங்களை கைப்பற்றிக்கொண்டனர்.

ஏற்கனவே தொடர்பில் இருந்த தளபதி ரமேஷ் போன்றவர்கள் வெருகல் ஊடாக வாகரைப்பிரதேசத்திற்குள் பிரவேசித்த போது அங்கு நிலை கொண்டிருந்த கருணா குழுவுக்கு ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பை செய்தனர். ரமேஷ்தான் அந்த அறிவிப்பை போராளிகளுக்கு விடுத்தார். தன்னுடைய தலைமையில் விடுதலைப்புலிகள் போராளிகள் வந்திருக்கிறோம், நீங்கள் எல்லோரும் சரணடையுங்கள் என அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் எதிர்ப்பை தெரிவிக்காது சரணடைந்தனர்.

அன்றிரவு வாகரையிலிருந்து கௌசல்யன் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு நாங்கள் வந்துவிட்டோம். வாகரைப்பிரதேசம் முழுமையாக எங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது. நாளை சரணடைந்த போராளிகளை பெற்றோரிடம் ஒப்படைக்கப்போகிறோம். நீங்கள் மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்களை அழைத்துக்கொண்டு வாருங்கள் என சொன்னார். மறுநாள் காலை மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்கள் சுமார் 6பேர் வாகரையை நோக்கி சென்றோம்..

பெரும் இரத்தகளரி இன்றி அந்த பிரதேசத்தை விடுதலைப் புலிகள் மீட்டுவிட்டார்கள் என்ற ஆத்மதிருப்தி ஏற்பட்டாலும்,

வாகரையிலிருந்து கதிரவெளி நோக்கி செல்லும் பாதையில் சகோதர மோதல்களால் சிந்திய இரத்தங்களையும், அடுத்தது என்ன நடக்கப்போகிறதோ என்ற ஏமாற்றங்கள், நம்பிக்கையீனங்கள் கலந்த முகங்களையும் தான் காணமுடிந்தது.

அந்த மோதல்களில் இரு தரப்பிலும் கொல்லப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு என சென்றவர்கள்தான். கொல்லப்பட்டவர்கள் கருணா குழுவாக இருந்தாலும் சரி, விடுதலைப்புலிகள் தரப்பாக இருந்தாலும் சரி அனைவரும் தமிழீழ போராட்டத்திற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ தேசத்தை மீட்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையோடு சென்றவர்கள்தான்.

ஆனால் ஒரே இலட்சியத்தோடு பயணித்தவர்கள் இன்று?

அந்த இலட்சிய வேங்கைகளின் இரத்தங்களைத்தான் வாகரை வீதிகளில் என்னால் காணமுடிந்தது.


வாகரை தேவாலயத்தில் ரமேஷ் நின்றார். எங்களைக்கண்டதும் அண்ணை நாங்கள் வந்து விட்டோம் என நம்பிக்கையோடு சொன்னார்.

ஆனால் அந்த நம்பிக்கைகள் நிலைக்கவில்லை. யாரும் எதிர்பார்க்காத இழப்புக்கள்,.. அந்த மண்ணில் வாழ முடியாத துக்ககரமான சம்பவங்கள் அதன் பின்னர்தான் இடம்பெற்றது.

*****

# 11 பிளவுகளை ஏற்படுத்திய கிழக்குப் பல்கலைக்கழகம்

*கிழக்கு பல்கலைக்கழகம் பொங்குதமிழ் போன்ற எழுச்சிகளுக்கு களம் அமைத்து கொடுத்தது மட்டுமன்றி மட்டக்களப்பின் பாரம்பரிய கலாசாரம் மற்றும் கலைவடிவங்களுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் களமாகவும் விளங்கி வருகிறது. மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலுடன் அது துன்பமோ மகிழ்ச்சியோ இரண்டற கலந்த வரலாறு கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு உண்டு.*



*1990ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்த வேளையில் மட்டக்களப்பு தொடக்கம் வாழைச்சேனை வரையான சுமார் 60ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றிக் கொள்ள அடைக்கலம் புகுந்த இடமும் இந்த கிழக்கு பல்கலைக்கழகம் தான்.*

*கிழக்கு பல்கலைக்கழகம் 60ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களை கொண்ட அகதிமுகாமாக மாறியது. அந்த மக்களுக்கு உணவு தொடக்கம் அனைத்து வசதிகளையும் வழங்குவதில் பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி ரி.ஜெயசிங்கம், (தற்போது உபவேந்தராக இருப்பவர்) வைத்தியகலாநிதி சிவலிங்கம், ஆகியோர் இரவு பகலாக உழைத்தனர்.*

இராணுவம் அந்த முகாமை சுற்றிவளைத்த போது அந்த மக்க ளுக்கு பாதுகாப்பு அரணாக நின்றவர்கள் இந்த மூவரும் தான்.

05.09.1990 அன்று கொம்மாதுறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும், மட்டக்களப்பு நகரில் இருந்த முனாஸ் தலைமையிலான இராணுவ புலனாய்வு பிரிவினரும், மோகன் தலைமையிலான புளொட் இயக்கத்தினரும், மஜீத் தலைமையிலான முஸ்லீம் ஊர்காவல் படையினரும் அகதி முகாமை சுற்றிவளைத்தனர்.

அங்கிருந்த 60ஆயிரம் மக்களில் 15க்கும் 45வயதிற்கும் இடைப்பட்ட இளம் ஆண்கள் 158பேரை தேர்ந்தெடுத்து பஸ்க ளில் ஏற்றிச் சென்று நாவலடி இராணுவ முகாமில் வைத்து படுகொலை செய்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் தாங்கள் யாரை யும் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் மறுத்திருந்த னர். ஆனால் அகதி முகாமிற்கு வந்து அப்பாவி பொதுமக்களை கைது செய்து சென்றது யார் என்ற விபரங்களை ஆதாரங்களு டன் பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி த.ஜெயசிங்கம், கலாநிதி சிவலிங்கம் ஆகியோர் 1994ல் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தனர். கல்வி நடவடிக்கைக ளில் மட்டுமன்றி மட்டக்களப்பின் சமூக நலனிலும் கிழக்கு பல்க லைக்கழகம் அக்கறையுடன் செயற்பட்டது.

1981ஆம் ஆண்டு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய கட்டிடத்தில் மிகக்குறைந்த வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியை கிழக்கு பல்கலைக் கழகம் என்ற அந்தஸ்த்திற்கு உயர்த்துவதற்கு உழைத்தவர்க ளில் பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி ரவீந்திரநாத், கலாநிதி ஜெயசிங்கம், முக்கியமானவர்களாகும்.

ஒற்றுமையாக இருந்த கிழக்கு பல்கலைக்கழகம் என்ற தேன்

கூட்டில் 1995ஆம் ஆண்டு நடந்த உபவேந்தர் தெரிவுடன் பிரதே சவாதம் என்ற முதலாவது கல் வீசப்பட்டது. ஆரம்பத்தில் சிறிது சிறிதாக புகைந்து கொண்டிருந்த பிரதேசவாத தீ கொழுந்து விட்டு எரிய தொடங்கியது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இரு தரப்பினர் தங்கள் கதிரைகளை தக்க வைத்துக்கொள்வதற்காக, கதிரை களை பிடிப்பதற்காக நடந்த போட்டியில், இரு தரப்புமே நாடி யது விடுதலைப்புலிகளைத்தான்.

கிழக்கு பல்கலைக்கழகம் 1981ஆம் ஆண்டு கிழக்கு பல்க லைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் விஞ்ஞான, விவசாய பீடங்களே ஆரம்பிக்கப்பட்டன. பேரா சிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி ரவீந்திரநாத், கலாநிதி ஜெயசிங்கம் போன்றவர்கள் பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே இணைந்து கொண்டவர்கள். கிழக்கு பல்கலைக் கழகமாக தரமுயர்த்தப்பட்ட பின் 1990களில் கலை, வர்த்தக பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வெறும் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் என்ற சில கட்டிடங்களுடன் காணப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக கல்லூரியில் தொடர்ந்த அவர்களின் பணி எளிதான ஒன்றல்ல.

1990களின் பின்னர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் யாழ்ப் பாணம், மட்டக்களப்பு என்ற பிரதேச வாதம் வளரத்தொடங்கி யது. அதன் உச்சக்கட்டம் 1995ஆம் ஆண்டு உபவேந்தர் தெரி வின் மூலம் பூதாகரமாக வெடித்தது.

மனோ சபாரத்தினம், ரவீந்திரநாத், ரகுராகவன், செந்தில்மோ கன், என யாழ்ப்பாண வாத குழு.

அடுத்தது யுவி தங்கராசா, திருச்செல்வம், என மட்டக்களப்பு வாத குழு.

இந்த கோஷ்டி மோதல்களின் உச்சக்கட்டம் 1995ஆம்

ஆண்டு உபவேந்தர் தெரிவு எனலாம்.

1995ல் உபவேந்தரை நியமிப்பதற்காக கிழக்கு பல்கலைக்கழக பேரவை மூவரை தெரிவு செய்திருந்தது. இதில் யுவி தங்கராசா, மௌனகுரு மற்றும் சித்திரலேகா, ஆகியோர் மட்டக்களப்பை சேர்ந்த வணபிதா பேராசிரியர் இராஜேந்திரம் அவர்களை உபவேந்தராக நியமிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் செந்தில்மோகன் போன்றவர்களின் கை கிழக்கு பல்கலைக்கழக பேரவையில் ஓங்கியிருந்தது. இதனால் கிழக்கு பல்கலைக்கழக பேரவை பேராசிரியர் இராஜேந்திரம் அவர்களின் பெயரை நிராகரித்து விட்டு பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி ரவீந்திரநாத், ரகுராகவன் ஆகியோரின் பெயர்களை சிபார்சு செய்திருந்தது. இது கிழக்கு பல்கலைக்கழக வட்டாரத்தில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

பல்கலைக்கழக பேரவையின் இந்த முடிவை வாபஸ் பெற வேண்டும் என கிழக்கு பல்கலைக்கழக மாணவர் பேரவை பெரிய அளவில் வெகுஜன போராட்டத்தை ஆரம்பித்திருந்தது. இந்த பிரச்சினை கிழக்கு பல்கலைக்கழகத்திற்குள் மட்டுமல்லாது மட்டக்களப்பு எங்கும் பரவியது.

மட்டக்களப்பில் உள்ள பாடசாலை மாணவர்களும் வகுப்புக்களை பகிஷ்கரித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு எங்கும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த துண்டுபிரசுரங்கள் சிலவற்றில் படுமோசமான பிரதேசவாதமும் காணப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக ஆசிரிய சங்கமும் இந்த பிரச்சினையால் இரண்டாக பிளவு பட்டிருந்தது. கிழக்கு பல்கலைக்கழக ஆசிரிய சங்க தலைவர் செந்தில்மோகன் பல்கலைக்கழக பேரவையின் தீர்மானத்திற்கு ஆதரவாக செயற்பட்டார். ஆனால் செயலாளர் கெனடி விஜயரத்தினம் பேரவை தனது முடிவை

மீளப்பெற்று தகுதியானவர்களை உள்வாங்க வேண்டும் என கோரியிருந்தார்.

மாணவர்களின் போராட்டங்களால் கிழக்கு பல்கலைக்கழகம் இயங்கமுடியாத நிலைக்கு சென்றிருந்தது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்ற பிரதேசவாதம் தலைதூக்கி இருந்தது.

மட்டக்களப்பு பொது அமைப்புக்களும் உபவேந்தர் தெரிவில் மட்டக்களப்பை சேர்ந்த பேராசிரியர் இராசேந்திரம் சேர்க்கப்படாமை குறித்து கண்டங்களை தெரிவித்திருந்தன.

கிழக்கு பல்கலைக்கழக பிரச்சினையாக அன்றி மட்டக்களப்பின் முக்கிய பிரச்சினை ஒன்றாக இது மாறியிருந்தது.

இதனை தொடர்ந்து மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கரிகாலன் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வந்து கூட்டம் ஒன்றை நடத்தினார். அந்த கூட்டத்தில் பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களை கடும் தொனியில் எச்சரித்தார். கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு நீங்கள் தான் காரணம் என அறிகிறோம். இனிமேலும் அவ்வாறு நடந்தால் நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என எச்சரித்திருந்தார். கிழக்கு பல்கலைக்கழக விடயங்களில் விடுதலைப் புலிகள் நேரடியாக தலையிடும் சம்பவங்கள் தீவிரமடைந்தன.

மட்டக்களப்பை சேர்ந்த ஒருவரின் பெயரை நிராகரித்து விட்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூவரை தெரிவு செய்திருக்கிறார்களே என சிலர் போர்க்கொடி தூக்கினர். அதில் நியாயமும் இருந்தது.

அப்போதுதான் இந்த இரு கோஷ்டிகளுமே விடுதலைப்புலிகளை நாடினர்.

பேராசிரியர் இராஜேந்திரம் உபவேந்தராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து ரவீந்திரநாத், மனோ சபாரத்தினம் தரப்பு

பழிவாங்கப்பட்டனர். அவர்கள் மனோ மாஸ்ரரை நாடினர். ஒரு தரப்பு கருணாவிடமும் மறுதரப்பு மனோ மாஸ்ரரிடமும் கோள் மூட்டும் படலம் ஆரம்பமானது. இந்த வேளையில் மனோ மாஸ் ரரும், கருணாவும் கிழக்கு பல்கலைக்கழக விடயங்களில் தத்த மது தரப்புக்காக மூக்கை நுழைக்க ஆரம்பித்தனர்.

பேராசிரியர் இராஜேந்திரம் உபவேந்தராக நியமிக்கப்பட்ட போது என்னைப் போன்றவர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு இருந் தது. அவர் ஒரு வணபிதாவாக இருந்தவர், நேர்மையாக இருப் பார், பழிவாங்க மாட்டார், ஊழல்களுக்கு இடம்கொடுக்க மாட்டார் என எல்லோரும் எதிர்பார்த்தார்கள். கிழக்கு பல்க லைக்கழகத்திற்கு ஒரு பொற்காலம் ஏற்படும் என பலரும் எதிர் பார்த்தார்கள். ஆனால் நடந்தது எதிர்மறைதான்.

அவருக்கு சார்பானவர்களின் கை ஓங்கியது.

தனது நியமனத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள் என யார் யாரை எண்ணினாரோ அவர்களை பழிவாங்க ஆரம்பித்தார். முக்கியமாக கலாநிதி ஜெயசிங்கம் உபவேந்தரால் பழிவாங்கப் பட்டார்.

கலாநிதி ஜெயசிங்கம் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை செய்திருந்தார். பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நீதிவிசாரணை குழு ஒன்று இதற்காக நியமிக்கப்பட்டது. இந்த விசாரணை குழு விசாரணைக்கு ஒரு முறை நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

விடிவானம் பத்திரிகை வெளிவந்த காலத்தில் விஞ்ஞான பீடத்தில் வெற்றிடங்களுக்காக உள்ளக ரீதியில் விளம்பரம் கோரப்பட்டிருந்தது. அந்த விளம்பரம் விடிவானம் பத்திரிகைக்கு கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் வழங்கப்படாத போதி லும் பொது மக்களின் நன்மை கருதி வெற்றிடங்கள் தொடர் பாக ஒரு செய்தியாக போடும் படி விஞ்ஞான பீடாதிபதி ஜெயசி

ங்கம் விடிவானம் பத்திரிகைக்கு தந்திருந்தார். அப்போது அந்த பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நான் பணியாற்றினேன். அந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டம் கட்டி அச் செய்தியை வெளியிட்டிருந்தேன்.

மட்டக்களப்பில் உள்ள தகுதியானவர்கள் அதற்கு விண்ணப் பிப்பதற்கு வசதியாக இருக்கும் என நல்ல தகவலை வழங்கும் நோக்குடன் அதனை முன்பக்கத்தில் பிரசுரித்திருந்தேன். பல்க லைக்கழகத்தின் விளம்பரம் ஒன்றை தங்களின் அனுமதி இன்றி விஞ்ஞான பீடாதிபதி விடிவானத்திற்கு வழங்கியிருந்ததாகவும், அதை தங்களின் அனுமதி இன்றி பிரசுரித்ததாக என்மீதும் உப வேந்தர் இந்த விசாரணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந் தார்.

கொழும்பில் நடந்த விசாரணைக்கு சமுகமளித்த நான் மக்களை சென்றடைய வேண்டிய தகவல் ஒன்று அது உண்மை என உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்கள் இருந்தால் உபவேந்த ரின் அனுமதியை பெற வேண்டும் என்ற நியதி பத்திரிகைக்கு கிடையாது. அந்த செய்தி தவறாக இருந்தால் மட்டுமே பல்க லைக்கழக நிர்வாகம் பத்திரிகை மீது கேள்வி எழுப்ப முடியும் என தெரிவித்திருந்தேன். இதனைத் தொடர்ந்து விடிவானம் பத்திரிகை மீதும், கலாநிதி ஜெயசிங்கம் மீதும் உபவேந்தர் சுமத் திய குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டது.

இப்படி சிறிய சிறிய விடயத்திற்கே பழிவாங்கும் ஒரு நபரா கவே உபவேந்தர் வணபிதா இராஜேந்திரம் மாறியிருந்தார்.

இதில் ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும். கலாநிதி ஜெயசி ங்கம் மட்டக்களப்பு செங்கலடியை பிறப்பிடமாக கொண்ட வர். அவரிடம் மட்டக்களப்பு யாழ்ப்பாணம் என்ற பிரதேசவாதம் இருந்ததில்லை. ஆனால் அவர் ரவீந்திரநாத், மனோ சபாரத் தினம் போன்றவர்களின் பக்கமே இருந்ததாலோ என்னவோ உப வேந்தர் இராஜேந்திரத்தால் பழிவாங்கப்பட்டார். அதேபோன்று

இந்த இருதரப்பிலும் சேராதவர்களாக தம்பையா, யோகராசா, கெனடி, அம்மன்கிளி மௌனகுரு போன்றவர்கள் இருந்தனர். இவர்கள் இந்த கோஷ்டி மோதல்களுக்குள் சிக்கவில்லை.

இந்த வேளையில் 1998அல்லது 1999ஆம் ஆண்டு என நினைக்கிறேன். கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதிகள் நான்கு பேரையும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு இடத்திற்கு கருணா அழைத்திருந்தார். கருணா ஒரு ஜீப்பில் வந்திறங்கினார். அந்த ஜீப்பில் கருணாவுடன் யுவி தங்கராசாவும் வந்திறங்கினார். தனக்கு கருணாவின் செல்வாக்கு இருக்கிறது என இந்த நான்கு பீடாதிபதிகளுக்கும் காட்டுவதற்காகவும், யுவி தங்கராசா கையாண்ட தந்திரமாக அது இருக்கலாம்.

ரவீந்திரநாத், மனோ சபாரத்தினம், ரகுராகவன் தரப்பு மனோ மாஸ்ரரை நாடியிருப்பதை எச்சரிக்கும் நோக்கிலேயே அன்று கருணா அவர்களை அழைத்திருந்தார். எந்த பிரச்சினையையும் என்னிடம் தான் கொண்டுவரவேண்டும், மனோ மாஸ்ரரிடம் கொண்டு செல்ல கூடாது என கருணா எச்சரித்திருந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து செல்லப்போவதாக கருணா அறிவித்த போது பி.பி.சி தமிழோசை இது தொடர்பாக கிழக்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த யுவி தங்கராசாவிடம் அபிப்பிராயம் கேட்டது. கருணாவின் பிரிவு என்பது தனிப்பட்ட கருணாவின் விரும்பம் என்று சொல்வதை விட ஒட்டுமொத்த மட்டக்களப்பு மக்களின் விருப்பமும் அதுதான். மட்டக்களப்பு மக்கள் யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழ் இருக்க விரும்பவில்லை என்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் கருணாவின் பிரிவு என கூறி அந்த பிளவை யுவி தங்கராசா நியாயப்படுத்தியிருந்தார்.

மீண்டும் விடுதலைப்புலிகள் மட்டக்களப்பை கைப்பற்றிய பின்,கருணாவின் பிளவை மிகத்தீவிரமாக ஆதரித்த யுவி தங்கராசாவை விடுதலைப்புலிகள் கைது செய்து கொண்டு சென்று அடைத்து வைத்திருந்தனர். சில நாட்கள் விடுதலைப்புலிகளின்

சிறையில் இருந்த யுவி தங்கராசாவை விடுதலைப்புலிகளிடமி ருந்து மீட்டு வந்தவர் அவரின் மைத்துனர் சிவராம் தான்.

யுவி தங்கராசாவை மீட்பதற்காக வன்னிக்கு சென்று முக்கி யமானவர்களை சந்தித்ததுடன் மட்டக்களப்பில் உள்ள தளபதி களான ரமேஷ், கௌசல்யன் போன்றவர்களை சந்தித்து யுவி தங்கராசாவை விடுதலை செய்யுமாறு வேண்டினார். பின்னர் யுவி தங்கராசாவை சிவராமிடமே விடுதலைப்புலிகள் ஒப்ப டைத்தனர். அவரை சிவராம் தன்மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தார்.

கிழக்கு பல்கலைக்கழகம் பற்றி இன்னொன்றையும் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் பொங்குதமிழ் நிகழ்ச்சி யை நடத்தியதை தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழக சமூகமும் பொங்குதமிழ் நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என விடுதலைப்பு லிகள் தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டது இது தொடர் பாக கிழக்கு பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது பொங்கு தமிழ் நிகழ்ச்சியை எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பது தொடர் பாக பலரும் கருத்து தெரிவித்துக்கொண்டிருந்தனர். அந்த வேளையில் பொங்குதமிழ் என்ற பெயரில் தான் நிகழ்ச்சியை நடத்த வேண்டுமா என்ற கேள்வி எழுப்பபட்டது. பொங்குதமிழ் என்பது யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் வைத்த பெயர். அதேபெயரில் ஏன் கிழக்கில் நடத்த வேண்டும், கிழக்கின் எழுச்சி என்ற பெயரில் தனித்துவமாக நாம் நடத்தலாமே என கலாநிதி சித்திரலேகா மௌனகுரு, பாலசுகுமார் போன்றவர்கள் கருத்து தெரிவித்தனர். இவ்வாறு வடக்கிலிருந்து கிழக்கு பிரிந்து தனித் துவமாக நிற்கவேண்டும் என்ற போக்கு கிழக்கு பல்கலைக்க ழகத்தில் இருந்த சிலரிடம் மேலோங்கி காணப்பட்டது. அதில் நியாயமும் இருந்தது.

இந்நேரத்தில் இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும், யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தடவையாக பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடைபெற்ற போது கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் மற்றும் சில விரிவுரையாளர்களும் தனியாக பேருந்து ஒழுங்கு செய்து அங்கு சென்றிருந்தனர். யாழ்ப்பாணத்தில் பொங்குதமிழ் நிகழ்ச்சி முடிந்த பின் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து சென்றவர்கள் உடனான ஒரு சந்திப்பை விடுதலைப்புலிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

கிளிநொச்சியில் உள்ள தூயவன் அரசஅறிவியல் கல்லூரி மண்டபத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட விடுதலைப்புலிகளின் துறை சார் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அந்த சந்திப்பில் மாணவர்கள் சிலர் கேள்விகளை எழுப்பினர். கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற விருத்தாசலம் என்ற மாணவன் கேள்வி ஒன்றை எழுப்பினான். தமிழீழம் கிடைத்தால் கிழக்கை சேர்ந்த ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வீர்களா? அல்லது தலைமை என்பது வடக்கின் கையில் தான் இருக்குமா? தமிழீழத்திலும் கிழக்கை புறக்கணிக்கும் செயல்கள் தொடருமா? இந்த கேள்வி தனி ஒரு விருத்தாசலம் என்ற மாணவனிடமிருந்து வந்த கேள்வியாக பார்க்க முடியாது. கிழக்கில் உள்ள பெரும்பாலானவர்களின் அடிமனங்களில் எழுந்து கொண்டிருக்கும் கேள்விதான் அது.

காலம் காலமாக இருந்து வரும் இந்த சந்தேகங்களை தமிழ் தலைமைகள் தீர்க்க தவறியதே யாழ்ப்பாணம் மட்டக்களப்பு என்ற பிரதேசவாதத்தை வைத்து சிலர் பிழைப்பு நடத்த முற்படுகின்றனர்.

*****

# 12 தமிழ் முஸ்லீம் கலவரங்களும் அதன் பின்னணியில் இருந்தவர்களும்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் இடையில் கிளிநொச்சியில் 2002ல் நல்லிணக்க ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டதையும் அதனை அடுத்து தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையில் ஒற்றுமையும் இனநல்லிணக்கமும் ஏற்படுவதை சிறிலங்கா படைத்தரப்பும், முஸ்லீம் ஆயுதக்குழுக்களும் விரும்பவில்லை. அதனை குழப்புவதற்கான சூழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபட ஆரம்பித்தனர்.

சிறிலங்கா படைகளுடன் இணைந்து செயல்பட்ட ஒசாமா முன்னணி என்ற முஸ்லீம் ஆயுதக்குழு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே மோதல்களை உருவாக்கும் நோக்குடன் தமிழ் மக்கள் மீதும் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவு அலுவலகங்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.



2002 யூன் 3ஆம் திகதி வாழைச்சேனையில் இருந்த ஊடகவியலாளர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர். அதனை தொடர்ந்து மூதூரில் இருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தை ஆயுதங்களுடன் சென்ற முஸ்லீம் குழு உடைத்து சேதமாக்கியது.

இதனை தொடர்ந்து யூன் 24ஆம் திகதி மூதூரில் தமிழ் மக்க



ளுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலை சிறி லங்கா படைகளுடன் சேர்ந்தியங்கிய முஸ் லீம் ஆயுதக்குழுவே தூண்டி விட்டது. இதில் தமிழ் முஸ்லீம் இரு தரப்பையும் சேர்ந்த மக் கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதல்களின் பின்னணியில் முஸ் லீம் ஆயுதக்குழுவான ஒசாமா முன்னணியே இருந்தது என்ற செய்தியை வெளியிட்ட தமிழ் ஊடகவியலாளர் பி.சற்சிவானந்தம் அவர்களின் வீட்டின் மீது யூன் 26ஆம் திகதி முஸ்லீம் ஆயுதக்குழு தாக்குதல் நடத்தியது. அவரின் வீடும் உட மைகளும் பலந்த சேதமடைந்தது. சற்சிவானந்தமும் அவரின் குடும்பத்தினரும் அங்கிருந்து தப்பி சென்று தேவாலயம் ஒன் றில் தஞ்சம் அடைந்தனர். மூதூர் தாக்குதல் தொடர்பாக ஊட கவியலாளர் சற்சிவானந்தம் பிபிசி தமிழ் ஓசைக்கு வழங்கிய செவ்வியை தொடர்ந்து அவரை பழிவாங்கும் முகமாக முஸ்லீம் ஆயுதக்குழு இந்த தாக்குதலை நடத்தியதாக கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது.

மூதூரில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை தொடர்ந்து யூன் 27ஆம் திகதி (27.06.2002) அன்று மட்டக் களப்பு வாழைச்சேனையில் தமிழ் மக்கள் மீது அரச படைகளின் துணையுடன் முஸ்லீம் தீவிரவாத ஆயுதக்குழு தாக்குதல்களை நடத்தியது.

வாழைச்சேனையில் தமிழ் மக்கள் மீது முஸ்லீம் தீவிரவாத குழு நடத்திய தாக்குதலில் பெண்கள் வயோதிபர்கள் உட்பட 13பேர் படுகாயமடைந்தனர். 25க்கும் மேற்பட்டவர்கள் சிறுகா யங்களுக்கு உள்ளாகினர். ஒருவர் கொல்லப்பட்டார். கிரனட் குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தினர்.

கறுவாக்கேணி கிராமத்திற்குள் புகுந்தும் தாக்குதல் நடத்தினர். இதில் 10வயது தமிழ் சிறுவன் உட்பட பலர் காயடைந்தனர்.

இதனை தொடர்ந்து வாழைச்சேனை பகுதியில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு படையினர் நகரில் நிலைகொண்டிருந்த போது முஸ்லீம் ஆயுதக்குழுக்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் தமிழர்களுக்கு சொந்தமான உடமைகளுக்கு தீவைத்தனர்.

வாழைச்சேனை நகரில் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு தீவைத்து கொழுத்தப்பட்டது. ஆறு கடைகள் முழுமையாக சேதமடைந்தது. ஏனைய கடைகள் பகுதி அளவில் சேதமடைந்தது.

வாழைச்சேனை பிரதேசசபைக்கு சொந்தமான கட்டிடத்தையும் முஸ்லீம் தீவிரவாத ஆயுதக்குழு தீவைத்து எரித்தது. இந்த சம்பவங்கள் அனைத்தும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் முன்னிலையிலேயே நடைபெற்றதாக அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

பல தமிழ் குடும்பங்கள் பாதுகாப்பு கருதி வீடுகளை விட்டு வெளியேறினர். இதனை பயன்படுத்திக்கொண்ட முஸ்லீம்கள் தமிழர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தனர். ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் படையினரின் முன்னிலையில் இந்த வன்முறைகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பதற்றமான சூழல் காணப்பட்டது. முஸ்லீம் பிரதேசங்கள் ஊடாக பயணம் செய்வதற்கு தமிழ் மக்கள் அஞ்சினர். போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இச்சம்பவங்களை அடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான யோசப் பரராசசிங்கம், தங்கவடி

வேல், ஞா.கிருஷ்ணபிள்ளை, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம் ஆகியோர் வாழைச்சேனைக்கு சென்றனர். அவர்களுடன் ஊடகவியலாளர்களான உதயகுமார், நிராஜ் டேவிட் ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன். மட்டக்களப்பு மாவட்ட பிரதிபொலிஸ் மா அதிபரும் வந்திருந்தார். கொழும்பி லிருந்து பதில் பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராசா தலைமையி லான பொலிஸ் அதிகாரிகள் குழுவும் வாழைச்சேனைக்கு வந்தி ருந்தது.

சேதங்களை பார்வையிட்ட பின்னர் அரசாங்க அதிபர் சண்முகம் தலைமையில் வாழைச்சேனை பிரதேச செயலகத் தில் கூட்டம் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தாம் கண்ட சம்பவங்களை தெரிவித்தனர்.

தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடந்த போது அத்தாக்குதல் களை தடுக்க வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்டீன், வாழைச்சேனை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பியசேனா ஆகியோர் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது அவர்கள் அதனை பார்த்துக்கொண்டிருந்தனர் என பாதிக்கப்பட்ட மக்கள் இக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

பொலிஸ் சி.ஐ.டியினராக இருந்த மன்சூர், ரமீஸ், உவைஸ், பயிஸ் ஆகியோரே தமிழ் கடைகளுக்கு தீவைப்பதிலும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதிலும் முன்னின்றனர் என்றும் பயிஸ் என்பவரின் துப்பாக்கி சூட்டிலேயே காண்டீபன் என்ற தமிழ் இளைஞர் கொல்லப்பட்டார் என்றும் பிரதேச செயலகத் தில் நடந்த கூட்டத்தில் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் பாதிக்கப் பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ஆணைக்குழு ஒன்றை நிய மித்து விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்

டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கோரியிருந்தார். ஆனால் இந்த சம்பவங்கள் தொடர்பாக எந்த விசாரணைகளும் நடைபெறவில்லை. சம்பவம் இடம்பெற்ற போது வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த அனைத்து பொலிஸாரையும் இடமாற்றம் செய்வதாக பதில் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசா உத்தரவாதம் வழங்கியிருந்தார்.

வாழைச்சேனையில் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களை பார்வையிட்ட பின் அங்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அங்கிருந்து மாலை 5மணியளவில் திரும்பிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிரானில் அதிர்ச்சி காத்திருந்தது.

கூட்டம் முடிவடைந்த பின்னர் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், ரி.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ணபிள்ளை, ரெலோ மாவட்ட பொறுப்பாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம், மாவட்ட செயலக உயரதிகாரிகள், மற்றும் ஊடகவியலாளர்களும் ஐந்து வாகனங்களில் திரும்பிக்கொண்டிருந்தோம். மட்டக்களப்பு நகரில் இருந்த விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இரு வாகனங்களில் பாதுகாப்பிற்கு வந்திருந்தனர். ஏறாவூர் முஸ்லீம் பிரதேசத்தை கடந்து செல்ல வேண்டும் என்பதற்காக விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பிற்கு வந்திருந்தனர்.

கிரான் சந்தியில் வீதிக்கு குறுக்கே நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தடிகள் பொல்லுகள் கற்களுடன் நின்றனர். எங்கள் வாகன தொடரணி செல்வதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன் அவ்வீதியால் மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் சென்ற வாகனங்களை செல்ல விட்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்ற

வாகனங்களை மறித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டக்களப்பு நகருக்கு செல்ல அனுமதிக்க மாட்டோம், திரும்பி செல்லுங்கள் என அவர்கள் எச்சரித்தனர்.

முஸ்லீம் பிரதேசத்திற்கு ஊடாக செல்வதுதான் அச்சுறுத்தலாக இருக்கும் என எண்ணிய எமக்கு தமிழ் கிராமம் ஒன்றின் ஊடாக தமிழ்மக்களின் பிரதிநிதிகள் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டிருந்தது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

இந்த பகுதியில் வைத்து தான் ஒரு வருடத்திற்கு முதல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகம் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப் பட்டிருந்தார். எம்.பிமாரை வாகனத்துடன் வைத்து எரியுங்கடா என சிலர் சத்தம் இட்டனர். பின்னர் தான் அறிந்து கொண்டோம், இந்த சம்பவத்திற்கு கிரான் பொதுமக்கள் காரணமல்ல என்றும் அவர்களை தூண்டி விட்டவர்கள் வேறு நபர்கள் என்றும் அறிந்து கொண்டோம்.

* * * * *

# 13 கோணேஸ்வரி கொலையை ஞாபகப்படுத்திய எஸ்.ரி.எவ். அதிகாரி

வாழைச்சேனையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சந்தித்து அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் நிவாரணங்களை ஏற்பாடு செய்து விட்டு திரும்பிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரையும் மாவட்ட அரசாங்க அதிபரையும் மட்டக்களப்பு நகருக்கு திரும்பி செல்ல விடாது கிரானில் தடுத்தது ஏன்? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்? என தெரிந்த போதிலும் அதை வெளியில் சொல்ல யாரும் தயாராக இருக்கவில்லை.

வீதியை தடைசெய்து நின்ற மக்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தனர். மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம் அமைதியாக தனது வாகனத்தில் இருந்தார். இச்சம்பவம் நடைபெறுவதற்கு கடந்த சில மாதங்களுக்கு முதல் தான் அரசாங்க அதிபர் சண்முகத்தை தமது முகாமுக்கு அழைத்த விடுதலைப்புலிகள் அவரை கட்டி வைத்து அடித்து வீடியோவும் எடுத்திருந்தனர். இதனால் அவர் சில காலமாக உளவியல் ரீதியில் மிக நொந்த நிலையிலேயே காணப்பட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த நிர்வாக அதிகாரியாக செயல்பட்டவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களில் சண்முகமும் ஒருவர்.

இதேபோன்றுதான் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகச்சிறந்த நிர்வாக அதிகாரியாகவும் எந்தவித ஊழல் மோசடிகளில் ஈடுபடாத ஒரு உத்தமமனிதராக திகழ்ந்த மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த எம்.அந்தோனிமுத்து 08ஆம் திகதி ஒக்டோபர் 1987 அன்று வந்தாறுமூலையில் வைத்து விடுதலைப்புலிகளின் கண்ணிவெடி தாக்குதலில் கொல்லப்பட்டார். கல்குடா

வில் அகதிகளை பார்வையிட்டு விட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடியில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.அந்தோனிமுத்து, உட்பட வாகனத்தில் பயணம் செய்த 9 பேர் கொல்லப்பட்டனர். அவ்வழியால் சென்ற பொதுமக்கள் 5 பேரும் கொல்லப்பட்டதுடன் 12பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் மாவட்ட அரசாங்க அதிபருடன் சென்றிருந்த உணவுகட்டுப்பாட்டாளராக அப்போது பணியாற்றிய செல்வின் (தற்போது நோர்வேயில் இருக்கிறார்) படுகாயமடைந்திருந்தார். இவரின் வலது கை விரல்கள் துண்டாடப்பட்டன.

மட்டக்களப்பில் பணியாற்றிய அரசாங்க அதிபர்களில் ஊழலற்ற மிக நேர்மையான அதிகாரியாக அந்தோனிமுத்து திகழ்ந்தார்.

அப்படி பட்ட நேர்மையான தமிழ் அதிகாரியை மட்டக்களப்பு மாவட்டம் இழந்திருந்தது. அவருக்கு பின்னர் வந்த அரசாங்க அதிபர்களில் சண்முகம் நேர்மையான அதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

கிரானில் வீதியை மறித்திருந்த மக்களை அகற்றி பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்க அதிபரையும் மட்டக்களப்புக்கு அழைத்து செல்ல விசேட அதிரடிப்படையினர் தயாராக இருந்தனர். ஆனால் படையினரின் பலத்தை வைத்து மக்களை அங்கிருந்து அகற்றுவதை பாராளுமன்ற உறுப்பினரும் அரசாங்க அதிபர் சண்முகமும் விரும்பவில்லை.

சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேலாக அங்கு தரித்து நிற்க வேண்டி ஏற்பட்டது. பாதுகாப்புக்கு வந்த விசேட அதிரடிப்படை அதிகாரி ஒரு ஆலோசனையை வழங்கினார். திரும்பி ஓட்டமாவடி ஊடாக மன்னம்பிட்டி சென்று அங்கிருந்து மகா ஓயா வழியாக அம்பாறை சென்று மட்டக்களப்பு நகருக்கு வரலாம் என

அவர் ஆலோசனை கூறினார். சரி என பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஒத்துக்கொண்டனர்.

அரசாங்க அதிபரின் வாகனத்தில் ஜோசப் பரராசசிங்கமும் ஊடகவியலாளர்களான நிராஜ் டேவிட், வேதநாயகம் ஆகி யோர் பயணம் செய்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேலுவின் வாகனத்தில் நானும் ஊடகவியலாளர் உதயகுமாரும் பிரசன்னாவும் பய ணம் செய்தோம். நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை தனியான வாகனத்தில் வந்திருந்தார். இந்த மூன்று வாகனங்க ளுக்கும் பாதுகாப்பாக விசேட அதிரடிப்படையினரின் வாகனம் வந்திருந்தது.

மாலை ஆறரை மணியளவில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் மன்னம்பிட்டியை நோக்கி பாராளுமன்ற உறுப் பினர்களின் வாகனங்கள் புறப்பட்டன. ஓட்டமாவடி மன்னம் பிட்டியை கடந்து அங்கிருந்து மகாஓயா வீதிக்கு செல்ல இரவு 10 மணிக்கு மேலாகி விட்டது.

அன்று காலை உணவிற்கு பின்னர் நண்பகல் யாரும் உணவு உண்ணவில்லை, எல்லோருக்கும் கடும் பசி மகாஓயா வீதி யில் சிங்கள கிராமம் ஒன்றில் சிறிய கடை ஒன்றில் ஏதாவது சிற்றுண்டி உண்ணலாம் என வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

எல்லோரும் இறங்கி அந்த கடைக்கு முன்னால் போடப்பட்டி ருந்த வாங்கில் உட்கார்ந்திருந்தோம். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த விசேட அதிரடிப்படை அதிகாரி தனது வாகனத்தில் இருந்து இறங்கி வந்து என்னை தெரியுமா சேர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்தை பார்த்து கேட்டார். தெரி யவில்லையே என ஜோசப் பதிலளித்தார். சேர் நீங்கள் தான் எனக்கு எதிராக சாட்சி சொன்னீர்கள், ஞாபகமில்லையா என

*அந்த விசேட அதிரடிப்படை அதிகாரி கேட்ட போது எங்களுக்கு அதிர்ச்சியாகவும் பயமாகவும் இருந்தது.*

*இவ்வளவு நேரமும் எங்களுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த வன் இந்த நடுக் காட்டு வழியில் சிங்கள கிராமத்தில் வைத்து இதை கேட்கிறானே என அச்சமாக இருந்தது.*

*1997 மே 17ஆம் திகதி தனது வீட்டில் இருந்த கோணேஸ்வரி என்ற இளம்பெண்ணை விசேட அதிரடிப்படையினர் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர் என்றும் பாலியல் பலாத்காரக்குற்றத்தை மறைப்பதற்காக அவர் மீது குண்டை வீசி அவரின் உடலை சிதைத்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட் டிருந்தது. இது தொடர்பாக அப்பிரதேச மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்திடம் முறைப்பாடு செய் ததை அடுத்து அவர் ஜனாதிபதி சந்திரிக்காவின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.*

*சர்வதேச மன்னிப்பச்சபை உட்பட மனித உரிமை அமைப் புக்களின் கவனத்திற்கும் கொண்டு வந்ததுடன் விசேட அதிர டிப்படையினரே இக்கொலையை செய்ததற்கான சாட்சிகள் உள்ளன என்றும் இது தொடர்பான குற்றவாளிகளை கண்டு பிடிக்க விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியை கோரியிருந்ததுடன் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். இந்த செய்தி சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்திருந் தது.*

*இதன் பின்னர் கல்முனை நீதிமன்றில் விசேட அதிரடிப்படை யினர் மீது விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் ஜனாதிப தியிடம் முறைப்பாடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், கோணேஸ்வரி படுகொலை சம்பவ செய்தியை வெளியிட்ட சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் செல்வநாயகம் ஆகியோர் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.*

அந்த பகுதி முகாமில் இருந்த விசேட அதிரடிப்படையினரே இக் கொலையை செய்ததாக அப்பிரதேச மக்கள் தமக்கு முறைப்பாடு தெரிவித்திருந்தனர் என ஜோசப் பரராசசிங்கம் நீதி மன்றில் சாட்சியமளித்தார். இந்த வழக்கில் பிரதான சந் தேக நபராக இருந்தவரே மட்டக்களப்பு விசேட அதிரடிப்படை முகாமுக்கு பொறுப்பாதிகாரியாக இருக்கிறார் என்ற விடயமும் அவர் தான் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருகிறார் என்பதும் அப்போதுதான் எமக்கு தெரிந்தது.

என்னைத் தெரியுமா என கேட்டு நீதிமன்றில் ஜோசப் பரரா சசிங்கம் சாட்சி சொன்ன விடயத்தை ஞாபகப்படுத்திய அந்த விசேட அதிரடிப்படை அதிகாரி சற்றுநேரம் நின்று பேசி விட்டு விசேட அதிரடிப்படை முகாம் உள்ள பகுதிகள் ஊடாகவே நாம் செல்ல வேண்டும், இந்த பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு நான் அறிவித்திருக்கிறேன். அவர்கள் நாங்கள் செல்லும் போது வீதியை திறந்து விடுவார் கள் என கூறிவிட்டு புறப்படுவோம் சேர் என கூறிவிட்டு வாக னத்தில் ஏறிக்கொண்டார்.

இந்த நேரத்திலா இவன் இதனை ஞாபகப்படுத்த வேண்டும் என தனது வாகனத்தில் ஏறிய ஜோசப் பரராசசிங்கம் சலித்த வாறு கூறினார்.

காலை தொடக்கம் மட்டக்களப்பு தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய இவரா கோணஸ்வரி படுகொலையின் பிரதான சந்தேக நபர் என அறிந்த போது அதிர்ச்சியாக இருந்தது.

மகாஓயாவிலிருந்து புறப்பட்டு அம்பாறை சென்று அங்கி ருந்து ஒலுவில் அக்கரைப்பற்று காரைதீவு, கல்முனை களு வாஞ்சிக்குடி ஆரையம்பதி வழியாக மட்டக்களப்பு நகரை சென்

றடைய அதிகாலை 4மணி ஆகிவிட்டது. இந்த வீதிகள் இரவு வேளையில் மூடப்படுவது வழக்கமாகும். ஒவ்வொரு முகாமிலி ருந்தவர்களும் வாகன தொடரணி சென்ற வேளையில் வீதித்தடை களை அகற்றி வீதி ஓரத்தில் பாதுகாப்புக்கு நின்றிருந்தார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற தனது பொறுப்பை அந்த அதிகாரி மிக நேர்த் தியாக செய்திருந்தார். நாம் பாதுகாப்பாக வந்து சேர்ந்ததில் திருப்தியடைந்தாலும் இன்னொரு பக்கம் அன்றைய பயணம் மனதிற்கு வேதனையாகவே இருந்தது.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்கள் மக்களை தூண்டிவிட்டு அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த சம்பவம் எவ் வளவு துர்ப்பாக்கியமானது என வேதனைப்படத்தான் முடிந்தது. கிரானில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் தடுத்து நிறுத் தப்பட்டார்கள் என்பது வீதியை மறித்து நின்ற அப்பாவி கிரான் மக்களுக்கு தெரியாது. அவர்கள் வெறும் அம்புகளாகத்தான் அங்கு காட்சி அளித்தார்கள். இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பி னர்களை மட்டக்களப்புக்கு செல்ல விடாது திருப்பி அனுப்பியதன் மூலம் எதனை சாதித்தார்கள்?

சில மாதங்களுக்கு முதல்தான் கிளிநொச்சியில் தமிழ் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ விடுத லைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்து தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயல்படுவோம் என உறுதி எடுத்து கொண்டனர்.

ஆனால் மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதிக்கும் செயல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

****

# 14 ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளை வளர்த்துவிட்ட விடுதலைப்புலிகள்

யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த 2000 ஆம் ஆண்டு தேர்தல் கூட மிக நெருக்கடியான காலகட்டத்தில் தான் நடைபெற்றது. 1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் கட்சிகள் போட்டியிடுவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதிக்க வில்லை.

இதனால் யாழ்ப்பாணம், தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடு தலைக் கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் ஆகிய கட்சிகள் போட்டியிடவில்லை, திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை, வன்னி ஆகிய மாவட்டங்களில் மட்டும் தமி ழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது.

1994ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேச மக்களை வாக்களிக்க விடுதலைப்புலிகள் அனு மதிக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணியையும் போட்டியிட அனுமதிக்கவில்லை. இதன் விளைவு யாழ். மாவட்டத்தில் 2.3வீத வாக்கான 10.748 வாக்குகளை மட்டும் பெற்று 9 ஆசனங் களை ஈ.பி.டி.பி பெற்றுக்கொண்டது. 5இலட்சத்து 96ஆயிரத்து 366வாக்காளர்களை கொண்ட யாழ். மாவட்டத்தில் 10ஆயி ரத்து 748வாக்குகளை மட்டும் பெற்ற ஈ.பி.டி.பி 9ஆசனங்களை பெற்று பாராளுமன்றத்தில் ஆகக்கூடிய ஆசனங்களை பெற்ற தமிழ் கட்சியாக திகழ்ந்தது.

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கையின் படி முஸ்லிம்களால் ஒரு ஆசனத்தை கூட பெற முடியாது. ஆனால் ஈ.பி.டி.பியில் 341 விருப்புவாக்குகளை மட்டும் பெற்று கபூர்

ஜபறுல்லா என்ற முஸ்லீம் உறுப்பினர் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சி 2098வாக்குகளை பெற்று அக்கட்சியை சே ர்ந்த எம்.இலியாஸ் 1575 விருப்புவாக்குகளுடன் யாழ். நாடா ளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் 341 விருப்புவாக்குகளை பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட வரலாறு 1994ஆம் ஆண்டு யாழ். மாவட் டத்திலேயே இடம்பெற்றது. யாழ். மாவட்டத்தில் இரு முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதும் அவ்வாண்டில் தான்.

1994ஆம் ஆண்டு தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் யாழ். மாவட் டத்தில் 263வாக்குகளை மட்டுமே பெற்றது. தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது பொது எதிரிக்கு சாதகமாக அமையும் என்பதற்கு 1994 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் ஒரு சான்றாகும். மக்கள் மத்தியில் யார் என்று தெரி யாமல் இருந்த ஈ.பி.டி.பிக்கு 9 ஆசனங்களை பெற்றுக்கொடுத்து நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகளில் ஆகக்கூடிய ஆசனங்களை இந்த தேர்தல் பகிஷ்கரிப்பு பெற்றுக்கொடுத்தது. ஈ.பி.டி.பி 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெற்ற வெற்றியின் மூலமாக யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பியை தோற்கடிக்க முடியாத சக்தி யாக வளர வைத்தது. 1994ஆம் ஆண்டு தேர்தல் பகிஷ்கரிப்பின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளை போட்டியிட அனுமதித்திருந்தால் தமிழ் மக்களை வாக்களிக்க அனுமதித்திருந் தால் இன்று ஈ.பி.டி.பி என்ற கட்சி இருந்திருக்காது.

இன்று என்னதான் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக சே ர்ந்து போட்டியிட்டாலும் ஈ.பி.டி.பியை யாழ். மாவட்டத்திலி ருந்து அகற்ற முடியாது என்பதற்கு 2004ஆம் ஆண்டு தேர்தல் ஒரு உதாரணமாகும். 2004ஆம் ஆண்டு யாழ். மற்றும் வன்னி மக்கள் அனைவரும் எழுச்சியுடன் வாக்களித்தனர். அப்படி இருந்தும் யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தை பெற்

றுக்கொண்டது. யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பியை ஒரு சக்தி யாக வளர்த்தெடுத்த பெருமை விடுதலைப்புலிகளையே சாரும்.

வன்னி மாவட்டத்திலும் பெரும்பாலான பகுதிகள் விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் வவுனியா நகரத் தில் இருந்த மக்கள் மட்டுமே வாக்களித்தனர். பதிவு செய்யப் பட்ட வாக்காளர்களில் 25வீதமான மக்கள் மட்டுமே 1994ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களித்தனர். அத்தேர்தலில் புளொட்டும், ரெலோவும் சேர்ந்து புளொட்டின் நக்கூர சின்னத்தில் போட்டி யிட்டன. அக்கட்சி 11567 வாக்குகளை பெற்று மூன்று ஆசனங் களை பெற்றுக்கொண்டது.

1994ஆம் ஆண்டு தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு ஆசனத்தை பெற்றுக்கொண் டது. அருணாசலம் தங்கத்துரை கூடிய விருப்பு வாக்கு பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சம்பந் தன் தோல்வியடைந்திருந்தார். பின்னர் தங்கத்துரையை விடுத லைப்புலிகள் சுட்டுக்கொன்ற பின்னர் சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர முதல்வர் களான திருமதி சரோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.தங்கத் துரை ஆகியோர் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு சூழலிலேயே 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற் றது. ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ,ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளுக்கு மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஆயுதம் ஏந்தாத ஜனநா யக ரீதியான கட்சிகளுக்கு கூட விடுதலைப்புலிகளினால் அச்சு றுத்தல் இருந்த காலப்பகுதி அது.

வடகிழக்கில் தமிழ் வேட்பாளர்கள் உயிர் அச்சுறுத்தலின் மத்

தியிலேயே 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்ட னர். இராணுவ நெருக்குவாரம், விடுதலைப்புலிகளின் அச்சுறுத் தல்கள் என பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் நடைபெற்ற 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமைந்திருந்தது.

பாராளுமன்றத்தினால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் இல்லை என விடுதலைப்புலிகள் கருதினாலும் பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவது தமிழர்களுக்கு பாதிப்பாகவே அமைந்திருந்தது. அம்பாறை மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் குறைந் தால் அதற்கு பதிலான தெரிவு செய்யப்படுபவர்கள் முஸ்லீம் களும் சிங்களவர்களும் ஆகும். அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி உட்பட தமக்கு வரும் நிதிகள் அபிவிருத்தி திட்டங்களை தங்கள் பகுதிகளுக்கே ஒதுக்குவார்கள். இதனால் தமிழ் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்படும். அது மட்டுமல்ல தமிழ் பிரதேசங்கள் அபகரிக்கப்படுவதற்கும் இந்த பதவிகளை அவர் கள் பயன்படுத்தி கொண்டனர்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகர் திருகோ ணமலை என பெருமையாக பேசுகிறோம். ஆனால் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் நான்கு உறுப்பினர்கள் தெரிவாகும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஒருவர் கூட தெரிவு செய் யப்படவில்லை. 2000ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத் தில் சனத்தொகையின் படி தமிழர்கள் 36வீதமும், முஸ்லீம்கள் 29வீதமும், சிங்களவர்கள் 33வீதமும் காணப்படுகின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மையாக இருக்கும் தமிழர்களால் ஒரு பிரதிநிதியை கூட தெரிவு செய்ய முடியாமல் போய்விட்டது.

2000ஆம் ஆண்டு தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில்

29 வீதமுள்ள முஸ்லீம்கள் இரு பிரதிநிதிகளையும் 33வீதமுள்ள சிங்களவர்கள் இரு பிரதிநிதிகளையும் பெற்றுக்கொண்டனர். திட்டமிட்ட குடியேற்றம், தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டமை, தமிழ் மக்கள் மத்தியில் வாக்களிக்கும் ஆர்வம் இன்மை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மூதூர் வெருகல் போன்ற இடங்களில் இருந்த தமிழ் மக்கள் வாக்களிக்க முடியாமை போன்ற காரணங்களால் தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையில் ஒரு பிரதிநிதியை கூட தமிழர்களால் பெற முடியாமல் போய்விட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் 200வருடங்களில் சனத்தொகையில் தமிழர்களின் விகிதாசாரம் எவ்வாறு வீழ்ச்சியடைந்து வந்திருக்கிறது என்பதை 1881ஆம் ஆண்டு தொடக்கம் இறுதியாக 2012ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் வரை பார்த்தால் அறிந்து கொள்ள முடியும்.

1881ஆம் ஆண்டில் தமிழர்கள் 64.5வீதமும் முஸ்லீம்கள் 25.5வீதமும் சிங்களவர்கள் 4வீதமாகவும் இருந்தார்கள். நூறு வருடங்களின் பின்னர் 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் தமிழர்களின் சனத்தொகை வீதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்த அதேசமயம் முஸ்லீம் மற்றும் சிங்களவர்களின் சனத்தொகை வீதம் அதிகரித்திருந்தது.

64வீதமாக இருந்த தமிழர்கள் 36வீதமாக வீழ்ச்சியடைந்தார்கள், 4வீதமாக இருந்த சிங்களவர்கள் 33.5வீதமாக உயர்ந்தார்கள்.

25வீதமாக இருந்த முஸ்லீம்கள் 29வீதமாக உயர்ந்தார்கள். 2012ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் முஸ்லீம்கள் 40வீதமாக உயர்ந்துள்ளனர். தமிழர்கள் 32வீதமாக மேலும் வீழ்ச்சியடைந்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 2000ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் தமிழர்களின் தலைநகர் திருகோணமலை என செ ால்ல முடியுமா என உறுத்தும் அளவிற்கு பெரும் பாதகமாக அமைந்தது. தமிழ் கட்சிகள் பிளவு பட்டு நின்றதும், தமிழ் வேட் பாளர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி போன்ற கட்சிகளில் போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்கு களை பிரித்ததுதும் தமிழ் பிரதிநிதி ஒன்றை திருகோணமலை மாவட்டத்தில் பெற முடியாமல் போனதற்கு முக்கிய காரணங் களாக அமைந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி,ஈ.பி.டி.பி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், ரெலோ, மற்றும் தமிழ் சுயேச்சைக்குழுக்கள் என்பன மொத்தமாக 24ஆயிரம் வாக்குகளை பெற்றிருந்தன. ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய கட்சி களில் போட்டியிட்ட தமிழர்கள் சுமார் 10ஆயிரம் வாக்குகளை அக்கட்சிகளுக்கு பெற்றுக்கொடுத்திருந்தனர். தமிழ் வாக்குகள் சிதையாமல் இருந்திருந்தால் திருகோணமலையில் தமிழ் பிரதிநி தித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்திருக்கும்.

யாழ். மாவட்டத்தில் சிங்கள பேரினவாத கட்சிகளான ஐக் கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி கால் பதிக்க முடியாத நிலை காணப்பட்டது. 2000ஆம் ஆண்டு நீண்டகாலத் திற்கு பின்னர் தமிழ் மக்களை மிகவும் அடக்கி ஒடுக்கிய ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். 1952 ஆம் ஆண்டு ஊர்காவற்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பி னராக ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த தம்பிஐயா அல்பேர்ட் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 48வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் மிகக்கொடூரமான போரை புரிந்த ஐக்கிய தேசி யக்கட்சியிலிருந்து யாழ். மாவட்ட தமிழ் மக்கள் ஒரு பிரதிநி தியை தெரிவு செய்தனர்.

*தமிழ் மக்களின் அறிவு பொக்கிசமான யாழ்.நூலகத்தை எரித்து தமிழ் நிலங்களை ஆக்கிரமித்து இலட்சக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்த, 1977, 1981, 1983 என தமிழ் மக்கள் மீது இனஅழிப்பை செய்த, ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்றி செலுத்துமுகமாக யாழ். மாவட்ட தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்து ஒரு பிரதிநிதியை தெரிவு செய்தனர். வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய தமிழினத்தை அழித்த கட்சிகளுக்கு வாக்களிப்பதை தவிர்த்து வருகின்றனர். அம்மாவட்டங்களில் பேரினவாத கட்சிகளில் தமிழர்கள் போட்டியிட்டாலும் அவர்களை நிராகரித்து வருகின்றனர். ஆனால் தமிழ் உணர்வு மிக்க யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்ற பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது.*

*2000ஆம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழ் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியடைந்திருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ்,ஈ.பி.ஆர்.எல்.எவ், என தமிழ் கட்சிகள் பிரிந்து நின்றன. ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷின் தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கட்சிகளில் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டதால் தமிழ் வாக்குகள் பிரிக்கப்பட்டது. இதனால் 5 ஆசனங்களை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 உறுப்பினர்களை மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றுக்கொண்டது 76வீதம் தமிழர்கள் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பிரதிநிதிகளை மட்டும் பெற்றுக்கொண்டனர். 24வீதமுடைய முஸ்லீம் மக்கள் இரு பிரதிநிதிகளை பெற்றுக்கொண்டனர்.*

1977ஆம் ஆண்டுக்கு முன்னர் வடமாகாணத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவி வந்தாலும் கிழக்கு மாகாணத்தில் புரிந்துணர்வு அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் போட்டியிடுவது கிடையாது.

ஆனால் ஜி.ஜி.பொன்னம்பலம் இறந்த பின்னர் 2000ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்க செய்யும் வகையில் திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் போட்டியிட்டது. கிழக்கில் அவர்களால் வெற்றி பெற முடியாது என தெரிந்திருந்தும் அத்தவறை அவர்கள் செய்தனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்களின் வாக்களிப்பு வீதத்திற்கும் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் காணப்படும். முஸ்லீம் கிராமங்களில் 99வீதமான வாக்குபதிவு இருக்கும், தமிழ் கிராமங்களில் 35வீதத்திற்கு மேல் வாக்களிப்பு வீதம் செல்வது கிடையாது. குறிப்பாக படித்த தமிழ் மக்கள் என்று சொல்பவர்கள் வாக்களிக்க செல்வதில்லை. உதாரணமாக மட்டக்களப்பு நகரில் புளியந்தீவில் உள்ளவர்கள் படித்த மேல் மட்டத்தவர்கள் என கூறுவார்கள். ஆனால் அங்குள்ளவர்களில் 25வீதத்திற்கு குறைவானவர்களே வாக்களிப்பார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சனத்தொகை வீதத்தின் படி ஒரு முஸ்லீம் உறுப்பினர் தான் தெரிவாக முடியும். ஆனால் 2015ஆம் ஆண்டு தேர்தலில் அவர்கள் மூவரை தெரிவு செய்திருக்கின்றனர்.

காத்தான்குடியை சேர்ந்த ஹிஸ்புல்லாவும், ஏறாவூரைச் சேர்ந்த அலிசாகிர் மௌலானவும், ஓட்டமாவடியை சேர்ந்த அமீர்அலியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகி இருக்கின்றனர்.

இந்த சாதுரியமும் விவேகமும் சாணக்கியமும் முஸ்லீம் அரசியல்வாதிகளிடம் தான் உண்டு. இவர்கள் மூவரும் இப்போது அமைச்சர்களாகி தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு தமிழ் வேட்பாளரும் ஒரு முஸ்லீம் வாக்கையும் பெற முடியாது. தேர்தல் பிரசாரம் என காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி என முஸ்லீம் கிராமங்களுக்குள் கால் வைக்க முடியாது. முஸ்லீம் கிராமங்களுக்கு அயலில் கூட எட்டிப்பார்க்க முடியாது. ஆனால் மட்டக்களப்பில் ஹிஸ்புல்லா, அமீர்அலி, அலிசாகிர் மௌலானா ஆகியோர் வெற்றி பெறுவது தமிழர்களின் வாக்குகளினாலேயே.


ஓட்டமாவடியில் உள்ள காளிஅம்மன் சைவ கோவிலை இடித்து அந்த காணியை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற அதிகாரத்தை வைத்து கையகப்படுத்தி அதை பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு கொடுத்து அதில் இறைச்சி கடை உட்பட சந்தை கட்டிடத்தை அமைத்தது நானே என வெளிப்படையாக சொன்ன ஹிஸ்புல்லாவுக்கு 2015 தேர்தலிலும் தமிழ் கிராமங்கள் பலவற்றில் ஆயிரக்கணக்கான வாக்குகள் கிடைத்தன. 2000ஆம் ஆண்டு தேர்தலில் ஹிஸ்புல்லாவுக்கு தமிழ் கிராமங்களிலிருந்து 5ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன.

கிழக்கு மாகாணத்தில் 39.05வீத தமிழர்களும், 36.05வீத முஸ்லீம்களும், 23 வீத சிங்களவர்களும் வாழ்கின்றனர். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2000ஆம் ஆண்டு தேர்தலில் 36வீத மக்களை கொண்ட முஸ்லீம்கள் 7 பிரதிநிதிகளையும் தேசிய பட்டியல் மூலம் 5க்கும் மேற்பட்டவர்களையும் தெரிவு செய்தனர். 23வீத மக்களை கொண்ட சிங்களவர்கள் 5 உறுப்பினர்களை பெற்றுக்

கொண்டனர். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையாக தமிழர்கள் இருந்த போதிலும் இரு தமிழ் உறுப்பினர்கள் மட்டுமே தமிழ் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தெரிவு செய்ய முடிந்தது. அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணி இரு பிரதிநிதிகளை பெற்றுக்கொண்டது. அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் யாரும் தெரிவு செய்யப்படவில்லை,

*****

# 15 கிழக்கு ஊடகத்துறையின் முன்னோடிகள்



1890 ஆம் ஆண்டில் எம்.எஸ்.பாவாவை ஆசிரியராக கொண்டு வெளிவந்த மாணவன் வாராந்த பத்திரிகை தொடக்கம் தற்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் அரங்கம் வாராந்த பத்திரிகை வரை மிகச்சொற்பமான பத்திரிகைகளே மட்டக்களப்பிலிருந்து வெளிவந்தாலும், கிழக்கின் ஊடகத்துறை வரலாறு துணிச்சல் மிக்க, ஆற்றல் மிக்க பத்திரிகையாளர்களை கொண்டு பயணித்தது என்பதை மறக்க முடியாது.

1980களில் கிழக்கில் பணியாற்றிய பி.ஜோசப், வீ.சு.கதிர்காமத்தம்பி, போன்றவர்கள் அரசியல்வாதிகளுக்கு பின்னால் சென்று துதிபாடும் செய்திகளை எழுதியவர்கள் அல்ல. மக்களின் தேவைகள் பிரச்சினைகளை இனங்கண்டு, செய்திகளை எழுதினார்கள். அரச திணைக்களங்களிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் இருக்கும் ஊழல் மோசடிகளை அப்பலப்படுத்துவதில் முன்னின்றார்கள். 1970களில் பின் மட்டக்களப்பில் அடாவடித்தன அரசியலை ஆளும் கட்சியிலிருந்த ராசன் செல்வநாயகம் நடத்திய போது அதனை எதிர்த்து நின்றவர்கள் ஜோசப், கதிர்காமத்தம்பி போன்றவர்கள்தான்.

இதற்காக கதிர்காமத்தம்பி ராசன் செல்வநாயகத்தின் அடி

யாட்களால் தாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. ராசன் செல்வநாயகத்தின் அரசியல் அதிகாரத்தினால் ஜோசப் தன்னுடைய தொழிலையே இழந்தார். இருந்த போதிலும் ராசன் செல்வநாயகத்தின் காலடிக்கு செல்லவில்லை.

ஜோசப் துணிச்சலுடன் ஊடகப்பணியை மேற்கொண்டார். ஜோசப் அவர்கள் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மேற்கொண்ட ஊழல்களை அம்பலப்படுத்திய சம்பங்களில் சூறாவளி பூராயம் தொடர் மிக முக்கியமானதாகும். 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வீசிய சூறாவளியை தொடர்ந்து புனர்வாழ்வு மீள் கட்டமைப்பு பணிகள் நடைபெற்றாலும், அதில் பெரும் ஊழலும் மோசடிகளும் இடம்பெற்றன. அப்போது அமைச்சராக இருந்த தேவநாயகம் அவர்களும், அவரின் பக்கபலத்துடன் அரசாங்க அதிகாரிகளான இருந்த சில அதிகாரிகள் செய்த ஊழல் மோசடிகளை ஆதாரத்துடன் அவர் வெளிக்கொண்டுவந்த பாங்கு மிகவும் துணிச்சல் மிக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

இன்று புலனாய்வு இதழியல் துறையை கற்பிப்பதற்கு பல பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால் எந்த புலனாய்வு இதழியல் பட்டத்தையும் பெறாத, ஜோசப் தகவல்களை திரட்டி எழுதிய அந்த புலனாய்வு கட்டுரையை இன்று ஊடகத்துறையில் இருக்கும் இளம் ஊடகவியலாளர்கள் படிக்க வேண்டும். அவர் எவ்வாறு அந்த புலனாய்வை மேற்கொண்டு மூடிமறைக்கப்பட்ட அந்த ஊழல் மோசடிகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினார் என்பதை இன்று ஊடக கற்கை நெறிகளை மேற்கொள்பவர்களும், ஊடகத்துறையில் இருப்பவர்களும் அதை படிப்பதன் மூலம் நாம் பலவற்றை கற்றுக்கொள்ள முடியும்.

புலனாய்வு ஊடகத்துறையில் பேராசிரியராக இருக்கும் மிசோரி பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஸ்ரேவ் வைன்பேர்க் ஊடக புலனாய்வு பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

புலனாய்வு பணிகளை சட்டப்படி காவல்துறையினர், வழக்கறிஞர்கள், கணக்காய்வாளர்கள் மேற்கொள்கின்றனர். அவர்கள் தனிமனிதர்களாக அல்லாமல் கூட்டுமுயற்சியாக மேற்கொள்கின்றனர். அவர்களை சுற்றி பல பாதுகாப்பு அரண் கள் இருக்கும். ஆனால் ஒரு ஊடகவியலாளர் புலனாய்வு பணியை மேற்கொள்வது என்பது எந்த பாதுகாப்பு அரணும் அற்ற திறந்த வெளியில் நின்று தேடும் பாரிய முயற்சியாகும்.

ஆனாலும் காவல்துறையினர், வழக்கறிஞர்கள், கணக்காய் வாளர்கள் கண்டு பிடிக்க முடியாதை ஊடகவியலாளர்கள் கண்டு பிடித்து விடுகிறார்கள். புலனாய்வு ஊடகவியலாளர்க ளுக்கு தேவையான முக்கியமான விடயம் சொந்த முயற்சியும், வாசகர்களுக்கு, பொதுமக்களுக்கு எது முக்கியம் என கருதப் படுகிறதோ அந்த விடயத்தை ஆழமாக தேடும் ஆற்றலுமாகும்.

குற்றம், அரசியல் ஊழல், பொதுநிறுவனங்களில் ஏற் படும் ஊழல் மோசடிகள் பற்றி மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டுவருவதே புலனாய்வு ஊடகத்துறையாகும்.

பல்கலைக்கழகங்களில், ஊடககற்கை நிலையங்களில் இத் துறை பற்றி பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்களே புலனாய்வு ஊடக களத்தில் இறங்குகின்றனர்.

ஆனால் ஊடக புலனாய்வு என்ற பட்டமோ, பயிற்சியோ எதுவும் இல்லாத நிலையில் அன்று ஜோசப் மேற்கொண்ட அந்த முயற்சி எத்தகைய ஆழம் மிக்கது என்பதை அறிய முடி யும். ஊடக புலனாய்வு துறை மாணவர்களுக்கு அவரின் அந்த ஒரு கட்டுரைத்தொடரே மிகப்பெரிய பாடமாக இருக்கும். இவ் வாறு ஊடகவியலாளர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் கள் வாழ்ந்த பிரதேசம் மட்டக்களப்பு ஆகும்.

1980களில் மட்டக்களப்பில் ஊடகத்துறையில் வயதில் மிக இளையவர்களான நானும், நித்தியானந்தன், உதயகுமார் ஆகி

யோர் இணைந்து கொண்டோம்.

அன்று சிரேஷ்ட ஊடகவியலாளர்களாக இருந்த ஜோசப், நாகராசா, கதிர்காமத்தம்பி ஆகியோர் இளையவர்களாக இருந்த எமக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினர். அக்காலத்தில் இருந்த ஒற்றுமையும் செய்தி பரிமாற் றங்களும், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பாங்கும் இன்று காணமுடியவில்லை.

மாலைவேளையில் ஜோசப் அண்ணனின் சுபாராஜ் தியேட்ட ருக்கு முன்னால் நாங்கள் கூடுவோம்.

1990களின் பின்னர் மட்டக்களப்பில் புதிய ஊடக கலாசாரம் ஒன்று உருவாகியது. ஜோசப் அவர்கள் பணியாற்றிய காலம் போல 1990களின் பிற்பட்ட காலம் இருக்கவில்லை.

இராணுவ நெருக்கடி, துணைக்குழுக்களின் கொலை அச்சு றுத்தல், கைது செய்யப்படுபவர்கள் உயிருடன் புதுப்பாலத்தில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட காலம்.

சரிநிகர், விடிவானம், தினக்கதிர் போன்ற வாரப்பத்திரிகைக ளின் வருகை, தினக்குரல் தினசரி, தமிழ்நெற் இணையத்தளத் தின் வருகை, என்பனவும், கிழக்கிலங்கை செய்தியாளர் ச ங்கம் என்ற ஒரு பின்புலத்துடன் பத்திரிகையாளர்களின் கூட்டி ணைவு, சிவராம் போன்ற பத்திரிகையாளர்களின் ஊக்குவிப்பு மன்று நிறுவனர் மனோ இராசசிங்கம் போன்றவர்களின் உதவி கள் என்பன மட்டக்களப்பில் ஊடகத்துறையில் 1980களை விட 1990களின் பிற்பட்ட காலத்தில் புதிய மாற்றத்தை பெற்றிருந் தது.

மட்டக்களப்பில் பல படுகொலைகளை செய்து கொண்டி ருந்த மிகப்பெரிய கொலைக்கும்பல்களின் கழுகு கண்களின் மத்தியில், உயிர் அச்சுறுத்தல் நேரடியாகவும் மறைமுகமாகவும் வந்த போதும் அன்று மட்டக்களப்பில் இருந்த ஊடகவியலாளர்

கள் துணிச்சலுடன் பணியாற்றினர்.

1990 யூன் மாதத்திற்கு பிற்பட்ட காலம் மட்டக்களப்பு பிரதேசம் பயங்கரமான சூழலுக்குள் இருந்தது. நண்பகல் 12மணிக்கு பின்னர் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறுவது கிடையாது. புதுப்பாலம் மற்றும் வாவிக்கரை ஓரங்களில் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்ட சம்பவங்கள் அதிகம்.

1990 பிற்பகுதியில் ஒருநாள் மாலை 2மணியளவில் புகையிரத வீதி சந்தியில் பத்திரிகையாளர் பாக்கியராசாவுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அவ்வழியால் வந்த இராணுவ புலனாய்வு அதிகாரி முனாஸ் எங்கள் இருவரின் அடையாள அட்டையை வாங்கி கொண்டு முகாமுக்கு வருமாறு உத்தரவிட்டு சென்றார். முனாசின் கையில் அகப்பட்டு உயிர் தப்பியவர்கள் அரிது. பின்னர் மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட சிலரின் தலையீட்டால் அடுத்த நாள் காலையில் முகாமுக்கு சென்று அடையாள அட்டையை பெற்றுக்கொண்டோம். எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னரே எமது அடையாள அட்டைகள் ஒப்படைக்கப்பட்டன.

மட்டக்களப்பில் இருந்த இராணுவ கட்டளை தளபதியின் அலுவலகத்திற்கு அடிக்கடி மட்டக்களப்பில் இருந்த ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களுக்கு அப்பால் இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய இராணுவ ஒட்டுக்குழுக்களின் நேரடியான மறைமுகமான அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. ஆனாலும் இந்த அச்சுறுத்தல்களை கண்டு அஞ்சி ஒடுங்கி துதிபாடும் செய்திகளை மட்டும் எழுதிக்கொண்டிருக்கவில்லை.

ராசிக், புளொட் மோகன், முனாஸ் ஆகியோரிடமிருந்து நேரடியாக கொலை அச்சுறுத்தல் வந்த போதிலும் அவர்கள் புரியும் கடத்தல், கொலை, கொள்ளை, கப்பம் பெறும் மனித

உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதில் அன்று இருந்த ஊடக வியலாளர்கள் பெரும் பங்காற்றினர்.

கொலை அச்சுறுத்தல்களின் மத்தியிலும் உண்மையை வெளிக்கொண்டு வந்த ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடலாம்.

17.05.2000 அன்று வெசாக் தினத்தில் மட்டக்களப்பு நகரில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து அங்கு வந்த 233ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் ஆயித்தியமலை சிறுவர் இல்ல சிறுவர்கள் உட்பட 19பொதுமக்களை சுட்டுக் கொன்றனர். அந்த 19பொதுமக்களும் விடுதலைப்புலிகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்றே அரசாங்கம் அறிவித்தது. அதனையே சகல ஊடகங்களும் சொல்லிக்கொண்டிருந்தன. அந்த சம்பவம் நடந்து காயப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது காயப்பட்டவர்களில் உடல்களில் துப்பாக்கி ரவைகள் காணப்படுவதாக அங்கு கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார். இதனையடுத்து காயப்பட்டவர்கள் சிலரிடம் நேரடியாக பேசிய போதுதான் உண்மை தெரியவந்தது.

குண்டுத்தாக்குதல் நடந்த பின் பாதுகாப்பு கருதி கடை ஒன்றிற்குள் ஓடிச்சென்று பதுங்கியிருந்த போது அங்கு வந்த இராணுவத்தினரே தங்களை சுட்டதாகவும் தங்களுடன் இருந்த பலரும் அதில் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தனர். ஆயித்தியமலை சிறுவர் இல்ல சிறுவர்கள் வானில் வந்து இறங்கிய போது அங்கு வந்த இராணுவத்தினர் அவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். ஆனால் அரசாங்கத்தின் உத்தரவுப்படி கொல்லப்பட்டவர்கள் அனைவரும் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதாகவே வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்கள் என மரணச்சான்றிதழில் பதிவு செய்தால் மட்டுமே நிவாரண நிதி கிடைக்கும் என்பதால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்

களும் மௌனமாக இருந்து விட்டனர்.

ஆனால் காயமடைந்தவர்களிடம் பெற்ற தகவல்களை வைத்து அந்த கொலைகளை இராணுவத்தினரே புரிந்தனர் என்பதை தமிழ்நெற்றிற்கு செய்தியாக அனுப்பியிருந்தேன். தமிழ்நெற் மட்டுமே அந்த கொலைகளை யார் புரிந்தார்கள் என்ற விபரத்தை வெளியிட்டது. இதற்காக பின்னர் நான் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டேன்.

கிழக்கில் நடந்த கூட்டுப்படுகொலைகளில் மிக முக்கியமானது சத்துருக்கொண்டான் படுகொலை. அந்த படுகொலையில் காயங்களுடன் உயிர்தப்பிய தலைமறைவாக வாழும் ஒரேஒருவர் சிவகுமார் என்பவராகும். இந்த படுகொலையின் உண்மை நிலை வெளியில் வராதமல் இருந்தது. சிவகுமார் என்பவரை தேடி கண்டுபிடித்து அவரிடம் நடந்த உண்மைகளை விளக்கமாக கேட்டு 185க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை கொலை செய்த கொலையாளிகள் யார் என்ற விபரங்களை விடிவானம் பத்திரிகை வெளியிட்டது. அந்த துணிச்சலின் முக்கிய பங்கு யசியை தான் சாரும்.

சத்துருக்கொண்டான் படுகொலையின் வெளிவராத உண்மைகள் விடிவானம், சரிநிகர், தமிழ்நெற் ஆகிய ஊடகங்களில் வெளிவந்தது.

1990களுக்கும் 2004ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இராணுவ புலனாய்வு பிரிவு, பற்பொடி கொம்பனி குழு, மோகன் குழு, புளொட், ராசிக்குழு, ரெலோ வரதன் குழு, ஜிகாத் குழு, என பல ஆயுதக்குழுக்களின் கொலை அச்சுறுத்தல்களின் மத்தியில் தான் ஊடகவியலாளர்கள் பணியாற்றினர். எந்த நேரமும் மரணம் எமது காலடிக்கு வரலாம் என உணர்ந்து கொண்ட போதிலும் துதிபாடும் செயலை அன்று இருந்த ஊடகவியலாளர்கள் செய்யவில்லை.

கிழக்கில் இன்று கடத்தல்களும் படுகொலைகளும் குறைந்திருக்கலாம். ஆனால் கடந்த காலத்தில் கிழக்கில் படுகொலைகளை புரிந்தவர்கள் இன்னமும் புனிதர்கள் போல நடமாடி வருகின்றனர்.

நிமலராசனையும், நடேசனையும், சிவராமையும் படுகொலை செய்தவர்கள் வடக்கு கிழக்கு அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த கொலைகாரர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு சில ஊடகவியலாளர்களும் துணையாக உள்ளனர். இந்த கொலைகாரர்களை பிரதிநிதிகளாக தெரிவு செய்யும் மக்களும் உள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி கூட்டங்களை நடத்துவதோடு தமிழ் ஊடகவியலாளர்களின் பணி முடிந்து விடுவதில்லை. கொலையாளிகளை சமுகத்திலிருந்து அகற்றுவதே முதல் பணியாக இருக்க வேண்டும்.

*****

# 16 சந்திரிக்காவை காப்பாற்ற முற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி

1994 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிஇரு அணிகளாகவே செயல்பட்டன. ஒரு அணி ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நெருக்கமாக செயற்பட்டது. மற்ற அணி விடுதலைப்புலிகளுடன் நெருக்கமாக செயற்பட்டது.



ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நெருக்கமான அணியில் ஆனந்தசங்கரி, சம்பந்தன், நீலன் திருச்செல்வம் ஆகியோர் இருந்தனர். விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அணியில் ஜோசப் பரராசசிங்கம், மாவை சேனாதிராசா, போன்றவர்கள் இருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா தமிழர்களுக்கு உரிமையை வழங்கி பிரச்சினையை தீர்த்து வைப்பார் என சம்பந்தன் அணியினர் கூறிவந்தனர். சந்திரிக்கா அம்மையானர் ஒரு பொதியை வைத்திருக்கிறார். அதன் மூலம் தீர்வு நிட்சயம் கிடைக்கும் என சம்பந்தன், ஆனந்தசங்கரி, நீலன் தரப்பினர் நம்பினர். சந்திரிக்காவின் பொதியை தயாரித்தவர் நீலன் திருச்செல்வம் தான் என அக்காலப்பகுதியில் பேச்சு அடிப்பட்டது.

சந்திரிக்காவுக்கு நெருக்கமாக செயற்பட்ட அணி சந்திரிக் காவுக்காக கள்ள கையெழுத்து இட்டு அறிக்கை வெளியிட்ட சம்பவம் இந்த இரு அணிகளுக்கிடையில் மேலும் விரிசலை ஏற் படுத்தியது. கள்ள கையெழுத்து விவகாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

சமாதானபுறா வேசம் போட்டு தமிழர்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா ஜனாதிபதியாகிய கையோடு தன்னுடைய சுயரூபத்தை காட்டத்தொடங்கினார்.

யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த 1999 ஆம் ஆண்டு காலப்பகுதி.

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் நடை பெற்ற உயர்மட்ட கூட்டத்தில் கொழும்பின் பாதுகாப்பு நிலை மைகள் பற்றியும் ஆராயப்பட்ட போது விடுதலைப்புலிகள் கொழும்பை தாக்கும் திட்டம் இருப்பதாக தகவல் கூறப்பட்டது.

புலிகள் கொழும்பை தாக்கினால் தமிழர்களை நானே தலைமை தாங்கி தாக்குவேன் என கொழும்பில் பிரமுகர்களுட னான சந்திப்பின் போது சந்திரிக்கா எச்சரித்தார்.

சண்டேலீடர் பத்திரிகையில் குமார் பொன்னம்பலம் இதை ஆதாரத்துடன் வெளியிட்டார்.

நாட்டின் ஜனாதிபதி அந்த நாட்டில் இருக்கும் இன்னொரு இனத்தை நானே தலைமை தாங்கி கொலை செய்வேன் என கூறுவது எவ்வளவு பாரதூரமான விடயம். வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், இராஜதந்திரிகள் மட்டத்திலும் இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தன.

சந்திரிக்காவின் இப்பேச்சு தமிழர்கள் மட்டத்திலும் பெரும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக குமார்

பொன்னம்பலம் சிங்கள, ஆங்கில ஊடகங்களில் ஜனாதிபதி சந்திரிக்காவை மிகக்கடுமையாக சாடிவந்தார். அந்த வேளை யில் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை ஒன்றை வெளியிட் டது.

தமிழர்களை கொல்வேன் என சந்திரிக்கா அம்மையார் சொல்லவில்லை என்றும் அவர் தமிழர்களை நியாயமாக நடத்தும் ஒரு தலைவர் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கை சகல ஊடகங்க ளுக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

நானே தலைமை தாங்கி தமிழர்களை கொல்வேன் என சந்திரிக்கா கூறினாரா இல்லையா என தமிழர் விடுதலைக் கூட் டணிக்கு எப்படி தெரியும்? தமிழர் விடுதலைக்கூட்டணி அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை,

அப்படியானால் ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை விட்டது? தமிழர் விடுதலைக்கூட்டணி ஏன் இதில் மூக்கை நுழைத்து கொண்டது?

சந்திரிக்காவுக்கு மிக நெருக்கமானவர்கள் என கருதப்படும் சிலர் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்றிலேயே நானே தலைமை தாங்கி தமிழர்களை தாக்குவேன் என சந்திரிக்கா கூறியதாக சண்டே லீடர் செய்தி வெளியிட்டிருந்தது. அதில் தமிழர்கள் என்று சொல்லப்போனால் இலங்கை வங்கியின் தலைவராக இருந்த ராஜன் மட்டுமே அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந் தார். சந்திரிக்கா பேசிய விடயம் எப்படி வெளியில் போனது? தமிழர் என்ற காரணத்தால் ராஜன் மீது சந்திரிக்காவுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் சந்தேகம் எழுந்தது. இதனைய டுத்து இலங்கை வங்கி தலைவர் பதவியிலிருந்து ராஜன் தூக்கி எறியப்பட்டார்.

இந்த விடயத்தை ராஜன் தனக்கு சொல்லவில்லை என்றும் வேறு ஒருவர் மூலமே ஆதாரத்துடன் பெற்றதாக குமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

சந்திரிக்காவை காப்பாற்றும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட அறிக்கை கூட கள்ள கையொப்பம் இட்டு மோசடியான முறையிலேயே வெளியிடப்பட்டிருந்தது.

நானே தலைமை தாங்கி தமிழர்களை தாக்குவேன் என தான் கூறியது எப்படியோ அம்பலமாகிவிட்டது. என்ன செய்யலாம் என யோசித்தார் சந்திரிக்கா, தனது ஆலோசகரான நீலன் திருச்செல்வத்தை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்தார் சந்திரிக்கா, அங்கு சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம் தாங்கள் அறிக்கை ஒன்றை வெளியிடுவதாக உறுதியளித்து விட்டு வந்தார்.

அக்காலப்பகுதியில் சம்பந்தன், ஆனந்தசங்கரி, நீலன் திருச்செல்வம் ஆகிய மூவர் மட்டுமே அனைத்து முடிவுகளையும் எடுத்து வந்தனர்.

அந்த நேரத்தில் ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவராக இருந்தார். தலைவர் சிவசிதம்பரம் சுகயீனமுற்றிருந்தால் தலைவருக்குரிய பணிகளை ஆனந்தசங்கரியே செய்து வந்தார். அப்போது கட்சியின் செயலாளராக இருந்த சம்பந்தன் கொழும்பில் இருக்கவில்லை. கட்சியின் செயலாளரே அனைத்து அறிக்கைகளிலும் கையொப்பம் இடவேண்டும்.

சந்திரிக்கா அம்மையாரின் களங்கத்தை போக்க நீலன் திருச்செல்வம் அறிக்கையை தயாரித்தார். அறிக்கையின் கீழ் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் என சம்பந்தனின் கையொப்பமும் இடப்பட்டது. சம்பந்தன் என கள்ள கையொப்பத்தை வைத்தவர் கலாநிதி நீலன் திருச்செல்வம் தான்.

*நீலன் திருச்செல்வத்தின் அலுவலகத்திலிருந்தே சகல பத்திரிகைகளுக்கும் தொலைநகல் மூலம் அறிக்கை அனுப்பட்டது. சண்டேலீடர் பத்திரிகைக்கும் ஒரு பிரதி அனுப்பட்டது. சண்டேலீடர் அலுவலகத்தில் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்காவும் குமார் பொன்னம்பலமும் பேசிக்கொண்டிருந்த போதே தொலைநகல் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கை அங்கு வந்து சேர்ந்தது. அந்த அறிக்கையை லசந்த விக்கிரசிங்க குமார் பொன்னம்பலத்திடம் காட்டினார்.*

*குமார் பொன்னம்பலம் நெருங்கிய நண்பர் என்பதால் மட்டுமல்ல நானே தலைமை தாங்கி தமிழர்களை கொல்வேன் என்ற சந்திரிக்காவின் சர்ச்சைக்குரிய விடயத்தை சண்டே லீடரில் எழுதிவருபவர் என்ற ரீதியிலும் லசந்த அந்த அறிக்கையை குமாரிடம் காட்டினார்.*

*அறிக்கையை பார்த்தவுடன் குமார் உடனடியாக சொன்னார். இதில் பெரிய மோசடி இருக்கிறது. இது சம்பந்தனின் கையொப்பம் இல்லை. நீலன் தான் ஆர்.சம்பந்தன் என்று கையொப்பம் வைத்திருக்கிறார் என்றார் குமார் பொன்னம்பலம்.*

*சண்டே லீடர் பத்திரிகையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் அறிக்கை வெளியிடப்பட்டதுடன் இந்த கையெழுத்து மோசடி பற்றியும் குமார் பொன்னம்பலம் விலாவாரியாக எழுதினார்.*

*ஒருவரின் கையெழுத்தை இன்னொருவர் வைப்பது கிரிமினல் குற்றம் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.*

*சம்பந்தனின் உண்மையான கையொப்பம், நீலன் திருச்செல்வம் இட்ட கையெழுத்து எப்படி இந்த கள்ள கையொப்பத்திற்கு பொருந்துகிறது என்பதை படங்களுடனும் ஆதாரங்களுடனும் சண்டே லீடர் வெளியிட்டது.*

அக்காலப்பகுதியில் நான் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த விடிவானம் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். சில வருடங்களுக்கு முதல் விடிவானம் பத்திரிகை உரிமையாளர் மனோ இராசசிங்கம் குமார் பொன்னம்பலத்துடன் தொலைபேசியில் அறிமுகம் செய்து வைத்தார். மனோ இராசசிங்கத்தின் மனைவி சாந்தி சச்சிதானந்தம் ஒருநாள் என்னை கொழும்பில் வைத்து குமார் பொன்னம்பலத்திற்கு நேரில் அறிமுகப்படுத்தி வைத்தார். சாந்தி குமார் பொன்னம்பலத்தின் உறவினரும் கூட.

1991ஆம் ஆண்டு யூன் 12ஆம் திகதி இடம்பெற்ற கொக்கட்டிச் சோலை படுகொலை தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை மட்டக்களப்பில் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக குமார் பொன்னம்பலம் சமுகமளித்தார். மட்டக்களப்பில் ஜோசப் பரராசசிங்கம் அவர்களுடனேயே தங்கியிருந்தார். அப்போது குமார் பொன்னம்பலத்தை நேரில் சந்தித்த போதிலும் நெருக்கமான தொடர்பு கிடையாது.

விடிவானம் பத்திரிகை ஆசிரியராக இருந்த காலத்திலேயே குமார் பொன்னம்பலத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. மட்டக்களப்பில் நடைபெறும் கடத்தல்கள், கைதுகள், கொலைகள் பற்றிய விபரங்களை பெறுவதற்காக என்னுடன் குமார் பொன்னம்பலம் அடிக்கடி தொடர்பு கொள்வார்.

அந்த தொடர்பினால் விடிவானம் பத்திரிகைக்கும் தான் வெளியிடும் அறிக்கைகள் கட்டுரைகளை குமார் அனுப்புவார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கள்ள கையொப்ப அறிக்கை விவகாரத்தையும் குமார் பொன்னம்பலம் சகல ஆதாரங்களுடன் அனுப்பியிருந்தார். அதனை விடிவானம் பத்திரிகையில் பிரசுரித்தோம்.

கள்ள கையெழுத்து விவகாரம் அம்பலமானதை அடுத்து சம் பந்தன் ஒரு அறிக்கை வெளியிட்டார். நான் சொல்லித்தான் நீலன் திருச்செல்வம் என்னுடைய கையெழுத்தை வைத்தார் என்று.

சட்டம் தெரிந்தவர்கள், மெத்தபடித்தவர்களின் இந்த முட்டாள் தனங்களை பார்த்து அழுவதா சிரிப்பதா என மௌன மாக இருந்தனர் தமிழ் மக்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில உறுப்பினர்கள் மத்தி யில் நீலன் திருச்செல்வம், சம்பந்தன், ஆனந்தசங்கரி போன்ற வர்களின் நடவடிக்கைகள், சர்வாதிகாரப்போக்குகள், தன்னிச் சையான முடிவுகள் பற்றி கடும் அதிருப்தியும் ஆட்சேபனையும் எழுந்தன.

அடுத்த வாரம் கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைமை காரியாலயத்தில் நிறைவேற்றுக்குழு கூட் டம் நடைபெற்றது. இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பட் டது. காரசாரமான விவாதங்கள் நடந்தன.

சந்திரிக்காவுக்காக வக்காலத்து வாங்கியது தேவையற்ற செயல். தமிழர் விடுதலைக் கூட்டணி அதனை செய்திருக்க கூடாது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் உட்பட சிலர் கூறினர். சந்திரிக்கா அப்படி கூறினாரா இல்லையா என ஆருடம் கூறுவதற்கு தமிழர் விடுத லைக் கூட்டணிக்கு என்ன தேவை இருக்கிறது என அவர்கள் கேள்வி எழுப்பினர்.

நீலன், சம்பந்தன், ஆனந்தசங்கரி மீது கண்டனங்கள் எழுந் தன. கூட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது. அன்று மாலை நீலன், சம்பந்தன், ஆனந்தசங்கரி ஆகியோர் ஜனாதிபதி சந்திரிக்காவை

சந்தித்தனர். நீண்டநேரம் பேசினர். என்ன பேசினர் என்பது யாருக்கும் தெரியாது.

மகிந்த ராசபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தனது கட்சிக்கு தெரியாமல் தனியாக சம்பந்தன் சந்தித்து வந்தார். அது போல சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சம் பந்தன், ஆனந்தசங்கரி, நீலன் திருச்செல்வம் ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியா மல் சந்திப்பது வழமை.

தங்களுக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து என ஜனாதிபதி சந்திரிக்காவிடம் இவர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து மூவருக்கும் குண்டு துளைக்காத கார்கள் ஜனாதிபதி சந்திரிக்கா வினால் வழங்கப்பட்டதாகவும் ஒரு தகவல்.

இச்சம்பவம் நடைபெற்று சிறிது காலத்தில் 29.07.1999 அன்று கொழும்பில் விடுதலைப்புலிகளின் தற்கொலை தாக்குத லில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டார்.

*****

# 17 தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்ட உதயசூரியன் சின்னம்

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட பின் தமிழரசுக்கட்சி இயங்கு நிலையில் இல்லாத போதிலும் அக்கட்சியை தொடர்ந்து தேர்தல் திணைக்களத்தில் அமிர்தலிங்கம் தலைமையிலானவர்கள் பதிவு செய்திருந்தனர்.



1972ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த தமிழ் கட்சிகளான தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஷ் ஆகிய கட்சிகள் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய போதிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும், இலங்கை தமிழரசுக்கட்சியும் கலைக்கப்படவில்லை. அவையும் இயங்கு நிலை கட்சிகளான தேர்தல் திணைக்களத்தில் பதியப்பட்டிருந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஷ் 1977ஆம் ஆண்டிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்றுவிட்டது.

1977க்கு பின்னர் தமிழரசுக்கட்சியின் தலைவராக கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேற்பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். கதிரவேற்பிள்ளை 1981ஆம் ஆண்டு

மார்ச் மாதம் காலமானார். அப்போது தமிழரசுக்கட்சியின் உப தலைவராக ஆவரங்கால் கே. சின்னத்துரை பெயரிடப்பட் டிருந்தார். தமிழரசுக்கட்சியின் செயலாளராக இருந்த ஆலால சுந்தரத்தை 1985ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் திகதி ரெலோ இயக்கத்தினர் கடத்தி சென்று சுட்டுக்கொன்றனர்.

1983 யூலை கரவரத்தை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா விற்கு சென்று அங்கு தங்கியிருந்தனர். ஆனால் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் தனது உடுவில் இல்லத்திலும், கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம் தனது நல்லூர் இல்லத்திலும், பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்தினம் தனது தொண்டமானாறு இல்லத்திலும் தங்கிருந்தனர்.

இந்த மூவரையும் சுட்டுக்கொல்லுமாறு இந்திய றோ அமைப்பு ரெலோ இயக்கத்திற்கு உத்தரவிட்டிருந்தது. அக்காலப்பகுதி யில் இந்திய றோவின் வழிநடத்தலில் ரெலோ இயக்கம் பல படுகொலைகளை யாழ்ப்பாணத்தில் நடத்தி கொண்டிருந்தது.

இந்திய றோ அமைப்பின் உத்தரவை அடுத்து ரெலோவின் தலைவர் சிறி சபாரத்தினம் தனது பொறுப்பாளர்களான பொபி, தாஸ் ஆகியோருக்கு தமிழ் தலைவர்கள் மூவரையும் சுட்டுக் கொல்லுமாறு தகவல் அனுப்பினார். உடுவிலில் இருந்த தர் மலிங்கத்தையும் நல்லூரில் இருந்த ஆலாலசுந்தரத்தையும் சுட்டுக்கொல்லுமாறு பொபிக்கு தகவல் அனுப்பினார். தொண்ட மானாறில் இருந்த கே.துரைரத்தினத்தை சுட்டுக்கொல்லுமாறு வடமராட்சி பொறுப்பாளர் தாஸிற்கு உத்தரவிட்டார். ஆனால் துரைரத்தினத்தை சுட்டுக்கொல்வதற்கு தாஸ் இணங்கவில்லை. வடமராட்சியில் மக்கள் செல்வாக்குள்ள ஒரு மனிதரை எந்த

குற்றச்சாட்டுக்களும் இன்றி எப்படி கொல்வது என அதற்கு அவர் இணங்கவில்லை. ஆனால் பொபி உடனடியாக ஆலால சுந்தரத்தையும் தர்மலிங்கத்தையும் வீட்டிலிருந்து கடத்தி சென்று சித்திரவதை செய்து சுட்டுக்கொன்று விட்டு அவர்களின் வீடுகளுக்கு அருகில் சடலத்தை வீசியிருந்தனர்.

ஆலாசுந்தரம் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னர் சில காலம் தமிழரசுக்கட்சியின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் பின்னர் மாவை சேனாதிராசாவின் பெயர் செயலாளராக பெயரிடப்பட்டு தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பபட்டிருந்தது.

தேர்தல் திணைக்கள சட்டத்தின் படி கட்சியின் செயலாளரே முடிவுகளை எடுக்கும் பொறுப்பு வாய்ந்தவராகும். வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிப்பது, தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பது உட்பட சகல அதிகாரங்களும் செயலாளருக்கே உண்டு.

தானே தமிழரசுக்கட்சியின் தலைவர் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்காவுக்கு லண்டனிலிருந்து ஆவரங்கால் சின்னத்துரை கடிதம் அனுப்பியதை தொடர்ந்து ஆவரங்கால் சின்னத்துரையையும், மாவை சேனாதிராசாவையும் தேர்தல் ஆணையாளர் நேரடியாக சமுகமளித்து விளக்கமளிக்குமாறு அறிவித்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதை தடுத்திருந்த ஆனந்தசங்கரி தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதையும் தடுக்கும் முகமாகவே ஆவரங்கால் சின்னத்துரை ஊடாக தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பபட்டதாக ஆனந்தசங்கரிக்கு

எதிரான தரப்பு குற்றம் சாட்டியது.

இதற்கு இடையில் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை கூடி புதிய தலைவராக ஆர்.சம்பந்தன் அவர்களை தெரிவு செய்தது. இந்த விடயம் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டது.

மாவை சேனாதிராசா தேர்தல் திணைக்களத்திற்கு சென்று தானே செயலாளர் என்பதை உறுதிப்படுத்தினார்.

தேர்தல் ஆணையாளர் 2004 பெப்ரவரி 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் ஆவரங்கால் சின்னத்துரையின் கோரிக்கையை நிராகரிப்பதாகவும், தமிழரசுக்கட்சி தேர்தலில் போட்டியிடலாம் என்றும் அதற்கான உரிமை செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கு உண்டு என்றும் அறிவித்தார்.

1952ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சி 1972 ஆம் ஆண்டுக்கு பின்னர் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கட்சி என்ற அந்தஸ்த்தையும் பெற்றுக்கொண்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி விடயத்தில் கொழும்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆனந்தசங்கரிக்கு சாதகமாக இருந்த போதிலும் தமிழரசுக்கட்சி விடயத்தில் தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பு ஆனந்தசங்கரிக்கு சாதகமாக இருக்கவில்லை, தானே தலைவர் என உரிமை கோரிய ஆவரங்கால் சின்னத்துரையும் அதன் பின் பெட்டிப்பாம்பாக அடங்கி விட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சி செயலாளர் சம்பந்தன் தலைமையிலானவர்கள் அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிட முடியாதது போல கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்

டது. இந்த வழக்கு நீதிமன்றில் இருந்ததாலும், கட்சியின் செய லாளரே வேட்புமனுவில் கையொப்பம் இடவேண்டும் என்ப தாலும் ஆனந்தசங்கரியாலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியாமல் போய்விட்டது.

ஆனந்தசங்கரி தான் சுயேச்சைக்குழுவாக போட்டியிடப்போ வதாக அறிவித்தார். ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக முன்னாள் மேயர் செல்லன் கந்தையன், பி.முத்துலிங்கம் போன்றவர்கள் இருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண அலு வலகத்தையும் ஆனந்தசங்கரி தரப்பினரே பயன்படுத்தினர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் ஆனந்தசங்கரி சுயேச்சை குழுவாக போட்டியிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக்கட்சியின் சின்னத்திலேயே போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு இன்னொரு நெருக்கடியும் ஏற்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தாம் தெரிவு செய்பவர்களை கொண்ட பொதுப்பட்டியல் ஒன்றை தருவோம் என்றும் மிகு தியான இடங்களுக்கு நான்கு கட்சிகளும் வேட்பாளர்களை நியமிக்கலாம் என விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஏனைய மாவட்டங்களில் கட்சிகளும் தமது வேட்பாளர் களை தெரிவு செய்ய வாய்ப்பு கிடைத்த போதிலும் மட்டக்களப் பில் கட்சிகளுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது. தலைமை வேட்பாளராக நியமிக்கப்பட்ட ஜோசப் பரராசசிங்கத்தை தவிர ஏனைய ஏழு பேரும் தமிழீழ விடுதலைப்புலிகளால் நியமிக்கப் பட்ட பொதுப்பட்டியல் ஊடாகவே வந்தனர்.

இது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த ஏனைய

கட்சிகளான ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிகளுக்கு அதிருப்தியாக இருந்த போதிலும் விடுதலைப்புலிகள் தலையிட்டதால் அவை எதையும் பேசமுடியாத நிலையில் இருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் இந்த நிலை அதிகமாக காணப்பட்டது.

2004. பெப்ரவரி 23ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்தது. 1970ஆம் ஆண்டிற்கு பின்னர் வடக்கு கிழக்கு முழுவதும் தமிழரசுக்கட்சியின் சின்னம் களமிறக்கப்பட்டிருந்தது.

1977ல் எழுச்சியுடன் வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வரலாற்று சாதனையை படைத்திருந்தது.

தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சின்னமாகவும் உதய சூரியன் சின்னம் பார்க்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட 2001ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சின்னமாக பார்க்கப்பட்டது. ஆனால் 2004ல் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சின்னம் தமிழ் மக்களை விட்டு கைநழுவி போனதற்கு யார் காரணம்?

*****

# 18 பொருளியல்துறை தலைவர் தம்பையா படுகொலை

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல்துறை தலைவர் குமாரவேல் தம்பையா, வவுனியா ஆசிக்குளம் கிராமத்தை பிறப்பிடமாக கொண்டவர். அவர் சுட்டுக்கொல்லப்படும் போது அவருக்கு வயது 48 மட்டுமே.



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பட்டம் பெற்ற தம்பையா சில காலம் ஆசிரியராக இருந்து பின்னர் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளராக பதவி ஏற்றவர். அவர் மட்டக்களப்பு வந்தாறுமூலையை பிறப்பிடமாக கொண்ட ஆசிரியையான கண்ணம்மாவை திருமணம் முடித்து மட்டக்களப்பு நகரில் ஞானசூரியம் சதுக்கத்தில் வாழ்ந்து வந்தார்.

தம்பையா கிழக்கு பல்கலைக்கழக பொருளியியல்துறை தலைவர் என்ற பல்கலைக்கழக கல்விசார் வட்டத்திற்குள் தன் பணியை சுருக்கி கொண்டவர் அல்ல.

தமிழ் இனத்தின் விடுதலை, அவர்களின் சமூக மேம்பாடு, மட்டக்களப்பு மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை என்ற பரந்த பரப்பில் பொதுப்பணியில் தன்னை அர்ப்ப

ணித்து கொண்டவர்.

1990களின் பின்னர் மட்டக்களப்பு மிகப்பயங்கரமான இராணுவ அடக்குமுறைக்குள் சிக்குண்டிருந்த காலம், கடத்தல்கள், காணாமல் போதல், என மக்கள் மரண பீதியில் வைக்கப்பட்டிருந்த காலம், மக்களின் அரசியல் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் பேரினவாத அரசின் பக்கம் சாய்ந்தால்தான் வாழ்வு என எண்ணும் அளவிற்கு அடக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த வேளையில் மட்டக்களப்பு பிரதேசத்தில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், கிழக்கு பல்கலைக்கழக சமூகம் என இரு தரப்பு மட்டுமே அடக்குமுறைகளுக்கு எதிராக, மக்களின் அரசியல் உரிமைகளுக்காக சில பணிகளை செய்து கொண்டிருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக சமூகம் என்ற வகையில் தம்பையா, ஜெயசிங்கம், கெனடி, ரவீந்திரநாத், ஆகியோர் துணிச்சலோடு சில காரியங்களை செய்து கொண்டிருந்தனர்.

1999ஆம் ஆண்டு காலகட்டம், மக்கள் மத்தியில் தமிழ் தேசிய உணர்வை கட்டி எழுப்ப வேண்டிய அவசியம் உணரப்பட்ட போது, மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எழுந்த போது அதற்கு துணிச்சலுடன் முன்வந்தவர்களில் தம்பையா முக்கியமானவர்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மட்டக்களப்பில் அரசியல் மற்றும் மனித உரிமை கருத்தரங்குகளை நடத்தி வந்த போதிலும் அதற்கு அப்பால் மட்டக்களப்பு மக்களை இணைத்து புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்களை இணைத்து பணியாற்ற வேண்டிய அவசியம் உணரப்பட்ட போது உதயமானதுதான் மட்டக்களப்பு தமிழர் மறுமலர்ச்சிக்கழகம்.

*கிழக்கு பல்கலைக்கழக சமூகம், கிழக்கிலங்கை செய்தி யாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவ னங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் , ஊடகவியலாளர்கள் என அனைவரையும் இணைத்து அமைப்பு ரீதியாக செயற்பட வேண்டும் என்ற எண் ணத்தில் மட்டக்களப்பு நகரில் உள்ள கத்தோலிக்க கழக மண்ட பத்தில் ஒரு மாலை வேளையில் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இதற்கான ஏற்பாடுகளை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அந்த கூட்டத்திற்கு நான் தலைமை தாங்கினேன். மண்டபம் நிறைந்த மக்கள் அதற்கு வருகை தந்திருந்தனர்.*

*அந்த கூட்டத்தில் உதயமானதுதான் மட்டக்களப்பு தமிழர் மறுமலர்ச்சிக்கழகம். மட்டக்களப்பு தமிழர் மறுமலர்ச்சி கழகத் தின் இணைப்பாளர்களாக கிழக்கு பல்கலைக்கழக பொருளியி யல் பீட தலைவர் தம்பையாவும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க செயலாளர் தவராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.*

*கூட்டம் முடிந்து மண்டபத்தை விட்டு வெளியே வந்த போது மட்டக்களப்பு மாவட்ட திணைக்களம் ஒன்றின் தலைவராக இருக்கும் என்னுடைய நண்பர் ஒருவர் என்னைக்கேட்டார். இது ஆபத்தான ஒரு வேலை. இராணுவ புலனாய்வு பிரிவினரும், அவர்களுடன் சேர்ந்திருக்கும் குழுக்களும் இதை அவதானித்து கொண்டிருக்கிறார்கள். கவனமாக செயற்படுங்கள், ஆபத்துக் கள் எந்த நேரத்திலும் உங்களுக்கு வரலாம் என எச்சரித்தார்.*

*அந்த நேரத்தில் கடத்தல்களும், படுகொலைகளும் மலிந்திருந்த காலம்.*

ஆபத்துக்களும், அச்சுறுத்தல்களும் இருந்த போதிலும் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட பொங்குதமிழ், மற்றும் கிழக்கில் நடத்தப்பட்ட படுகொலைகளை நினைவு கூரும் உயிர்கொலை நாள் உட்பட முக்கிய நிகழ்வுகளுக்கு தம்பையாவின் ஒத்து ழைப்பும் பங்களிப்பும் முழுமையாக இருந்தது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்தும் கருத்தரங்குக ளில் தம்பையா தவறாது கலந்து கொள்வார்.

இது மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபி விருத்தி தொடர்பாக தன் துறைசார்ந்த பணிகளுக்கு அப்பால் முழுக்கவனமெடுத்து செயற்பட்டார்.

தம்பையா வவுனியாவில் பிறந்த போதிலும் அவர் வவுனி யாவில் தன் கவனத்தை செலுத்தியவர் அல்ல. உண்மையில் சொல்லப்போனால் யாழ். மேலாதிக்க வாதத்தை எதிர்ப்பவர். வன்னி மக்களைப் போலவே மட்டக்களப்பு மக்களின் வாழ்வும் பிந்தங்கி இருப்பது கண்டு அதன் வளர்ச்சிக்காக தன்னை அர்ப் பணித்தவர்.

தம்பையா தன்னை மட்டக்களப்பின் மைந்தனாகவே நினைத் தார். மட்டக்களப்பு மண்ணின் மைந்தன் என்ற உரிமையோடு செயற்பட்டார்.

அவர் ஒரு போதுமே தன்னை வடபகுதியை சேர்ந்தவர் என் றோ, வன்னியை சேர்ந்தவர் என்றோ, எண்ணியவர் அல்ல.

ஆனால் என்ன கொடுமை,

மட்டக்களப்பிலிருந்து வடபகுதியை சேர்ந்தவர்கள் வெளி யேற வேண்டும் என தங்களை மட்டக்களப்பு மண்ணின் மைந் தர்கள் என கூறிக்கொண்டவர்கள் உத்தரவிட்ட போது வர்த்தகர்

கள், புத்திஜீவிகள் என பலரும் வெளியேறினர். தம்பையாவும் ஒரு சிலவாரம் வவுனியாவிலும் கொழும்பிலும் தங்கியிருந்து விட்டு நிலமை சீராகி விட்டது என்ற எண்ணத்தில் மட்டக்களப் பில் உள்ள தனது சொந்த வீட்டிற்கு திரும்பியிருந்தார்.

ஆனால் மட்டக்களப்பு மண்ணின் நலனைத்தவிர வேறெதும் சிந்திக்காத தம்பையா தன்னை இலக்கு வைப்பார்கள் என ஒரு துளி கூட நம்பியிருக்க மாட்டார்.

**கொலைக்கான காரணமும் சூத்திரதாரிகளும்**

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், மனித உரிமை மீறல் களுக்கு எதிராகவும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்த சிலர் குரல் கொடுத்துக்கொண்டிருந்த அதேவேளை சிங்கள பேரினவாத சக்திகளுடன் கைகோர்த்து கொண்டு விடுதலைப்பு லிகள் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தி கருணாவை அதிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும் என கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்த சிலர் மறைமுகமாக செயற்பட்டனர்.

தங்களை மட்டக்களப்பு மண்ணின் மைந்தர்கள் என அடை யாளம் காட்டிக்கொண்ட சிலர் கருணாவின் பிளவு வெளிப் பட்ட போது தங்களுக்கான ஒரு பொற்காலம் வந்துவிட்ட தாக துள்ளிக்குதித்தனர். கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வடபகுதி கல்விமான்களை வெளியேற்ற வேண்டும் என தமது நீண்டகால திட்டத்தை நிறைவேற்ற காலம் கனிந்து விட்டதாக மகிழ்ந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வடபகுதி விரிவுரை யாளர்களை வெளியேற்றுவதற்கு அவர்கள் எடுத்த முதலாவது ஆயுதம் தம்பையா படுகொலை. இவர்களில் ஒருவரை போட்டு தள்ளிவிட்டால் எல்லோரும் ஓடிவிடுவார்கள் என்று அவர்கள்

போட்ட திட்டத்தில் முதலில் அவர்களின் கண்ணில் பட்டவர் அப் பாவியான தம்பையா தான்.

இவர்களின் திட்டங்கள் எதையும் அறியாத தம்பையா அன் றும் வழமை போல மே 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை (24.05.2004) கிழக்கு பல்கலைக்கழகத்தில் தன் கடமையை முடித்து விட்டு மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்தில் உள்ள வீட்டிற்கு வந்திருந்தார்.

இக்கொலைக்கான திட்டத்தை தீட்டியவர்கள் வந்தாறுமூ லையில் உள்ள பல்கலைக்கழகத்திலிருந்து தம்பையா புறப் பட்டு வீட்டுக்கு செல்வதை அவதானித்து மட்டக்களப்பு நகரில் இருந்தவர்களுக்கு தகவல் கொடுத்தனர்.

மாலை 4.30மணியளவில் அவரின் வீட்டிற்கு வந்த இருவர் தம்பையா சேரை பார்க்க வேணும் என்றனர். யார் என பார்ப் பதற்காக வீட்டு வாசலுக்கு தம்பையா வந்த போது அவரின் நெஞ்சிலும், தலையிலும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அந்த இடத்திலேயே வீழ்ந்த தம்பையாவின் உயிர் பிரிந்தது.

சம்பவம் நடந்து சுமார் ஒரு மணித்தியாலம் கழித்து அந்த அதிர்ச்சி செய்தியை தவராசா தொலைபேசி மூலம் எனக்கு செ ான்னான். மனித நேயம் கொண்ட அனைவரும் கலங்கி நின்றார் கள். மிதித்த புல் சாகாத அந்த மென்மையான ஒரு மனிதரை, யாருக்கும் தீங்கு நினைக்காத ஒரு மனிதரை, யாரையும் கோவித்து பேசாத ஒரு பண்பான மனிதரை ஏன் சுட்டார்கள். விடைதெரியாது நாங்கள் கலங்கி நின்றோம்.

மறுநாள் காலை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் சார்பில் மலர் வளையம் ஒன்றை வாங்கிக்கொண்டு நானும், நடேசனும், தவராசாவும் சென்று தம்பையாவுக்கு அஞ்சலி

செலுத்தினோம். வெளியில் வந்து வளவுக்கு வெளியே மரத்திற்கு கீழ் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தோம். எங்களுக்கு அருகில் யாரும் இருக்கவில்லை. எங்கள் மூவரின் முகங்களும் கவலை, அதிர்ச்சி, அடுத்தது என்ன நடக்க போகிறதோ என்ற அச்சம் என்பவற்றால் உறைந்து போய் இருந்தது.

அப்போதுதான் நடேசன் அந்த அதிர்ச்சி தகவலை சொன்னான்.

அடுத்தது ஒரு பத்திரிகையாளரைத்தான் குறிவைப்பார்கள். யாழ்ப்பாண பத்திரிகையாளரைத்தான் அவர்கள் இலக்கு வைப்பார்கள். நீ கவனமாக இருந்து கொள், என என்னை பார்த்து நடேசன் சொன்னான். தவராசாவுக்கும் எனக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

இனி இங்கு இருக்க கூடிய சூழல் இல்லை. தான் கொழும்புக்கு இடமாற்றம் பெற்று செல்லப்போவதாக நடேசன் சொன்னான்.

சிறிது நேரத்தின் பின் நாங்கள் அங்கிருந்து வெளியேறினோம்.

சில நாட்களுக்கு மட்டக்களப்பை விட்டு வெளியேறுவதே பாதுகாப்பு என உணர்ந்தேன். யாழ்ப்பாணம் சென்று ஒரு வாரம் தங்குவதென முடிவு செய்தேன்.

யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு நடேசனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு வாரகாலத்திற்கு யாழ்ப்பாணம் சென்று தங்கப்போவதாக கூறினேன்.

நல்லவிடயம், நானும் கொழும்புக்கு விரைவில் இடமாற்றம் பெற்று செல்லப்போகிறேன். மகனுக்கும் யாழ்ப்பாணத்தில்

வேலை கிடைத்து விட்டது. அங்கு போவதற்கு திட்டம் போட்டி ருக்கிறோம் என நடேசன் சொன்னான்.

நான்கு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிருந்தேன். ஞாயிற் றுக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து நடேசனுக்கு தொலைபேசி யில் தொடர்பு கொண்டேன். இன்று ஞாயிறு வீரகேசரியில் என் கட்டுரை பார்த்தியா என கேட்டான். இல்லை என்றேன்.

இந்த படுகொலைகளையும், அராஜகங்களையும் எத்தனை நாட்களுக்கு இந்த சமுகம் பொறுத்துக் கொண்டிருக்க போகுது. தம்பையாவின் படுகொலை பற்றி காரசாரமான கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறேன். வாசித்து பார் என சொன்னான்.

ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பை வந்தடைந்தோம். திங்கள் வழமை போல மனைவியை அலுவலகத்திற்கு மோட் டார் சைக்கிளில் ஏற்றிச்செல்வதற்காக தயாராகி கொண்டிருந் தேன்.

அப்போதுதான் அந்த அதிர்ச்சி தகவல் வந்தது.

*****

# 19 புலிகளிடமிருந்து நடேசனை மீட்ட அவனது அக்கா

**2004** மே 31ஆம் திகதி. நடேசன் படுகொலை செய்யப்பட்ட நாள். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக , அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடுவீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல்துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு வீரகேசரியில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகியிருந்தது. மிக காரசாரமானதும், துணிச்சலோடு பல விடயங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது.




அந்த கட்டுரையில் பல கேள்விகள் எழுப்பபட்டிருந்தது.

இந்த சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்து பணியாற்றிய தம்மையாவின் படுகொலையை வெறும் செய்தியாக பார்த்து விட்டு மௌனமாக இருக்க போகிறோமா?

இத்தகைய கொலைகளுக்கு எதிராக வெகுஜனரீதியாக திரண்டெழுந்து இதை தடுக்கவில்லை என்றால் தம்பையாவை போன்ற பல கல்விமான்களை, அறிஞர்களை, சமூக பணியாளர்களை இழக்க வேண்டி வரும். அந்த இழப்புக்களை பார்த்து வெறும் கண்ணீரை விடும் சமூகமாக இருக்கப்போகிறதா அல்லது அராஜ

கவாதிகளுக்கெதிராக தங்கள் சக்தியை காட்டப்போகிறார்களா? என கேள்வி எழுப்பியிருந்த நடேசன் கட்டுரையின் இறுதியில் அரா ஜகவாதிகளின் அடுத்த இலக்கு யார் என்ற கேள்வியுடன் முடித்தி ருந்தார்.

அடுத்த இலக்கு தன்மீதுதான் என்பதை தெரிந்து கொண்டு தான் இதை எழுதினாரா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் தம்பையாவின் படுகொலையை ஒத்த கொலைகள் தொடரப்போகிறது என்ற ஆரூடத்தை அக்கட்டுரை சொல்லி யிருந்தது.. ஆனால் அந்த கட்டுரை வெளிவந்த அடுத்த நாளே தங்களின் அடுத்த இலக்கு யார் என்பதை கொலையாளிகள் வெளிப்படுத்தி விட்டார்கள்.

2004 மே 31 திங்கட்கிழமை. காலை 9மணியளவில் நடேசன் பணியாற்றிய அலுவலகத்திலிருந்துதான் ஒருவர் பேசினார். நடேசனை சுட்டுவிட்டார்கள். அவரின் மனைவிக்கு அறிவித்து விட்டோம். எங்கள் அலுவலகத்திலிருந்து சற்று தள்ளித்தான் இச்சம்பவம் நடந்திருக்கிறது என்றும் தாங்கள் அந்த இடத்திற்கு போகவில்லை என்றும் சொன்னார்கள். என்னால் நம்பமுடியா மல் இருக்கிறது. காயங்களுடனாவது தப்பி விட வேண்டும் என மனதிற்குள் எண்ணியவாறு சம்பவம் நடந்த இடத்திற்கு செல்வ தற்கு புறப்பட்ட போது அச்சத்தால் அங்கு போவது ஆபத்தில் லையா என என்னை தடுத்தார்கள்.

சம்பவம் நடைபெறுவதற்கு முன் தாண்டவன்வெளி திரு மலை வீதியில் பத்திரிகையாளர் உதயகுமாருடன் பேசி க்கொண்டிருந்து விட்டு அலுவகத்தை நோக்கி சென்ற போது தான் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எல்லைவீதி வழியாக நடேசன் மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நேர் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே கைத்துப்பாக் கியால் நடேசன் மீது சுட்டிருக்கின்றனர். நான் போனபோது இரத்தம் கொப்பளித்தவாறு நடேசனின் உடல் வீதி ஓரத்தில்

கிடந்தது. மோட்டார் சைக்கிள் விழுந்து கிடந்தது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் நின்றனர். தூரத்தில் பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களில் நடேசனு டன் நெருங்கிய நண்பர்களாக பழகிய சிலரும் நின்றிருந்தனர்.

அந்த நேரத்தில் சடலத்திற்கு அருகில் வர பலரும் அஞ்சினார் கள். அந்த நேரத்தில் அங்கு வந்த தினக்குரல் பத்திரிகையாளர் சந்திரபிரகாஷ் அண்ணன் இங்கு நிற்கவேண்டாம். சுட்ட ஆக் களும் இங்குதான் நிக்கிறார்கள். நீங்கள் நிற்பது ஆபத்து போய் விடுங்கள் என சொன்னான்.

எனக்கு ஏற்கனவே தெரிந்த பறங்கி இனத்தை சேர்ந்த ஒருவ ரின் வீட்டிற்கு முன்னால்தான் இச்சம்பவம் நடந்தது. அவர் வீட் டில் நின்று அவதானித்து கொண்டிருந்தார்.

அவரிடம் சென்று நடந்த சம்பவத்தை கேட்டேன். சொல்வ தற்கு தயங்கினார்கள். அந்த வீட்டுக்கார வயோதிபர் என்னுடன் நெருங்கிய பழக்கம் என்பதால் தனியாக அழைத்து சென்று சில தகவல்களை சொன்னார்.

வான் ஒன்றை ரெலோ பிரசன்னா கொண்டுவந்திருந்தார். சடலத்தை தூக்கி வானில் ஏற்ற வேண்டும். நான் ஒருபக்கம், பிரசன்னா மறுபக்கம் தூக்கினார். நடேசன் மிக உயரமான வர். எங்களால் தூக்க முடியாது கஷ்டப்பட்டோம். உதவிக்கு வருமாறு சற்று தூரத்தில் தள்ளி நின்றவர்களை அழைத்தோம். யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. இறுதியில் அங்கு நின்ற பொலிஸ்காரர் ஒருவரே வானில் சடலத்தை ஏற்ற உதவினார்.

இச்சம்பவத்தை அறிந்த மட்டக்களப்பு தமிழ் பத்திரிகையாளர் கள் அனைவரும் அச்சத்தால் உறைந்து போய் இருந்தார்கள். வைத்திய சாலைக்கு சடலத்தை கொண்டு போனதும் அங்கு தவராசா வந்து சேர்ந்தான். மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

சடலத்தை வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு சென்ற

போது அச்சமான சூழலிலும் நிந்தவூரிலிருந்து சலீம் போன்ற நண்பர்கள் வந்திருந்தனர்.

அந்த நேரத்திலிருந்து சடலத்தை யாழ்ப்பாணம் கரவெட்டிக்கு கொண்டு சென்று தகனம் செய்யும் வரை என்னுடன் கூட இருந்த ஒரேஒரு மட்டக்களப்பு பத்திரிகையாளர் தவராசா மட்டும் தான். சடலத்தை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதே நல்லது என நடேசனின் குடும்பத்தினருக்க கூறிய போது அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டனர்.

இந்த விடயத்தை நான் நடேசனின் குடும்பத்திற்கு கூற வில்லை. சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு முதல் காலையில் நடேசனின் மட்டக்களப்பு வீட்டில் பலரும் அஞ்சலி செலுத்தினார்கள். விடுதலைப்புலிகளின் நகரப்பொறுப்பாளர் சேனாதி தலைமையிலான சிலர் அஞ்சலி செலுத்தி விடுதலைப்புலிகளின் புலிக்கொடியை போர்த்தி சென்றார்கள்.

நெல்லியடியிலிருந்து வந்திருந்த நடேசனின் அக்கா அந்த கொடியை தூக்கி எறிந்து பிரச்சினை ஏற்படுத்தினார். புலிக்கொடியுடன் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு போக மாட்டோம் என கூறினார். (1990ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் நடேசனை கடத்தி சென்று அடைத்து வைத்திருந்த போது நடேசனின் அக்காவே 50ஆயிரம் ரூபாவை விடுதலைப்புலிகளுக்கு கொடுத்து நடேசனை மீட்டிருந்தார். அன்று 50ஆயிரம் ரூபாவை கொடுக்கவில்லை என்றால் புலிகள் அன்று நடேசனை மண்டையில் போட்டிருப்பார்கள்.)

மறுநாள் காலையில் நடேசனின் குடும்பம், மற்றும் நான் தவராசா, உதயகுமார் ஆகியோர் யாழ்ப்பாணம் புறப்பட்டோம். நாங்கள் புறப்பட்டு சில மணி நேரத்தில் மன்னம்பிட்டியை கடந்து சென்று கொண்டிருக்கும் போது தினக்குரல் அலுவலகத்திலிருந்தும், சக்தி தொலைக்காட்சியிலிருந்தும் தொலைபேசி எடுத்தார்கள். நடேசனின் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு

போகவிடாது இராணுவம் தடுத்து வைத்திருக்கிறதாமே, புலிக்கொடியுடன் சடலத்தை கொண்டு சென்றதால் நீங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என தகவல் வந்திருக்கிறது என கேட்டார்கள். யாரோ பொய்யான தகவலை வழங்கியிருந் தார்கள்.

வவுனியா எல்லையில் வைத்து புலித்தேவன் தலைமையில் வந்த விடுதலைப்புலிகள் பூதவுடலை கையேற்றார்கள். பெரிய அளவில் வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் அஞ்சலி நிகழ்ச்சி களை விடுதலைப்புலிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். மட்டக் களப்பில் புலிக்கொடியை தூக்கி எறிந்த நடேசனின் அக்கா வன் னியில் மௌனமாக இருந்தார்.

வவுனியா எல்லையில் விடுதலைப்புலிகள் நடேசனின் பூதவு டலை பொறுப்பேற்றதும் எங்களுடன் கூட வந்த உதயகுமார் தான் தொடர்ந்து வரவிரும்பவில்லை என கூறி மட்டக்களப் புக்கு திரும்பி சென்று விட்டார். அன்றிருந்த சூழலில் உதயகு மாரின் முடிவு சரி என்றே நான் நினைக்கிறேன். தவராசா செ ான்னான். அண்ணன் நான் கடைசி வரைக்கும் உங்களுடன் வருவேன். வருவது வரட்டும் என துணிச்சலுடன் யாழ்ப்பாணம் வந்தான். மறுநாள் கிளிநொச்சியில் அஞ்சலி நிகழ்ச்சி முடிந் ததும் அடுத்த நாள் நெல்லியடியில் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற் றது. நடேசன் படித்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத் தில் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது. கொழும்பிலிருந்து சுதந்திர ஊடக அமைப்பை சேர்ந்த சுனந்த தேசப்பிரிய உட்பட சிங்கள ஊடகவியலாளர்களும் வந்திருந்தனர்.

நெல்லியடி சுடலையில் தகனம் செய்யப்பட்ட பின் சுனந்த தேசப் பிரிய என்னை சந்தித்து மட்டக்களப்புக்கு செல்ல வேண் டாம் என ஆலோசனை கூறினார். கொழும்புக்கு வருமாறும் மாற்று ஏற்பாடு ஒன்றை செய்வதாகவும் கூறினார்.

மட்டக்களப்புக்கு திரும்பி சென்ற தவராசா அங்கு தொடர்ந்து

இருப்பது ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டு கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

கொழும்பில் நாங்கள் தங்கியிருந்த போது சிங்கள ஊடகவி யலாளர்களான சுனந்த தேசப்பிரிய, புத்திக, விக்ரர் ஐவன், ஆகி யோரும், பல வழிகளில் உதவி செய்தனர். கொழும்பில் தங்கி யிருப்பது நிதி நெருக்கடிக்குள் நாங்கள் இருப்போம் என்பதை நாங்கள் சொல்லாமலே உணர்ந்து கொண்ட பிபிசி ஊடகவி யலாளர் சீவகன் தனது சொந்தப்பணத்தில் எமக்கு செலவுக்கு காசு அனுப்பியிருந்தார்.

பிபிசி சந்தேசிய சிங்கள சேவையில் பணியாற்றும் பண்டார அதற்கு மேல் ஒரு படி சென்று கொழும்பிலிருந்து சுவிஸிற்கு வருவதற்கான பயணசீட்டுக்குரிய பணம் தொடக்கம் லண்ட னில் இருக்கும் சர்வதேச நிறுவனம் ஒன்றின் ஊடாக துரிதமாக செய்தார்.

விக்ரர் ஐவன், சுனந்த தேசப்பிரியா ஆகியோர் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்துடன் பேசியதன் பலனாக விண்ணப் பத்தை கொடுத்து 18 நாட்களில் அகதி தஞ்ச கோரிக்கை ஏற்றுக் கொண்டு விசாவை வழங்கியிருந்தார்கள். நடேசன் கொல்லப் பட்டு 14 ஆண்டுகள் கடந்து விட்டன. இன்று அவன் பணியாற்றிய ஊடகங்களும் மறந்து விட்டன. அவனின் நண்பர்களும் மறந்து விட்டார்கள். நடேசனின் படத்தை போட்டு வியாபாரம் நடத்தும் லங்காசிறி போன்ற மாபியா இணையத்தளங்களுக்கும் நடேசன் பற்றி தெரியாது.

எந்த நாட்டிலும் கொலைகளை செய்தவர்களுக்கு, கடத்தல் களை செய்தவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டது கிடையாது.

அந்த சாதனையை இலங்கை மட்டும்தான் செய்திருக்கிறது

*****

# 20 விவசாயத்துறையை வளர்த்தெடுத்த ரவீந்திரநாத்



தமது பதவி உயர்வு, முன்னேற்றம் என வாழும் பேராசிரியர்கள் மத்தியில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த பேராசிரியர் ரவீந்திரநாத் மட்டக்களப் புக்கு மட்டுமல்ல இலங்கை முழுவதிற் குமான ஒரு பெரும் சொத்து என்பதை கொலைகாரர்களுக்கு நிட்சயம் தெரிந்தி ருக்காது.

விவசாயத்துறை பட்டதாரியான ரவீந்திரநாத் 1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு கரடியனாறு விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தராக பணியாற் றினார். அந்நேரம் மட்டக்களப்பு மாவட்டம் சூறாவளியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் பாதிக்கப்பட்ட விவசா யத்துறையை மீண்டும் கட்டி எழுப்ப பெரிதும் உதவினார்.

வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய கட்டிடம் கிழக்கு பல்கலைக்கழக கல்லூரிக்காக கையளிக்கப்பட்ட போது குப்பை கூழங்களாக இருந்ததை ஒரு பல்கலைக்கழக சூழலுக்கு உருவாக்கியவர்கள் ரவீந்திரநாத், ஜெயசிங்கம், மனோ சபாரத் தினம் போன்றவர்களே.

கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடத்தில் பணியாற்றிய போது பேராசிரியர் ரவீந்திரநாத் மிளக்காய் செய்கை பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக இன்று இலங்கையில் செய்கை பண்ணப்படும் மிளகாய் செடி இனத்தை கண்டு பிடித்தார். இது போன்று எந்நேரமும் விவசாய பண்ணையில்

தனது நேரத்தை செலவழித்து நல்லின உற்பத்திகளை கண்டு பிடித்து கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் மிகப்பெரிய சொத்தாக திகழ்ந்தார். தமிழ் மக்களின் தேசிய விடு தலை தொடர்பாக தீவிர அக்கறை கொண்டிருந்த அவர் மட்டக் களப்பில் ஜனநாயக ரீதியாக நடத்தப்பட்ட போராட்டங்கள், செயற்பாடுகளில் கலந்து கொள்ள தவறுவதில்லை. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் யாழ்ப் பாண தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கிய கருணாகுழு கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்களையும் அப்பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என உத்தரவிட்டனர்.

இதற்காக 2006ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி கருணா குழு கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த பால சுகுமாரை கடத்தி சென்றனர். பேராசிரியர் ரவீந் திரநாத் அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்தால்தான் பால சுகுமாரை விடுதலை செய்வோம் என அக்குழு அறிவித்திருந் தது. இதன்படி பேராசிரியர் ரவீந்திரநாத் தனது இராஜினாமா கடிதத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியதை அடுத்து பாலசுகுமார் கருணாகுழுவால் விடுவிக் கப்பட்டார். ரவீந்திரநாத் இராஜினாமா செய்த போதிலும் பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் அவரின் இரா ஜினாமாவை ஏற்றுக்கொள்ளவில்லை.

கொழும்பிலிருந்து பணியாற்றுமாறு அவருக்கு பணித்திருந் தார். மட்டக்களப்பை விட்டு வெளியேறி கொழும்பில் தங்கியி ருந்த நிலையிலேயே 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் வைத்து பேராசி ரியர் ரவிந்திரநாத் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப் பட்டார்.

*****

# 21 வெற்றி பெற்று ஒரு மாதத்தில் கொல்லப்பட்ட நிமலன்



**2000** ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி நடந்த பொதுத்தேர்தலில் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழ் கட்சியை சேர்ந்தவர்களாக இரு உறுப்பினர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து எவரும் தெரிவு செய்யப்படவில்லை. 5 உறுப்பினர்களை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

நிமலன் சௌந்தரநாயகம் 15687 விருப்பு வாக்குகளையும் ஜோசப் பரராசசிங்கம் 12,867 விருப்பு வாக்குகளையும் பெற்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

800 வாக்குகளை தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் பெற்றிருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு ஆசனம் தான் கிடைத்திருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் தமது பிரதிநிதித்துவத்தை சிங்கள முஸ்லீம் இனங்களுக்கு பறிகொடுத்திருந்த வேளையில் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான நிமலன் சௌந்தரநாயகம்

பொதுத்தேர்தல் முடிவடைந்து ஒரு மாதம் முடிவடைவதற்கு முதல் 07.11.2000 அன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

இலங்கையின் வரலாற்றில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் சத்திய பிரமாணம் செய்து பதவியை ஏற்பதற்கு முன் சுட்டுக்கொல்லப் பட்டவர் நிமலன் சௌந்தரநாயகம் தான்.

நிமலன் சௌந்தநாயகம் தமிழ் இளைஞர் பேரவையின் உறுப் பினராக மட்டக்களப்பில் காசி ஆனந்தன், வேணுதாஸ், ஆகியோ ருடன் இணைந்து செயல்பட்டவர். நிமலன் சௌந்தநாயகம் ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். மூன்று மொழிகளிலும் நன்கு பரிச்சயம் கொண்டவர். தமிழ் பற்றும் துணிச்சலும் கொண்ட ஒருவரை மட்டக்களப்பு மக்கள் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமது பிரதிநிதியாக தெரிவு செய்த போதிலும் ஒரு மாதகாலத்திற்குள் அவர் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரை விடுதலைப்புலிகளே சுட்டுக்கொன்றனர். நிமலன் சௌந்தநாயகம் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமாக செயற் பட்டவர். நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் கொழும்பு சென்று சத்தியபிரமாணம் செய்வதற்கு முதல் விடுதலைப்புலிகள் சந்திக்க வருமாறு அவரை அழைத் திருந்தனர். சம்பவதினம் காலையில் தனது உதவியாளருடன் நிமலன் சௌந்தநாயகம் கரடியனாற்றுக்கு சென்று அப்போது அரசியல் பொறுப்பாளராக இருந்த விசுவை சந்தித்தார். அன்று மதியம் விசு உட்பட முக்கிய தளபதிகளுடன் உணவையும் உண் டார்.

மதிய உணவின் பின்னர் புறப்படும் போது நிமலன் சௌந்த ரநாயகத்திற்கு புதிய ஹெல்மெட் ஒன்றையும் விசு அன்பளிப் பாக வழங்கினார். மோட்டார் சைக்கிளில் செங்கலடி கறுப்பு

பாலத்தை கடந்து செங்கலடி நகருக்கு வந்த நிமலன் சௌந் தரநாயகம் செங்கலடி சந்தியில் தனது நண்பர்கள் சிலரை சந்தித்து பேசும் போது கரடியனாற்றிற்கு சென்று விடுதலைப் புலிகளை சந்தித்துவிட்டு வருவதாகவும் விசு தனக்கு புதிய ஹெல்மெட் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார் என் றும் மகிழ்ச்சியோடு கூறினார்.

அதன் பின்னர் செங்கலடியிலிருந்து வாழைச்சேனைக்கு தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது மாலை 8மணியளவில் கிரானில் வைத்து நிமலன் சௌந்தரநாயகம் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் வருகைக்காக காத்திருந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியால் அவரை சு ட்டு விட்டு தப்பி சென்றார். இச்சம்பவம் கிரான் கூட்டுறவு சங்க கடைக்கு எதிரிலேயே நடைபெற்றது. பொதுமக்கள் பலர் அக்க டையில் நின்றுள்ளனர்.

கிரானில் உள்ள மக்களுக்கு மிகவும் பரிச்சயமான விடு தலைப்புலி உறுப்பினர் ஒருவரே நிமலன் சௌந்தரநாயகத்தை சுட்டுக்கொன்றார் என்பது அப்பகுதி மக்களுக்கு தெரியும். பெடி யள் நிமலன் சௌந்தரநாயகத்தை சுட்டுவிட்டார்கள் என அப்ப குதி மக்கள் பேசிக்கொண்டனர்.

நிமலன் சௌந்தரநாயகத்தை கரடியனாற்றிற்கு அழைத்த விடுதலைப்புலிகள் நாடாளுமன்றத்திற்கு சத்திய பிரமாணம் செய்ய செல்லும் போது உதவியாளராக அல்லது சாரதியாக தங்களின் தற்கொலை போராளி ஒருவரை அழைத்து செல்ல வேண்டும் என கோரியதாகவும், அதற்கு நிமலன் சௌந்தரநா யகம் மறுத்ததாலேயே அவர் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிமலன் சௌந்தரநாயகத்தின் படுகொலையை கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை ஒன்றை வெளியிட்டி

ருந்தது. இது ஒரு முட்டாள்தனமான கொலை என்றும் அமைதி யான அரசியல் தீர்வை நாடி செல்லும் ஜனநாயக ரீதியான அர சியல் தலைவரை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை படுகொலை செய்யும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்திருந்தது.

கிழக்கில் தெரிவு செய்யப்பட்டது இரு உறுப்பினர்கள் தான். அதிலும் ஒருவரை விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்று விட்டனர். ஆளுமை மிக்க இளம் அரசியல் தலைவர் ஒருவரை மட்டக்களப்பு மக்கள் இழந்தனர். இப்படுகொலை மட்டக்களப்பு மக்கள் மத்தியில் பெரும் கவலையை தோற்றுவித்திருந்தது. நிமலன் சௌந்தரநாயகம் அவர்களின் அஞ்சலி நிகழ்விலும் இறுதிச்சடங்கிலும் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்த சங்கரி, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசிங்கம் உட்பட தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப் பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இன்று நிமலன் சௌந் தரநாயகம் உயிருடன் இருந்திருந்தால் கிழக்கு மாகாணத்தில் சிறந்த தமிழ் அரசியல் தலைவராக திகழ்ந்திருப்பார்.

எனினும் விடுதலைப்புலிகளின் துப்பாக்கி குண்டிலிருந்து தப் பியிருந்தாலும் ரவிராஜ் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டது போல நிமலன் சௌந்தரநாயகம் மீது அரச பயங்கரவாதத் தின் குண்டு பாய்ந்திருக்கும்.

*****

# 22 முரசொலியில் எனது அனுபவமும் அகிலனின் மரணமும்

எனது பத்திரிகை துறை அனுபவத்தில் யாழ்ப்பாணம் முரசொலி பத்திரிகையில் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை. பல அனுப வங்களையும் அக்காலங்கள் எமக்கு கற்று தந்திருக்கிறது.



தற்போது கனடாவில் இருக்கும் திருச்செல்வம் பிர தம ஆசிரியராக இருந்தார். தினக்குரல் வாரப்பத்திரிகை ஆசிரியர் பாரதி, கனடா தொலைக்காட்சி ஒன்றில் செய்திஆசிரியராக இருக்கும் இரட் ணதுரை, அமெரிக்காவில் இருக்கும் எம்.ரூபன் என பலருடன் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை.

முரசொலியில் பணியாற்றிய காலங்களில் துன்பகரமான சம்பவங்களில் அகிலன் திருச்செல்வத்தின் மரணம் மறக்க முடியாதவை.

1989ஆம் ஆண்டு இந்திய இராணுவ காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் செய்த படுகொலைகளில் அகிலன் திருச்செல்வத்தின் மரணமும் ஒன்றாகும்.

அக்காலப்பகுதியில் நான் முரசொலி பத்திரிகையில் உதவி ஆசிரியராக கடமையாற்றி வந்தேன். அக்காலப்பகுதி யில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் மண்டையன்குழு என்ற

கொலைப்படை யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திரு கோணமலை ஆகிய இடங்களில் இயங்கி வந்தது.

1989ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் இளைஞர் ஒருவரின் வயிற்றிலிருந்து கொக்கோ கோலா போத்தல் ஒன்று சத்திரசிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது.

அச்செய்தி முரசொலி பத்திரிகையில் மட்டுமே வெளியாகி யது. இளைஞர் ஒருவரின் வயிற்றிலிருந்து கோலா போத்தல் மீட்கப்பட்டது. அந்த இளைஞர் சில தினங்களுக்கு முதல் சில ரால் கடத்தி செல்லப்பட்டிருந்தார் என இறுதியில் எழுதப்பட்டி ருந்தது.

அந்த இளைஞரை கடத்தியவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக் கத்தினர் என பின்னர் பலருக்கும் தெரியவந்தது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் முரசொலி ஆசிரியர் திருச்செல் வத்தை சுட்டுக்கொல்வதற்கு திட்டமிட்டனர்.

முரசொலி பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் செய்து வந்த படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் அம் பலப்படுத்தி வந்தது.

புலி ஆதரவாளர்கள் புலிகளுக்கு உதவியவர்கள், புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் எனப் பலர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டனர். திருச்செல் வத்தையும் கடத்தி கொலை செய்வதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் திட்டமிட்டது.

எஸ்.திருச்செல்வம் அவர்களைக் கடத்துவதற்காக அவ ருடைய வீட்டுக்கு மண்டையன் குழுவினர் சென்ற போது திருச்செல்வம் வீட்டின் பின் பக்கத்தால் தப்பியோடிவிட்டார். அதனால் அங்கிருந்த அவரது மகன் அகிலனை மண்டையன்

குழுவினர் கடத்திச் சென்றனர். திருச்செல்வம் தங்களிடம் வந் தால் மகனை விடுவிப்போம் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத் தினர் எச்சரித்துச் சென்றனர். தான் அவர்களிடம் சென்றால் கொல்லப்படுவேன் என்பதை நன்கு அறிந்திருந்த திருச்செல்வம் தான் செல்லாவிட்டால் தன் மகனைக் கொல்வார்கள் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்நிலையில் மண்டையன் குழு அகிலனை படுமோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கியது. அகிலனின் மலவாசலினூடாக சோடாப் போத்தலை செலுத்தினார்கள். அவருடைய நகங்க ளைப் பிடுங்கினார்கள். மறுநாள் அகிலன் பிணமாக வீதியில் வீசப்பட்டான்.

எஸ்.திருச்செல்வம் தம்பதிகளுக்கு கனடிய அரசு அரசியல் தஞ்சம் வழங்கி அவர்களை கனடாவுக்கு அழைத்தது.

திருச் செல்வம் தனது மகனின் கொலை தொடர்பாக கனடிய அரசுக்கு வழங்கிய சாட்சியத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரனைக் குற்றம்சாட்டி இருந்தார். அதனால் சுரேஸ் பிரேமச்சந்திரனின் பெயர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவருக்கு விசா வழங்க கனடிய அரசு மறுத்து வருகின்றது.

இந்த இயக்கங்கள் மக்களுக்கு எதிராக துப்பாக்கிகளைத் திருப்பிய சம்பவங்கள் எண்ணிலடங்கா. அரச படைகளுக்கு எவ்விதத்திலும் குறையாமல் சித்திரவதைகளிலும் படுகொலை களிலும் இந்த இயக்கங்கள் ஈடுபட்டன. ஒருவரைக் கொல் வதற்கு எவ்வித காரணங்களும் கொடுக்கப்பட வேண்டிய தேவையே இருக்கவில்லை.

திருச்செல்வத்தின் மகன் அகிலனை நான் நன்கு அறிந்திருந் தேன். அமைதியான சுபாவம் கொண்ட படிப்பு, விளையாட்டு

என சகல துறைகளிலும் சாதனை படைத்த மாணவன்.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மிகத் திறமை யான மாணவனான அகிலன் படுகொலை செய்யப்படுவதற்கு சில வாரங்கள் முன்னதாக க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவு கள் வெளியாகி இருந்தது. அதில் அகிலன் நான்கு பாடங்களிலும் 'ஏ சித்தி பெற்றிருந்தான். தான் கல்வி கற்ற கல்லூரியின் கிரிக் கட் குழுவின் தலைவனாகவும் அகிலன் விளங்கினான்.

மாணவன் அகிலன் திருச்செல்வத்தின் கொலை ஒரு போதுமே நியாயப்படுத்தப்பட முடியாத படுகொலை. தக்ப்பனுக்காக ஒரு போதுமே மகனைக் கடத்திப் படுகொலை செய்தது யாராகவி ருந்தாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

*****

# 23 சந்திரிக்காவின் அபிவிருத்தியும் நிமலராசனின் படுகொலையும்



2000 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இராணுவ முற்றுகைக்குள் இருந்த காலம். இடப்பெயர்வு, இராணுவ நெருக்கடி என மக்கள் இன்னல்களை அனுபவித்து வந்த காலம்.

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஈ.பி.டி.பி யாழ். தீவகப்பகுதியிலும் யாழ். குடாநாட்டிலும் ஆயுதபலத்துடன் செய்த மோசடிகளை சுதந்திரமான தேர்தல் கண்காணிப்பாளர் என்ற ரீதியிலும் ஊடகவியலாளர் என்ற ரீதியிலும் நிமலராசன் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியிருந்தார்.

வாக்களிப்பு நிலையங்களில் நடந்த மோசடிகள் பற்றியும் வாக்களிப்பு நிலையங்களில் ஏனைய கட்சி முகவர்களை அச்சுறுத்தி கலைத்து விட்டு ஈ.பி.டி.பியினர் செய்த தேர்தல் மோசடிகளை நிமலராசன் அம்பலப்படுத்தியிருந்தார்.

தேர்தல் முடிந்து 9ஆவது நாள் ஒகஸ்ட் 19ஆம் திகதி சந்திரிக்கா அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை பதவி ஏற்றுக்கொண்டது. அந்த அமைச்சரவையில் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டார். பதவி ஏற்றுக்கொண்டதும் தான் யாழ்ப்பாண மக்களுக்கு விடுதலை பெற்று தரப்போவதாகவும் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தா பதவி ஏற்றுக்கொண்டதும் அன்றிரவே

தனது அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்தார்.

ஓகஸ்ட் 19ஆம் திகதி இரவு 10மணியளவில் யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் தனது வீட்டில் இருந்த போது ஆயுததாரி களால் நிமலராசன் சுட்டுக்கொல்லப்பட்டார். தனது அறையில் செய்தி ஒன்றை எழுதிக்கொண்டிருக்கும் போது மிக நெருக்க மாக வந்து அவரின் நெஞ்சை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்ததுடன் கிரனட் தாக்குதல்களையும் நடத்தினர்.

நிமலராசனின் வீடு இராணுவத்தினரின் பாதுகாப்பு வல யத்திற்குள் இருந்தது. நிமலராசனின் வீட்டிற்கு முன்னால் இராணுவ சாவடி ஒன்றும் இருந்தது. இத்தகைய இராணுவ பாதுகாப்பு நிறைந்த இடத்திலேயே இக்கொலை நடந்தது. இரா ணுவத்தினரின் அனுசரணை இல்லாமல் ஆயுதத்துடன் அங்கு யாரும் நுழைந்து விட முடியாது. இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவே இக்கொலையை செய்ததாக தமிழ் நெற் போன்ற ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பி எவ்வாறு வாக்கு மோசடியை செய் தது என்பதை விரிவாக எழுதியிருந்தார். அத்தேர்தலில் ஈ.பி.டி.பி யாழ். மாவட்டத்தில் நான்கு உறுப்பினர்களை பெற்றிருந்தது.

சந்திரிக்கா அரசாங்கத்தில் முதல் தடவையாக அமைச்ச ராக பதவி ஏற்றதும் டக்ளஸ் தேவானந்தா தனது அபிவிருத்தி வேலைகளை அன்றிரவே ஆரம்பித்தார்.

நிமலராசன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் முக்கிய உறுப்பினரான நெப்போலியன் உட்பட மூவர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். நெப்போலி யன் இலங்கையிலிருந்து தப்பி லண்டனுக்கு சென்ற நிலையில் அவ்வழக்கும் மூடப்பட்டு விட்டது.

நிமலராசன் படுகொலை உட்பட பல படுகொலைகளை செய்

ததாக நம்பப்படும் ஈ.பி.டி.பி உறுப்பினர் நெப்போலியன் லண்ட னில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு லண்டனில் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது.

தனது ஊடகவியலாளர் ஒருவரை படுகொலை செய்த கொலையாளிக்கு பிரித்தானிய அரசு அடைக்கலம் வழங்கியி ருப்பதை கண்டு பி.பி.சி நிறுவனமும் மௌனம் காத்துக் கொண் டது.

நிமலராசன் 1988ஆம் ஆண்டு பகுதியில் முரசொலி பத்திரி கையில் நான் வேலை செய்தகாலத்தில் விளம்பர பகுதியில் சுறுசுறுப்பான இளைஞனாக நிமலராசன் எமக்கு அறிமுகமாகி றான்.

அவரது தந்தை மயில்வாகனம் 1983ஆம் ஆண்டு கலவ ரத்தை தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து முரசொலி பத்திரி கையின் அச்சகப்பகுதி முகாமையாளராக பணியாற்றினார்.

விளம்பர விடயமாக யாழ். குடாநாட்டின் பல பாகங்க ளுக்கும் செல்லும் நிமலராசன், தனது பணிகளுக்கு அப்பால் ஆங்காங்கே கிடைக்கும் செய்திகளையும், மக்கள் சொல்லும் தகவல்களையும் சிறு துண்டுகளில் குறித்துக்கொண்டு வரு வான். தன்னுடைய கடமை முடிந்த பின் நிமலராசன் தனது அதி கமான நேரத்தை எம்முடன் ஆசிரிய பீடத்திலேயே கழிப்பான். அவன் குறித்து வரும் சிறுசிறு குறிப்புக்களில் சிலவேளைகளில் தலைப்பு செய்தியே இருக்கும்.

ஆசிரிய பீடத்திற்கு ஏனைய பிரிவுகளை சேர்ந்தவர்களும், வெளியாரும் வருவது இறுக்கமான கட்டுப்பாடுகள் இருந் தாலும் நிமலராசனுக்கு எந்த கட்டுப்பாடுகளும் கிடையாது. அவன் எல்லோரையும் அண்ணே என்று அழைத்து கட்டிப்போட் டிருந்தான். தினசரி நிமலராசன் கொண்டுவரும் செய்தி முன் பக்க செய்தியாக இருக்கும். செய்திப்பிரிவில் பணியாற்றாத

போதும் அவன் செய்தித்துறையில் காட்டிய ஆர்வமே பிற்கா லத்தில் அவனை ஒரு சிறந்த துணிச்சல் மிக்க பத்திரிகையாள னாக்கியது.

1990க்கு பின் முரசொலி மூடப்பட்டதை தொடர்ந்து நாம் ஒவ் வொருவரும் ஒவ்வொரு திசையாக பிரிந்து போனோம். பாரதி, ரட்னதுரை, ரூபன் என அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய போதும் நிமலராசன் யாழ்ப்பாணத்திலேயே தங் கியிருந்தான். நிமலராசனின் செய்தித்துறை ஆர்வம் 1990ஆம் ஆண்டுகளின் பின் செய்தியாளனாக அவனை தரிசிக்க முடிந் தது.

நெருக்கடியான அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ராவய, பிபிசி, வீரகேசரி என பல ஊடகங்களுக்கு பணியாற் றினான். 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்நெற் ஆரம் பிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்திற்கான பிரதம செய்தியாள ராக நிமலராசன் நியமிக்கப்பட்டார். அக்காலப்பகுதியிலிருந்து தமிழ்நெற்றில் பணியாற்றிய எனக்கும் நிமலராசனுக்கும் இடையிலான தொடர்பு மீண்டும் நெருக்கமானது. யாழ்ப்பா ணத்தில் கணனி வசதி இல்லாத அக்காலப்பகுதியில் நடுநிசி யில் கூட தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவலை சொல்லி அண்ணை உடனடியாக இதை மெயிலில போட்டுவி டுங்கோ என அன்புக்கட்டளை இடுவான். நேரகாலம் பாராது பணியாற்றும் துடிப்பு நிமலராசனைப்போல் வேறுயாரையும் நான் காணவில்லை.

அவனது சிங்கள மொழி ஆளுமை, துணிச்சல், அவனை மிகக்குறுகிய காலத்தில் திறமையும் அனுபவமும் மிக்க செய்தி யாளனாக உயர்த்தியது. நிமலராசன் எங்கும் நுழைந்து வெட்டி ஆடிவருவான் என சிவராம் அடிக்கடி சொல்லிக்கொள்ளுவான்.

*****

# 24 சிவராம் பற்றி எனது பார்வை



சிவராம் பற்றி நிறையவே விமர்சனங்கள் உண்டு. புளொட் இயக்கத்தில் இருந்த காலத்தில் சிவராம் உள்படுகொலைகளை புரிந்தார் என்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிவதற்கு சிவராமே காரணமாக இருந்தார் என்றும் பல குற்றச்ச ாட்டுக்கள் உண்டு.

ஆனால் இலங்கையின் தமிழர் போராட்ட வரலாறு எழுதப் படும் போது சிவராமின் பெயர் நிட்சயம் இருக்கும். அது ஆயுதப் போராட்ட வரலாறாக இருக்கலாம் அல்லது சமுக வரலாறாக இருக்கலாம் எந்தப்பக்கங்களிலும் சிவராமின் முகம் தெரிவதை யாராலும் தடுக்க முடியாது.

அவன் வாழ்ந்தது 46ஆண்டுகள் மட்டும்தான். ஆனால் அந்த 46 ஆண்டுகளில் அவன் பலவற்றைச்சாதித்து விட்டு சென்றிருக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிவராம் அடிக்கடி சொல்லும் ஒரு வார்த்தை..

எனது அப்பா 50வயதுடன் போய் சேர்ந்துவிட்டார். நானும் 50வயதுக்கு மேல் இருக்கமாட்டேன். போட்டுத்தள்ளிவிடுவார்கள். எப்போது போடுவார்கள் என்றுதான் தெரியவில்லை.

தன்னை நோக்கி துப்பாக்கி குண்டுகள் எப்போதும் வரலாம் என தெரிந்து கொண்ட போதும் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளாத சிவராமின் போக்கு துணிச்சலா, வீரமா, என எனக்கு

தெரியவில்லை.

தென் கரோலினா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் மார்க் விதாகர் கூறியிருப்பது போல சிவராமிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அரசியல் பல உண்டு.

சிவராமை முதலில் நான் பத்திரிகையாளராக சந்திக்க வில்லை. 1981 ஆம் ஆண்டு காலப்பகுதி, நான் பத்திரிகைதுறை யில் காலடி எடுத்து வைத்தகாலம். மட்டக்களப்பில் அப்போது பிரபலமாக இருந்த இலக்கிய அமைப்பான வாசகர் வட்டத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவே நான் முதலில் சிவராமை சந்தித் தேன்.

மட்டக்களப்பில் மட்டுமல்ல வடகிழக்கில் இலக்கிய புரட்சி ஒன்றை ஆரோக்கியமான இலக்கிய விமர்சனங்களை செய்யும் அமைப்பான மட்டக்களப்பு வாசகர் வட்டத்தை உருவாக்கியதில் சிவராமுக்கு பெரும் பங்கு உண்டு.

ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் புகழ்ச்சிதான் விமர்சனம் என்ற நிலையை மாற்றி சரியான திறனாய்வை முன்வைத்து இலக்கிய புரட்சி ஒன்றை செய்த அமைப்பாக வாசகர் வட் டத்தை வழிநடத்திய பெருமை சிவராமையும் ஆனந்தனையுமே சாரும். அந்த இருவரும் இன்று எம்மிடம் இல்லை. இருவருமே கொடிய துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகிவிட்டனர்.

மட்டக்களப்பில் மிகப்பிரபல்யம் வாய்ந்த தர்மரத்தினம் வன் னியனார் குடும்பத்தில் பிறந்த சிவராம் சிறுவயதில் மிகுந்த செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர். அவரது பாட்டனார் தர்மரத் தினம் வன்னியனார் செனட்டராக இருந்தவர். ஆரையம்பதியிலி ருந்து அக்கரைப்பற்று ஒலுவில் என பல பிரதேசங்களில் அவர் களுக்கு இருந்த காணி பூமியை கணக்கு பார்த்தால் இன்னும்

பத்து தலைமுறைக்கு காணும் எனச் சொல்வார்கள். ஆனால் அவற்றை எல்லாம் துறந்து ஒரு ஒட்டாண்டியாக வாழ்ந்தவர் தான் சிவராம்.

ஆரம்பகாலத்தில் இலக்கியதுறையிலும் தமிழ் இலக்க ணத்தை கற்பதிலும் ஆர்வம் காட்டி வந்தார். இதற்காக மகா வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசாவுடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டார். தற்கால இலக்கியங்களை மட்டமல்ல பழம்தமிழ் இலக்கியங்களை கற்பதில் கூட மிகுந்த ஆர்வம் காட் டிவந்தார். வடமொழியை சேர்க்காது தமிழை எழுத வேண்டும் என்பதில் கண்டிப்பான போக்கை கொண்டவர் சிவராம்.

1983களின் பின் நான் சிவராமை இலக்கிய கூட்டங்களில் காணவில்லை. அவரது நண்பர் இராசரத்தினத்திடம் கேட்ட போது அவர் சொன்னார் இனி நீங்கள் சிவராமை சந்திக்க முடியாது. எஸ்ஆரைதான் சந்திக்கலாம் என்றார். பின்னர் சி வராம் புளொட் இயக்கத்தில் சேர்ந்து விட்டதாக கேள்விப்பட் டேன்.

அப்போது நல்ல இலக்கிய விமர்சகனை இழந்து விட்டோமே என்ற ஆதங்கம் என்மனதில் எழுந்தது.

அதன் பின் சுமார் ஆறு வருடங்கள் கழித்து யாழ்ப்பாணத்தில் சிவ ராமை சந்தித்தேன். அப்போது நான் முரசொலி பத்திரிகை யின் உதவி ஆசிரியராக பணியாற்றினேன். 1989ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ற வேளையில் முரசொலி அலுவல கத்திற்கு வந்த சிவராம் தான் யாழ்ப்பாணத்தில் புளொட் அர சியல் பிரிவின் சார்பில் தலைமை வேட்பாளராக போட்டியி டுவதாக கூறினார். அப்போது சிவராம் புளொட் இயக்கத்தின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

யின் பொதுச்செயலாளராக இருந்தார்.

சிவராமின் தந்தை வழி மட்டக்களப்பாக இருந்தாலும் அவரின் தாய் வழி பருத்தித்துறையை சேர்ந்தவர்களாகும். அதனால் தானோ என்னவோ தான் தண்டயல் பரம்பரையை சேர்ந்தவன் என்றும் தன்னுடைய இரத்தத்தில் வீரம்நிறைந்த உப்பு ரத்தம் ஓடுகிறது என பெருமையாக என்னிடம் சொல்லிக்கொள்வான்.

1989ஆம் ஆண்டு தேர்தலின் பின் சிவராம் புளொட் அரசியல் பிரிவிலிருந்து விலகிவிட்டதாக கேள்விப்பட்டேன். மீண்டும் 1991ல் மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களின் வீட்டில் சிவராமை எதிர்பாராத விதமாக சந்தித்தேன் எஸ்ஆராக அல்ல தராக்கியாக.

ஒரு இலக்கியகாரனாக. போராளியாக. அரசியல்வாதியாக. நான் சந்தித்த சிவராமை இப்போது ஊடகத்துறை நண்பனாக பார்த்தபோது இரட்டிப்பு மகிழ்ச்சி.

அதன் பின்னர் நாம் அடிக்கடி சந்தித்துக்கொள்வோம்.

1993ஆம் ஆண்டில் பி.பி.சி ஆனந்தி அக்காவுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்று விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்து விட்டு மட்டக்களப்புக்கு வந்த சிவராமில் ஒரு உற்சாகம் தெரிந்தது. ஆயுதப்போராட்டத்தின் மூலமே தமிழர்களுக்கான சுதந்திர நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையோடு புளொட் இயக்கத்திற்கு சென்று ஆயுதப்பயிற்சி பெற்ற போதும் பின்னர் அந்த இயக்கத்தில் நம்பிக்கை இழந்து அதிலிருந்து விலகி ஊடகவியலாளராக பயணித்துக்கொண்டிருந்த சிவராம் மீண்டும் ஆயுதப்போராட்டத்தின் நம்பிக்கை கொண்டவராக காணப்பட்டார்.

அதுவரை காலமும் ஐலண்ட் பத்திரிகையில் எழுதி வந்த சிவராம் பின்னர் அப்பத்திரிகையில் எழுதுவதை நிறுத்தி சண்டே

ரைம்ஸ் பத்திரிகைக்கும் மிற்வீக் மிரருக்கும் எழுத ஆரம்பித்திருந் தார்.

அதன் பின் ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய அவரின் கட்டுரை களுக்கும் பின்னர் சண்டே ரைம்ஸ், மிக்வீக்மிரர் பத்திரிகைளில் எழுதிய கட்டுரைகளில் மாறுதல்கள் தெரிந்தன.

அப்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த விடிவானம் மற் றும் தினக்கதிர் வாரப்பத்திரிகைகளின் ஆசிரியராக நான் இருந் தபோது சிவராம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்தால் அப்பத்திரிகை அலுவலகத்திலேயே அதிக நேரத்தை கழிப்பார். மட்டக்களப்புக்கு வரும் ஒவ்வொரு தடவையும் விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டு பிரதேசமான படுவான்கரைக்கு சிவராமும் நானும் செல்வது வழக்கமாகும். சில வேளைகளில் நாங்கள் இராணுவத்தினரிடம் மாட்டிக்கொண்டதும் உண்டு.

1994ஆம் ஆண்டுகளின் பின் மட்டக்களப்பில் ஊடகத்துறை யில் ஒரு மாற்றம் ஏற்பட்ட காலம் என்றும் சொல்லலாம். அந்த மாற்றத்திற்கு காரணமானவர்களில் சிவராமும் ஒருவர். ஊட கவியலாளர்களுக்கான ஒரு அமைப்பாக மட்டும் செயற்பட்டு வந்த கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தை மட்டக்களப்பின் அரசியல் சமுக விடயங்கள் பக்கம் திசை திருப்பியவர் சிவரா மாகும்.

ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை மக்களை அரசியல்மயப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் அடிக்கடி கூறிவந்தார். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தொடர்ச்சியாக அரசியல் கருத்தரங்குகளை நடத்துவ தற்கு உற்சாகம் கொடுத்து வந்தார். மட்டக்களப்பில் வாசகர் வட்டம் எவ்வாறு இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு

காரணமாக இருந்ததோ அதேபோல சிவராமின் பங்களிப்புடன் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் குறிப்பிட்ட அளவு அரசி யல் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதில் முக்கிய பங்குவகித்தது என லாம்.

1998ஆம் ஆண்டில் வீரகேசரி ஊடகவியலாளர்களான மாணிக்கவாசகம், ஸ்ரீகஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டபோது அவர்களின் விடுதலைக்காக சட்ட நடவடிக்கை எடுப்பது உட்பட அவர்களின் விடுதலைக்காக தமிழ் ஊடகவியலாளர்கள் தேசிய மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை முழுவதிலும் உள்ள தமிழ் ஊடகவிய லாளர்களை ஒன்றிணைத்து இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. இந்த உருவாக்கத்தில் கூட சிவ ராமே முக்கியமாக இருந்தார்.

வடகிழக்கில் உள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் பலரை கணணி யுகத்திற்குள் கொண்டுவந்த பெருமை சிவராமையே சாரும்.

அண்மையில் மறைந்த திருகோணமலையில் உள்ள இலங் கையின் மூத்த ஊடகவியலாளர் குருநாதனுடன் மனம்நெ கிழ்ந்து சொன்ன வார்த்தைகள். கணணி உலகிற்கு கொண்டு வந்து பத்திரிகை உலகில் தனக்கு புதிய மாறுதலை ஏற்படுத்தி தந்தவர் சிவராம் என சொன்னார்.

கணணி அறிவு எனக்கு இல்லையே என சொன்னபோது அதைப்பற்றி கவலைப்பட தேவையில்லை. கணணி உங்க ளுக்கு கற்றுத்தரும் என உற்சாகம் ஊட்டி பத்திரிகைதுறை வாழ்க்கையின் புதிய மாறுதலை தனக்கு தந்தவர் சிவராம் தான் என குருநாதன் சொன்னார்.

குருநாதனுக்கு மட்டுமல்ல வடகிழக்கில் பல பத்திரிகை யாளர்களுக்கு பல வழிகளிலும் பக்கதுணையான நின்றவர் சி வராம்.

தமிழ் மக்களுக்கு உறுதியான அரசியல் தலைமை ஒன்று இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வந்த சிவராம் 2000ஆம் ஆண்டில் நவக்கிரகங்களாக இருந்த தமிழ் கட்சிக ளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழ் தேசியக்கூட்ட மைப்பை உருவாக்குவதில் சிவராமே மூலகர்த்தாவாக இருந் தார். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தில் இருந்த நாம் அவருக்கு பக்கபலமாக இருந்து பயணித்தாலும் கடினமான அந்த பயணத்தின் சாரதியாக இருந்தவர் அவர்தான்.

சிவராமை பலரும் அரசியல் ஆய்வாளராகத்தான் அறிந்திருக் கிறார்கள். அவருக்கு அரசியலை விட தமிழ் இலக்கியத்திலும் ஆழமான பார்வை இருந்து வந்தது. வெளிஇடங்களை விட மட்டக்களப்பு மக்கள் அவரின் இலக்கிய பேச்சை கேட்பதற் கென்று பெருந்தொகையானோர் கூடுவதுண்டு. நகைச்சு வையுடன் கூடிய அவரின் இலக்கிய உரைக்கு உதாரணமாக ஒன்றை சொல்லலாம்.

வாசகர் வட்டம் நடத்திய இலக்கிய கருத்தரங்கில் உரை யாற்றுவதற்கு சிவராம் அழைக்கப்பட்டிருந்தார். அன்று காலை யில்தான் கொழும்பிலிருந்து சிவராம் வந்திருந்தார். வந்தவுடன் வாசகர் வட்ட நண்பர்கள் அவருக்கு ஒரு உத்தரவை பிறப்பித் திருந்தனர். கருத்தரங்கு முடியும் வரை கள்ளு என்ற கதையே இருக்க கூடாது என கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

வாசகர் வட்ட நண்பர்களின் உத்தரவை ஏற்று கொண்டு கருத்தரங்கிற்கு வந்த சிவராம் தன் உரையை ஆரம்பித்தார்.

இந்த கூட்டத்திற்கு பேசுவதற்கு அழைத்த தன்னுடைய நண்பர்கள் கூட்டம் முடியும் வரை கள்ளு என்ற பேச்சே வாயில் வரக்கூடாது என உத்தரவு போட்டிருப்பதாக கூறிய சிவராம் ஔவையார் முதல் தமிழ் புலவர்கள் எல்லாம் பழம் பெரும் இலக்கியங்களில் கள்ளின் பெருமை பற்றி பேசியிருக்கும் விடயங்களை மிக அழகாக இலக்கிய நயத்துடன் பேசினார்.

அவரின் உரையின் பெரும்பகுதி இலக்கியங்களில் புலவர்கள் கள்ளின் பெருமை பற்றி என்ன சொன்னார்கள் என்பதாகவே இருந்தது.

கள்ளைப்பற்றியே பேச்சே இருக்க கூடாது என உத்தரவு போட்ட வாசகர் வட்ட நண்பர்கள் சிவராமிடம் மாட்டிக் கொண்டு தவித்தனர்.

தோல்விகள் இழப்புக்கள் பற்றி சிவராம் தளர்ந்ததில்லை, அழுது துவண்டதும் இல்லை. அவன் வாழ்க்கையில் இருதடவைகள் மட்டுமே தான் இனி பெறமுடியாத ஒன்றை இழந்து விட்டதாக அழுதிருக்கிறான்.

முதலாவது அவனின் தாயாரின் மரணத்தின் போது

சிறுவயதில் தனது தந்தை இறந்தபின் அவனின் அனைத்து முன்னேற்றங்களிலும் வளர்த்தெடுத்த தாய்க்கு மட்டுமே கட்டுப்பட்ட ஒருவனாக சிவராம் வாழ்ந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

சிவராம் புளொட் இயக்கத்தில் சேர்ந்து இந்தியாவுக்கு பயிற்சிக்கு சென்ற போது எப்படி தன்னுடைய அறையில் பொருட்களை வைத்து விட்டு சென்றானோ அந்த அறையை அப்படியே பாதுகாத்து தினமும் சுத்தம் செய்து ஐந்து வருடங்களாக காத்திருந்த தாயின் அன்பைப்பற்றி சிவராம் அடிக்கடி

நினைவு படுத்திக்கொள்வான்.

இரண்டாவது.. சுனாமியின் போது.

அவன் மிகவும் நேசித்த மருமகன் சேசாத்திரி இறந்தபோது தன்னுடைய வாரிசாக வரக்கூடியவன் என சேசாத்திரியை சிவராம் நம்பியிருந்தான். சிவராமை போன்றே ஆளுமை மிக்க சேசாத்திரியை சுனாமி அள்ளிச் சென்ற போது அந்த இழப்பை தாங்கமுடியாது தவித்ததை நான் அறிந்திருக்கிறேன்.

ஆங்கில ஊடகத்துறையின் மூலமே சிவராம் தன்னை ஊட கவியலாளராக அறிமுகப்படுத்திக்கொண்டு சுமார் பல ஆண்டு களாக ஆங்கிலப்பத்திரிகையில் எழுதி வந்தாலும் பிற்காலத்தில் ஆங்கிலப்பத்திரிகைகளில் எழுதுவதை நிறுத்திக்கொண்டார்.

எவ்வளவுதான் தமிழ் மக்களின் பக்க நியாயத்தன்மைகளை தென்னிலங்கை சிங்களவர்களுக்கு சொல்லி வந்தாலும் அவர் கள் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளப்போவ தில்லை என்ற சலிப்பின் காரணமாகவே தான் ஆங்கிலப்பத் திரிகைகளுக்கு எழுதுவதை நிறுத்தி விட்டு தனது மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழ் பத்திரிகை களில் எழுத தொடங்கியிருப்பதாக இறுதிக்காலத்தில் சிவராம் சொல்லியிருந்தார்.

மட்டக்களப்பில் மக்களை அரசியல்மயப்படுத்த வேண்டும் அவர்கள் மத்தியில் தமது விடுதலைபற்றிய சரியான பார்வை இருக்க வேண்டும் என்பதில் சிவராம் உறுதியாக இருந்தார்.

நெருக்கடியான காலகட்டங்களில் துணிச்சலுடன் செயற் பட்ட ஊடகப்போராளி அவர். துப்பாக்கியை விட்டு பேனாவை தூக்கிய அவர் அதன் மூலம் தான் சார்ந்த இனத்தின் விடுதலைக்

*காக மிகக்கடுமையாக போராடினார்.*

*சிறிலங்கா அரசுக்கெதிராக சிவராம் துப்பாக்கி ஏந்திய போது அவரை கண்டு அஞ்சாத சிறிலங்கா தேசம் அவர் பேனா தூக்கிய போது அஞ்சியது.*


*பகுத்தறிவு கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்த சிவராம் எந்த ஒரு இனமும் விடுதலை பெற வேண்டுமாக இருந்தால் அந்த இனம் அரசியல் தெளிவுள்ள சமூகமாக உறுதியான அரசியல் தலைமையை கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவராக திகழ்ந்தார்.*

*நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்காக எந்த ஆபத்தையும் சந்திக்க தயாராகவே இருக்கின்றேன். ஓடி விடமாட்டேன் என 2004 நவம்பர் 5ஆம் திகதி வீரகேசரி வாரஇதழில் எழுதியிருந்தான்.*

*எந்த ஆபத்து வந்தாலும் இந்த மண்ணில்தான் மடிவேன் என்ற வைராக்கியத்தில் சிவராம் வென்றுவிட்டான்.*

*****

# 25 தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள்



இலங்கையின் வரலாற்றில் சிங்கள பேரினவாத அரசுகள் மேற்கொண்ட இனப்படுகொலைகள் 1980களின் பின் தமிழ் போராளி குழுக்களுக்கும், சிறிலங்கா படைகளுக்கும் இடையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் மட்டும் நடக்கவில்லை, தமிழர்கள் அகிம்சை வழியில் தமக்கான உரிமைகளை கோரி நின்ற வேளையிலும,; அதற்கு பதிலாக சிங்கள பேரினவாத அரசுக்கள் அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்து வந்திருக்கின்றன.

தமிழ் போராட்ட குழுக்கள் படையினர் மீது தாக்குதல் நடத்தியதால் அதற்கு பதிலாகவே தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள் என கூறுபவர்களும் உண்டு. ஆனால் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே சிங்கள பேரினவாத அரசுகள் தமிழர்கள் மீதான இனப்படுகொலையை ஆரம்பித்து விட்டன.

இலங்கையின் வரலாற்றில் தமிழர்கள் மீதான முதலாவது இனப்படுகொலை அம்பாறை இங்கினியாகலயில் 1956ஆம் ஆண்டு யூன் 05ஆம் திகதி இடம்பெற்றது.

தற்போது தமிழர்கள் சிறுபான்மையாக இருக்கும் அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்டதாக இருந்தது. 1940களின் பின்னர் அம்பாறையை அண்டிய பகுதிகளில்

சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டன. கல்லோயா அபிவி ருத்தி திட்டம், கந்தளாய் குடியேற்றத்திட்டம், அல்லைக்குடி யேற்ற திட்டங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தில் பெருந்தொ கையான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரதமரானார். 1956ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தார். இதை எதிர்த்து இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர்கள் கொழும்பு காலி முகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர். இவர்கள் மீது சிங்கள காடையர் கள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் தமிழ் தலைவர்கள் பலரும் காயமடைந்த னர். கொழும்பில் தமிழ் தலைவர்கள் தாக்குதல் நடத்திய சிங்கள காடையர்கள் அம்பாறை இங்கினியாகல பகுதியில் இருந்த தமி ழர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள காடை யர்கள் தமிழர்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். ஏற்கனவே அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்தது

இங்கினியாகல என்ற இடத்தில் இருந்த கரும்பு தொழிற் சாலையில் வேலை செய்து வந்த தமிழ் தொழிலாளர்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்குதல் நடத்தினர்.

பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டு படுகொலை செய் யப்பட்டனர். அரைகுறை உயிருடன் இருந்தவர்களையும் இறந் தவர்களின் சடலங்களையும் தீயில் தூக்கி வீசினார்கள். இதில் 157 தமிழ் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுவே இலங்கை வரலாற்றில் முதன் முதலில் பெருந்தொ கையாக படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

1956ல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா தமி;ழரசுக்கட்சி தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தார். இதனை எதிர்த்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண் டிக்கு பாதயாத்திரை சென்றார். இதனை தொடர்ந்து தென்னி லங்கையில் இனவாதம் பரப்பபட்டது

1958ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி வவுனியாவில் தமி ழரசுக்கட்சியின் மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பிலிருந்து தொடரூந்தில் சென்ற தமி;ழரசுகட்சி தொண்டர்கள் பொலன றுவையில் வைத்து தாக்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் மட்டக்களப்புக்கு சென்ற நுவரெலியா மேயர் செனிவரட்ணா கொல்லப்பட்டார். இதனை பெரிது படுத்தி அப்போது இருந்த பிரதமர் பண்டாரநாயக்கா அரச ஊடகங்கள் மூலம் தமிழர்க ளுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து இலங்கை முழுவதும் தமிழர்கள் மீது சிங்களவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

நூற்றுக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் தென்னிலங் கையில் படுகொலை செய்யப்பட்டார்கள். பல தமிழ் பெண் கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறை சி றி கதிர்வேலாயுத சுவாமி ஆலய குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து எரிக்கப்பட்டார்.

தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அதனை தடுக் காத பிரதமர் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக் கட்டும் என பகிரங்கமாக அறிவித்தார்.

இந்த இனப்படுகொலையின் போது தமிழர்களின் வீடு கள் தீவைத்து கொழுத்தப்பட்டன. பல தமிழ் குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். இக்காலப்பகுதியில்

300க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். காலங்காலமாக கொழும்பு உட்பட தென்னிலங்கையில்வசித்து வந்த தமிழர்கள் அகதிகளாக வடக்கு கிழக்கிற்கு திரும்பினர்.

இதன் பின்னர் இலங்கையில் நடந்த மூன்றாவது இனப்படு கொலையாக 1974ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி நான்கா வது உலக தமிழாராட்சி மாநாட்டில் நடந்த படுகொலை கருதப் படுகிறது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதி முதல் பத்தாம் திகதிவரை தமிழ் மக்கள் தமது மொழி பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய நான்காவது உலகத்தமிழராட்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்தனர்.

உலக தமிழராட்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெ றுவதை அதுவும் தமிழ் மக்கள் எழுச்சியுடன் நடத்துவதை அப்போது ஆட்சியிலிருந்து சிறிமாவோ பண்டாரநாயக்க அர சாங்கம் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் மகாநாடு நடத்து வதை தடுக்கும் வேலைகளில் அரசாங்கம் ஈடுபட்டது.

மாநாடு நடைபெறுவதற்கான அரங்குகளின் அனுமதியை யும்,மாநாட்டில் கலந்து கொள்ள இருந்த வெளிநாட்டு அறிஞர் களுக்கு விசா வழங்குவதற்கும்அரசாங்கம் மறுத்தது.

எனினும் மாநாட்டை நடத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் எழுச்சியுடன் செயற்பட்டதை கண்ட அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாநாட்டை நடத்த அனுமதி வழங் கியது. யாழ். குடாநாடு எங்கும் அலங்கரிக்கப்பட்டு யாழ்ப் பாணம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஜனவரி 10ஆம் திகதி நிறைவு நாளாக கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின பெருமையையும் பண்பாட் டைப்பற்றியும் பேசினார்கள்.

அப்போது மக்கள் கூட்டத்திற்குள் நுழைந்த உதவி காவல்

துறை அத்தியட்சகர் சந்திரசேகர தலைமையிலான சிறிலங்கா காவல்துறையினர் மக்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கி பிரயோகமும் செய்தனர். இம்மக்களை படுகொலை செய்த உதவி காவல்துறை அத்தியட்சகர் சந்திரசேகரவுக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா காவல்துறை அத்தியட்சகராக பதவி உயர்வு வழங்கினார்.

இப்படுகொலையே தமிழ் இளைஞர்கள் சிங்கள படையினருக்கு எதிராக ஆயுதம் எடுத்து போராட தூண்டியது எனலாம்.

இதன் பின்னர் இலங்கையில் 165க்கு மேற்பட்ட கூட்டுப்படுகொலைகளை சிங்கள இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழுக்களும் செய்தன.

குமுளமுனை படுகொலை, குமுதினி படகு படுகொலை, உடும்பன்குள படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை, கிழக்கு பல்கலைக்கழக படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, திராய்கேணி படுகொலை, வீரமுனை பிள்ளையார் ஆலய படுகொலை, நாகர்கோவில் பாடசாலை படுகொலை, குமரபுரம் படுகொலை, மைலந்தனை படுகொலை, மடுத்தேவாலயப்படுகொலை,காரைதீவு படுகொலை உட்பட 165க்கு மேற்பட்ட கூட்டுப்படுகொலைகள் நடந்திருக்கின்றன.

காரைதீவில் சுற்றிவளைப்பு ஒன்றின் போது கல்வியாளர்கள் வைத்தியர்கள் பொறியியலாளர்கள் என புலமைசார் அறிஞர்கள் பிரித்தெடுக்கப்பட்டு கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். தமிழர் சமூகத்தின் புலமைசார் அறிஞர்களை அழிக்கும் திட்டத்தில் இப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. இந்த படுகொலைகளின் பின்னணியில் சிறிலங்கா படையினருடன் முஸ்லீம் ஜிகாத் மற்றும் ஊர்காவல் படையினர் இணைந்து செயற்பட்டனர்.

சத்துருக்கொண்டானில் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்

9ஆம் திகதி மாலை வேளையில் 185 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமே மிகப்பெரிய கூட்டு படுகொலையாக கருதப்படுகிறது.

சத்துருக்கொண்டான் படுகொலை சம்பவத்தில் ஒருவயது கூட நிரம்பாத 5 குழந்தைகள் 10 வயதிற்கு உட்பட 42 சிறுவர் கள், 85 பெண்கள், 60 வயதுக்கு மேற்பட்ட 28 வயோதிபர்கள் என மொத்தமாக 185 பொதுமக்கள் வெட்டிக்கொலை செய்யப் பட்டு தீயில் போட்டு எரித்தனர். பிரியா என்ற மூன்று மாத குழந் தையை தாயின் கையிலிருந்து பறித்தெடுத்து இரண்டு துண்டு களாக வெட்டி தீயில் எறிந்தனர்.

சத்துருக்கொண்டான், கிழக்கு பல்கலைக்கழக படுகொலை உட்பட 1990களின் பின்னர் கிழக்கில் நடந்த படுகொலைகளை இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினருடன் புளொட் போன்ற தமிழ் ஒட்டுக்குழுக்களும் ஜிகாத் போன்ற முஸ்லீம் பயங்கரவாத குழுக்களும் சேர்ந்தே செய்தனர். பொது எதிரியான சிங்கள படைகள் தமிழ் மக்களை படுகொலை செய் ததை மிஞ்சும் அளவுக்கு தமிழ் மக்களை காப்பதற்காக ஆயுதம் ஏந்தி போராட புறப்பட்ட தமிழ் ஆயுதக்குழுகள் அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்திருக்கின்றன.

நாசி வதை முகாம்களில் நடந்த கொடுமைகளை விட கடந்த 50ஆண்டுகளில் இலங்கையில் சிங்கள பேரினவாத அரசுகளால் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாசிப்படுகொலைகளை கண்டு இத்தகைய படுகொலைகள் இனிஒருபோதும் வேண்டாம் என்று கூறிவரும் மேற்குலகம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்த படுகொலைகளை கண்டுகொள்ளவில்லை என்பதுதான் பெரும் கவலை.

*****

# 26 புனிதர்களாகவும் நீதிமான்களாகவும் மாறிவிட்ட தமிழ் இயக்கங்கள்

தமிழரசுக்கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி துரோகி பட்டங்களை வழங்கி கொண்டிருக்க ஊடகவியலாளர்கள், அப்பாவி பொது மக்கள் என ஆயிரக்கணக்கானவர்களை படுகொலை செய்த ஆயுதக்குழுக்கள் தியாகிகளாகி விட்டன.

படுகொலை செய்யப்பட்ட நிமலராசன், சிவராம், நடேசன், திருச்செல்வம் அகிலன், தொழிற்சங்கவாதி வணசிங்க, வண பிதா சந்திரா அடிகளார், போன்றவர்கள் மறக்கப்பட்டு விட்டனர். இவர்களை படுகொலை செய்தவர்கள் இன்று உத்தமர்கள் போல மக்கள் முன் வலம் வந்து கொண்டு இருக்கின்றனர்.



தமிழ் ஊடகத்துறையில் சிறந்த படைத்துறை ஆய்வாளராக திகழ்ந்த டி.சிவராமை புளொட் இயக்கம் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பில் வைத்து கடத்தி சென்று பின்னர் இராணுவ புலனாய்வு பிரிவினருடன் சேர்ந்து படுகொலை செய்தனர். சிவராம் பாவித்த தொலைபேசி சிம் அட்டை புளொட் இயக்க கொழும்பு பொறுப்பாளராக இருந்த பீற்றர் என்பவரின் வாகனத்திலிருந்து பொலிஸார் கைப்பற்றி இருந்தனர்.

புளொட் இயக்க கொழும்பு பொறுப்பாளர் பீற்றர் உட்பட சிலர் கைது செய்யப்பட்ட போதிலும் பின்னர் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். சிவராமின் கொலை வழக்கும் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

வவுனியாவில் புளொட் இயக்க பொறுப்பாளர் மாணிக்கதாசன், மட்டக்களப்பில் புளொட் மோகன், உட்பட புளொட் இயக்கத்தினர் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் செய்த கொலைகள் எண்ணில் அடங்காதவை, புளொட் இயக்கத்தின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் சதீஸ் என்று அழைக்கப்படும் தில்லைநாதன் சந்திரமோகன் 1999ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி யாழ். நகரில் வைத்து விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். மக்கள் விரோத செயல்களில் இவர் ஈடுபட்டு வந்ததால் இவருக்கு தண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் அப்போது அறிவித்திருந்தனர்.

இதற்கு பழிவாங்கும் முகமாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர் என கூறி யாழ். நகரில் கடை ஒன்றில் வேலை செய்யும் இராஜேஸ்வரன் என்ற இளைஞனை 1999 பெப்ரவரி 20ஆம் திகதி வல்லைவெளி பகுதியில் வைத்து புளொட் இயக்கத்தினர் கடத்தி சென்றனர்.



கடத்தி செல்லப்பட்ட இந்த இளைஞரை புளொட் இயக்கத்தினர் நெல்லியடியில் உள்ள அவர்களின் முகாமில் வைத்து சித்திரவதை செய்தனர். பின்னர் அந்த இளைஞரை படுகொலை செய்து தலையை வெட்டி எடுத்து வந்து பெப்ரவரி 22ஆம் திகதி நள்ளிரவு யாழ். நகரில் போட்டனர்.

இந்த படுகொலை யாழ்.நகரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. புளொட் இயக்கத்தினர் பின்னர் யாழ். நகரில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டு வவுனியாவிலேயே தமது தளத்தை அமைத்து கொண்டனர்.

2009ஆம் ஆண்டுவரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியிலிருந்து வரும் அப்பாவி பொதுமக்களை கடத்திச் சென்று படுகொலை செய்ததில் பெரும் பங்கு புளொட்

இயக்கத்திற்கு உண்டு.

1990 யூலை மாதத்தின் பின்னர் மட்டக்களப்பில் நடந்த கூட்டுப்படுகொலைகளை இராணுவத்தினருடன் சேர்ந்து புளொட் இயக்கத்தினரே செய்தனர் என ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு பல்கலைக்கழக படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, உட்பட மட்டக்களப்பில் நடந்த பல கூட்டுப்படு கொலைகளில் புளொட் இயக்கத்திற்கு நேரடி தொடர்பு இருப்பதாக நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

2009ஆம் ஆண்டுவரை மிக மோசமான படுகொலைகளை புரிந்து வந்த புளொட் இயக்கத்திற்கு அங்கீகாரம் ஒன்றை வழங்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைத்த பாரிய தவறை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் செய்தார். இதன் மூலம் புளொட் இயக்கம் செய்த அத்தனை படுகொலைகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு சம்பந்தனையும் சார்ந்ததாகும்.

விடுதலைப்புலிகளை மட்டுமல்ல அப்பாவி பொதுமக்களையும் கடத்தி படுகொலை செய்த புளொட் இயக்கம் இன்று தமிழ் கட்சிகளுக்கிடையில் பிணக்குகளை தீர்க்கும் நடுநிலையாளராகவும் புனிதர்களாகவும் மாறியுள்ளது.

அதேபோன்று மக்கள் மத்தியில் புனிதர்களாக வலம் வரும் கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ்.

அந்த இயக்கம் இந்திய இராணுவம் இருந்த காலத்திலும் அதன் பின்னரும் செய்த படுகொலைகள் எண்ணில் அடங்காதவை. யாழ்ப்பாணம், வவுனியா மட்டக்களப்பு திருகோணமலை என தமிழர் தேசம் எங்கும் இந்த படுகொலைகள் இடம் பெற்றன.

தந்தையை பழிவாங்குவதற்காக எதும் அறியாத பாடசாலை மாணவன் அகிலன் திருச்செல்வத்தை கடத்தி சென்று படுகொலை செய்த சம்பவமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்களின் அகிம்சை போராட்டங்களில் தன்னை ஆரம்பகாலம் முதல் இணைத்து கொண்ட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைவர் வணசிங்கா அவர்களை 1989ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி மட்டக்களப்பு அரசடியில் அவர் வீட்டில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் படுகொலை செய்தது.

அதேபோன்று 1988ஆம் ஆண்டு யூன் 6ஆம் திகதி மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள புனித மரியாள் தேவாலயத்திற்குள் வைத்து மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வரும் மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவருமான வணபிதா சந்திரா பெர்ணாண்டோ அவர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் சுட்டுக் கொன்றது. இதே தேவாலயத்திற்குள் வைத்து தான் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கமும் சுட்டுக்கொல்லப்பட்டார். வணபிதா சந்திரா அவர்கள் மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் பல.

ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற இயக்கங்கள் செய்யும் அட்டூழியங்களை வணபிதா சந்திரா மனித உரிமைகள் அமைப்புக்கள் மட்டத்திற்கு கொண்டு சென்றார். இதற்கு பழிவாங்குவதற்காகவே ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் வணபிதா சந்திரா அவர்களை படுகொலை செய்தது.

அதேபோன்றுதான் 1989ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரஜைகள் குழு தலைவராக இருந்த சிவானந்தசுந்தரம் அவர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் சுட்டுக்கொன்றது. யாழ்ப்பாணம் அரியாலையில் கூட்டம் ஒன்றில் உரையாற்றி விட்டு பருத்தித்துறை நோக்கி சென்ற போது அவரை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர்.

அக்காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திய பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

*****

# 27 மட்டக்களப்பு படுவான்கரை கிராமங்களின் விருந்தோம்பல்

எனது பத்திரிகைதுறை அனுபவங்களை எழுத வேண்டும் என எண்ணிய போது நெருக்கடியும் துயரமும் நிறைந்த 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியை தவிர்த்து விட்டு எழுத வேண்டும் என எண்ணியிருந்த போதிலும் தவிர்க்க முடியாத நிலையில் இத்தொடரின் ஆரம்பத்திலேயே இலங்கையில் நான் இருந்த இறுதிக்காலம் பற்றி எழுத முற்பட்டேன்.

மட்டக்களப்பு மண் வந்தாரை வரவேற்கும் மண் என்பார்கள், விருந்தோம்பலுக்கு மட்டக்களப்பின் கிராமங்களைத்தான் உதாரணமாக சொல்வார்கள். கூடவே பாயுடன் ஒட்டவைத்து விடுவார்கள் என்றும் சிலர் கூறுவார்கள். இந்த பாயுடன் ஒட்டவைக்கும் கதையில் மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை, விருந்தோம்பல், உபசரிப்பு காரணமாக அங்கு போகிறவர்கள் அங்கேயே தங்கிவிடுவார்கள், அதனால்தான் பாயுடன் ஒட்டிவிடுவதாக ஒரு கதை வந்ததே தவிர பாயுடன் ஒட்டும் மந்திரக்கதைகள் எல்லாம் வெறும் கட்டுக்கதைகள்தான்.

இந்த விருந்தோம்பலை காண வேண்டுமாக இருந்தால் நீங்கள் மட்டக்களப்பின் நகரப்பகுதிக்கோ அல்லது எழுவான்கரைப்பகுதிக்கோ சென்றால் உங்களின் எதிர்பார்ப்பு எதிர்மறையாகத்தான் இருக்கும்.

முக்கியமாக மட்டக்களப்பின் நகரம் என்று சொல்லப்படுகின்ற புளியந்தீவுக்கு சென்றால் இந்த விருந்தோம்பல், உபசரிப்பு என்ற கதைகளை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. யாழ்ப்பாணத்தவர்கள் கஞ்சர்கள் என சொல்வார்கள். அதை விட மோசமானவர்களை புளியந்தீவில் காண முடியும். தங்களை

மட்டக்களப்பின் பூர்வீக குடிகள் என சொல்லிக்கொள்ளும் புளியந்தீவில் உள்ளவர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று குடியேறியவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் தானோ என்னவோ மட்டக்களப்பின் வாசனையை மட்டக்களப்பு நகர் என சொல்லப்படும் புளியந்தீவில் காணமுடியாது.

உண்மையான விருந்தோம்பல், உபசரிப்பை பார்க்க வேண்டுமாக இருந்தால் படுவான்கரை, பொத்துவில், தம்பிலுவில், மற்றும் முஸ்லீம் கிராமங்களான நிந்தவூர், ஒலுவில், அக்கரைப்பற்றுகிராமங்களுக்குத்தான் செல்ல வேண்டும். முஸ்லீம் கிராமங்களின் உபசரிப்பு ஒரு தனிவகை.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர்கள் முஸ்லீம் கிராமங்களுக்கு செல்ல முடியாத போது, முஸ்லீம்கள் தமிழ் கிராமத்திற்கு செல்ல முடியாத போது நான் நிந்தவூர் கிராமத்தில் சலீம் போன்ற என் நெருங்கிய நண்பர்களுடன் உல்லாசமாக சுற்றித் திரிந்த காலங்கள் மறக்க முடியாதவை.

நிந்தவூர் கடற்கரையில் பால்நிலவில் நடுநிசிக்கு பின்னரும் கூட நண்பர்களுடன் பேசிக்கொண்டிருப்போம்.

மட்டக்களப்பின் படுவான்கரையின் விருந்தோம்பலுக்கு ஒரு சம்பவத்தை உதாரணமாக சொல்லலாம்.

எனது நண்பர்களில் ஒருவரான ரொபின் ஏராளசிங்கத்திற்கு படுவான்கரை முனைக்காடு கிராமத்தில் பாடசாலை அதிபர் ஒருவரின் மகளை பெற்றோர் நிட்சயம் செய்திருந்தார்கள்.

பெண்ணின் வீட்டிற்கு என்னையும் என்னுடைய இன்னொரு நண்பர் ஜீவரத்தினகுமாரையும் (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபத்தில் யாழ். சேவைப்பணிப்பாளராக இருந்தவர்) அழைத்து சென்றார்.

எங்களுக்காக மதிய உணவு தயாராக இருந்தது. புதுமாப்

பிள்ளையும், அவர்களது நண்பர்களுமல்லவா, விருந்திற்கான ஏற்பாடு பிரமாதமாக இருந்தது. மரக்கறி, மீன், இறைச்சி, கறி கள், பொரியல், சுண்டல், சொதி என அத்தனை வகைகளும் மேசையில் வைத்திருந்தார்கள்.

எங்கள் மூவருடன் பெண்ணின் தந்தை (பாடசாலை அதிபர்) அவரின் மகன் (தற்போது கல்விப்பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார்) ஆகியோரும் சாப்பிடுவதற்கு அமர்ந்த னர். மணப்பெண்ணும், பெண்ணின் தாயும் எங்களுக்கு பரிமாறி னார்கள்.

கோப்பையில் சோறு போடப்பட்டு பொரியல், சுண்டல் மட் டும் போடப்பட்டிருந்தது. என்ன பார்த்துக்கொண்டிருக்கிறீர் கள், சாப்பிடுங்கள் என்றார்கள். என்ன கொடுமையடா இது. இவ்வளவு கறிவகைகளையும் சமைத்து மேசையில் வைத்து விட்டு சோற்றை வெறும் பொரியலுடன் சாப்பிட சொல்கிறார் களே என மனதிற்குள் யோசித்து கொண்டோம்.

ஜீவரத்தினகுமார் மட்டக்களப்பில் பிறந்திருந்தாலும் அவ ரின் பெற்றோர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள். மாம்பிள்ளை ரொபின் ஏராளசிங்கமும் மட்டக்களப்பு நகரில் பிறந்து வளர்ந் தவர். படுவான்கரை பழக்க வழக்கம் தெரியாது. மூவரும் ஒரு வரை ஒருவர் பார்த்து திருதிரு என முழித்து கொண்டிருந்தோம்.

எங்கள் நிலமை பெண்ணின் தந்தைக்கு புரிந்து விட்டது. என்ன யோசிக்கிறீங்கள், தனிய பொரியலுடன் சாப்பிடுவதா என யோசிக்கிறியளா என கேட்டார். முதலில் ஒரு கோப்பை சோறு பொரியலுடன் சாப்பிட வேணும், பிறகு கறியளுடன் சாப்பிட வேணும், சொதியுடன் சாப்பிட வேண்டும். பிறகு தயிர் தேன் சீனி பழம் போட்டு ஒரு கோப்பை சோறு சாப்பிட வேணும் என்றார். இதுதான் படுவான்கரை சாப்பாட்டு வழக்கம் என்றார்.

அன்று சாப்பாட்டில் அவர்கள் எங்களை திக்குமுக்காட

வைத்து விட்டார்கள். அற்புதமான சமையலுக்கு அப்பால் அவர்களின் அன்பான உபசரிப்பால் எங்களை திளைக்க வைத்து விட்டார்கள்.

திரும்பி வரும் போது எனது நண்பன் ஜீவரத்தினகுமார் சொன்னான். மச்சான் நானும் படுவான்கரை பகுதியில தான் கல்யாணம் முடிக்க வேணும் என சொன்னான்.

அப்படி சொன்ன ஜீவரத்தினகுமார் யாழ்ப்பாணத்தில்தான் திருமணம் முடிந்தார். அப்படி ஒரு எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்த நான் மட்டக்களப்பிலேயே திருமணம் முடித்தேன்.


இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கிறேன். சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பிய நாடுகள் என பலநாடுகளுக்கும் சென்றிருக்கிறேன். ஆனால் படுவான்கரை பகுதி மக்களின் உபசரிப்பையும் விருந்தோம்பலையும் எங்கும் காணமுடியாது.

இத்தகைய பெருமை கொண்ட அந்த மண்ணில்தான் இந்த கொடூரங்கள் நடைபெற்றன. வடக்கில் பிறந்து விட்டார்கள் என்ற ஒரு காரணத்திற்காக புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், சமூக தொண்டர்கள் விரட்டப்பட்டார்கள், சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அந்த அப்பாவிகளின் இரத்தம் வீதிகளில் ஓடிய அவலம் அங்குதான் நடைபெற்றது.

*****

# 28 வடமுனை சிங்கள குடியேற்றமும் மேது பயணமும்

1982ஆம் ஆண்டு முற்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லைப்பகுதியான வடமுனையில் சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. வடமுனை வெலிக்கந்த பிரதேசத்திற்கு கிழக்காக உள்ள பகுதியாகும். நீர்வளமும், நிலவளமும் நிறைந்த பிரதேசம். அந்த பகுதியில் சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளிவந்த போது அதை அரசாங்கம் மறுத்திருந்தது.



ஆனால் பிக்கு ஒருவர் தலைமையில் பெருமளவில் சிங்கள குடும்பங்கள் கொண்டுவரப்பட்டு அங்கு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு குடியேற்றப்படுவதாகவும், அந்த பகுதிக்கு தங்களின் வயல்களை பார்வையிட சென்ற தமிழர்கள் இருவர் காணாமல் போய்விட்டதாகவும் பரபரப்பாக செய்திகள் வந்து கொண்டி



ருந்தன. இவை அனைத்தையும் சிறிலங்கா அரசாங்கம் மறுத்திருந்தது.

இந்நிலையில் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்த அனந்தகிருஷ்ணன் என்னை தொடர்பு கொண்டு வட முனைக்கு சென்று அங்கு சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளப்படுவது உண்மைதானா என பார்ப்போம் என கேட்டார். (சண்டே ஒப்சேவரில் சேர்ந்த பின் அனந்த் பாலகிட்ணர் என மாற்றிக்கொண்டார்)

அந்த நேரத்தில் அப்பகுதிக்கு தமிழர்கள் யாரும் செல்ல முடியாத அச்சநிலை காணப்பட்டது. அங்கு செல்ல முற்பட்டவர்களையும் அந்த பகுதியின் எல்லையில் இருந்த இராணுவத்தினர் தடுத்து விட்டனர். சிங்கள குடியேற்றத்திற்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டே பெரும் எடுப்பில் அந்த சிங்கள குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருந்ததாக அறிந்திருந்தோம்.

இருந்த போதும் எப்படியாவது வடமுனைக்கு சென்று சிங்கள குடியேற்றத்தை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த வேண்டும் என திட்டமிட்டோம். இருந்த போதிலும் ஏற்கனவே அங்கு சென்ற தமிழர்கள் காணாமல் போய்விட்டார்கள் என்ற செய்தி ஒருபுறம் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அப்போது அனந்தகிருஷ்ணனின் அப்பா கே.பாலகிட்ணர் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வோதய இயக்க இணைப்பாளராக இருந்த என்னுடைய நண்பர் சம்டீன் அவர்களிடம் எமது நோக்கத்தை கூறி அதற்கு உதவி செய்ய முடியுமா என கேட்டேன். மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் என்னுமிடத்தில் தான் சர்வோதய மட்டக்களப்பு தலைமையகம் இருந்தது. ஒருவாறு சாம்டீன் எமது திட்டத்திற்கு சம்மதித்தார். ஆனால் ஒரு

*நிபந்தனை போட்டார். நான் உங்களை கூட்டிச்செல்கிறேன். ஆனால் நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பத்திரிகையாளர் என காட்டி கொள்ள கூடாது என தெரிவித்தார். நாமும் சம்மதித்தோம்.*

*சாம்டீன் கம்பளையை சேர்ந்தவர். சிங்கள மொழி மூலமே கல்விகற்றவர். அதனால் அவர் மீது பெரிதாக சந்தேகம் ஏற்பட வாய்ப்பில்லை. நான், அனந்தகிருஷ்ணன், சாம்டீன், சர்வோதய பணியாளர் என நான்கு பேரும் சர்வோதய வானில் புறப்பட்டோம். பால்மா, அரிசி, உலர் உணவு பொருள்களையும் சாம்டீன் வாகனத்தில் ஏற்றினார்.*

*நாங்கள் வடமுனையில் குடியேறியிருக்கும் சிங்கள மக்களுக்கு உதவி நிவாரணங்களை வழங்கப் போகிறோம். நீங்கள் இருவரும் பத்திரிகையாளர்கள் அல்ல. இங்கு திரும்பி வரும் வரைக்கும் நீங்கள் சர்வோதய தொண்டர்கள். எமது திட்டம் பிசுபிசுத்தால் பிக்குவும் சிங்களவர்களும் எங்கள் அனைவரையும் மேலே அனுப்பிவிடுவார்கள் என சாம்டீன் சொன்னார்.*

*மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு பொலனறுவைக்கு சென்று அங்குள்ள சர்வோதய மாவட்ட இணைப்பாளராக இருந்தவரையும் (சிங்களவர்) அழைத்து கொண்டு வெலிக்கந்த ஊடாக வடமுனைக்கு சென்றோம். வடமுனையில் இருக்கும் மக்களுக்கு உதவிகளை வழங்க வந்திருக்கிறோம் என கூறியே பொலனறுவை சர்வோதய இணைப்பாளரையும் சாம்டீன் அழைத்து சென்றார்.*

*எனக்கும் அனந்தகிருஷ்ணனுக்கும் மனதிற்குள் பயம். எங்களை யார் என்று தெரிந்து கொண்டால் நடக்கப்போகும் விபரீதத்தை எண்ணி அஞ்சிக்கொண்டிருந்தோம். முற்பகல் 11 மணியளவில் வடமுனை எல்லைக்கு சென்றதும் இராணுவத்தினர் அங்கு செல்ல முடியாது என்றனர். சர்வோதய தொண்டர்கள் என்பதால் பின்னர் ஒருவாறு விட்டனர். அங்கே சென்று*

பிக்குவை சந்தித்து அங்குள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கப்போவதாக சாம்டீன் தெரிவித்தார். தென்னிலங்கையி லிருந்து கிடுகுகள், மற்றும் வீடுகள் அமைப்பதற்கான பொருட் கள் ஏற்றிவருவதை நேரில் பார்த்தோம். அனைத்தையும் நாம் படம் எடுத்துக்கொண்டோம்.

வடமுனை வளமான பிரதேசம், வடமுனை நன்னீர் குளத்தில் மீன்பிடி தொழில் செய்யலாம். அந்த குளத்திலிருந்து இரண்டு போக நெற்செய்கையும் செய்ய முடியும். வளமான அப்பிரதேச த்தை இலக்கு வைத்தே சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளப்பட் டது. வடமுனையிலிருந்து பார்த்தால் குடும்பிமலை தெரியும். (இப்போது தொப்பிக்கல என பெயர்மாற்றிவிட்டார்கள்)

ஒருவாறு அன்று மாலையில் அங்கிருந்து புறப்பட்டு இரவு மட்டக்களப்பு நகரை சென்றடைந்தோம். அதன் பின்னர் யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் வட முனை சிங்கள குடியேற்றம் பற்றி ஆதாரபூர்வமாக படங்களு டன் அனந்தகிருஷ்ணனின் கட்டுரை வெளியானது.

அந்த ஆதாரத்துடன் வடமுனை சிங்கள குடியேற்றம் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பபட்டது. அந்நேரத்தில் தேவ நாயகம் அரசாங்கத்தில் நீதியமைச்சராக இருந்த போதிலும் சி ங்கள குடியேற்றத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் பேசினார். வடமுனையில் சிங்கள குடியேற்றம் செய்யப்படவில்லை என கூறிவந்த அரசாங்கத்தால் பதில் சொல்ல முடியாமல் போய் விட்டது.

வடமுனை சிங்கள குடியேற்றத்தை ஆதாரங்களுடன் வெளி யுலகிற்கு கொண்டு வந்த பெருமை அனந்தகிருஷ்ணனைத்தான் சாரும். இளம்கன்று பயமறியாது என்பது போல அப்போது நானும் அனந்தும் பயமறியாத இளைஞர்கள். இப்போது நினைத் தாலும் அந்த பயணம் அச்சமாக இருக்கும். எமது பயணத்தின் வெற்றிக்கு சாம்டீனின் உதவியையும் மறக்க முடியாது.

ஈழநாட்டில் கட்டுரை படங்களுடன் வெளிவந்து பாராளு மன்றத்தில் அது சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து பீக்கு விற்கும், அரசாங்கத்திற்கும் சாம்டீன் தான் எங்களை அழைத்து சென்றார் என்ற விடயம் தெரியவந்து விட்டது. அதனால் சாம் டீன் சர்வோதய தலைமையகத்தினாலும், அரசாங்கத்தினாலும் சில நெருக்கடியையும் சந்தித்தார். இருந்த போதிலும் சாம்டீன் உடனான நட்பு தொடர்ந்து இருந்தது.

இப்படி சில திரில் வேலைகளை அக்காலத்தில் நானும் சாம் டீனும் சேர்ந்து செய்திருக்கிறோம். சந்தர்ப்பம் வரும் போது சில வற்றை சொல்வேன்.

1983ஆம் ஆண்டுக்கு பின்னர் அப்பகுதியில் விடுதலைப்போ ராட்ட இயக்கங்களின் ஆதிக்கம் வளர ஆரம்பித்ததையடுத்து வடமுனையில் குடியேறியிருந்த சிங்களவர்கள் வெளியேறி விட்டார்கள். இப்போது மீண்டும் அந்தப்பகுதியில் சிங்களவர் கள் குடியேறுவதாக அறிய முடிகிறது.

சுமார் 18 வருடங்களுக்கு முதல் மீண்டும் வடமுனை, குடும் பிமலை, தரவை ஆகிய இடங்களுக்கு நான் சென்றிருந்த போது அந்த இடங்களை மீண்டும் பார்க்க முடிந்தது. வடமுனையில் விடுதலைப்புலிகளின் ஒரு முகாம் இருந்தது. குடும்பிமலை (தொப்பிக்கல) அடிவாரத்தில் விடுதலைப்புலிகளின் பெரிய பண்ணை ஒன்று இருந்தது. விசுதான் அதற்கு பொறுப்பாக இருந்தார். ஒருநாள் இரவு அந்த பண்ணையில் தங்கியிருந்த அனுபவம் கூட மறக்க முடியாததாகும்.

அன்றிரவுவும் மறுநாளும் அந்த பண்ணையில் இருந்த போது விருந்தில் மூழ்கடித்து விட்டார் விசு. அந்த பண்ணையில் பால் இறைச்சி, மரக்கறி என ஒன்றுக்கும் பஞ்சமில்லை.

பொதுவாகவே விடுதலைப்புலிகள் உபசரிப்பில் வல்ல வர்கள். அதிலும் விசு உபசரிப்புக்கும் பழகுவதற்கும் மிகவும்

நல்லவர்.

ஒருமுறை விசு என்னிடம் சொன்ன விடயம் பத்திரிகையில் தலைப்பு செய்தியாக வந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. அப்போது ரி.ஆர்.ரி வானொலியிலும் அச்செய்தி வெளியாகியிருந்தது. அதன் பின்னர் என்னுடன் கதைக்கும் போது அண்ணை இதை பேப்பருக்கு எழுதிப்போடாதையுங்கோ என அடிக்கடி சொல்வார். புளொட் இயக்கத்தில் ஆரம்பத் தில் சேர்ந்து பின்னர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சே ர்ந்து கொண்ட விசு மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளராகவும் இருந்தார்.

அரசசார்பு பத்திரிகையில் பணியாற்றுபவர் அரசு ஆதரவாள ராகத்தான் இருப்பார் என எண்ணுவது தவறாகும். அவர்கள் தங்கள் இனம்சார்ந்து எத்தகைய நெருக்கடியான பணிகளை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை சிலர் அறிந்து கொள்வதில்லை.

*****

# 29 ஐரோப்பாவில் முதல் தமிழ் ஊடகம்

1980 களின் பின் மேற்குலக நாடுகளுக்கு ஈழத்தமிழர் கள் பெருமளவில் புலம்பெயர்ந்த போது அந்த நாடுகளில் தமது தாயகச்செய்திகளையும், தாயக நினைவுகளையும், தகவல்க ளையும் சொல்லக் கூடிய ஊடகங்கள் எதுவும் இருக்கவில்லை.

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடை யில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து பெருந்தொகை யான தமிழர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று குடியேறினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய எஸ்.குகநாதனும், ஆர்.கந்தசாமியும் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் குடியேறினர்.

இவர்கள் இருவரும் சேர்ந்தே 1990ல் பரிஸ் ஈழநாடு என்ற வாரப்பத்திரிகையை வெளியிட்டனர். பரிஸ் நகரிலிருந்து வெளிவந்த ஈழநாடு வாரப்பத்திரிகை தாயக செய்திகளை தாங்கி வெளிவந்தது.

வாரப்பத்திரிகையான பரிஸ் ஈழநாடு பத்திரிகை மட்டுமே இலங்கையில் நடக்கும் யுத்த செய்திகளையும் அரசியல் கட்டுரை களையும் தாங்கி வந்தது. தாயகச்செய்திகளை அறிந்து கொள்ள முடியாது இருண்ட உலகத்தில் வாழ்ந்து வந்த புலம்பெயர் தமிழர் களுக்கு இது பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

அதன் பின்னர் எஸ்.எஸ்.குகநாதன் தலைமையில் பிரான் ஸில் ஒலிப்பரப்பு துறையில் ஆர்வம் கொண்டிருந்த கலைஞர் கள் இணைந்து 1995ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று ரி.ஆர்.ரி. தமிழ்ஒலி என்ற பெயரில் 24மணிநேர வானொலி ஒன்றை ஆரம்பித்தனர்.

இன்று ஐரோப்பா, ஒஸ்ரேலியா, கனடா என ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பல தமிழ் வானொலிகளும், தொலைக்காட்சிகளும் தோன்றியுள்ள போதிலும் அவற்றிற் கெல்லாம் வழிகாட்டியாக புலம்பெயர்ந்து மேற்குலக நாடுக ளில் வாழ்ந்த ஈழத்தமிழர்களுக்கு தாயக செய்திகளை முதன் முதலில் சுமந்து வந்த இலத்திரனியல் தமிழ் ஊடகமாக திகழ் வது ரி.ஆர்.ரி. தமிழ்ஒலிதான்.

தாயக நினைவுகளுடன் தம்மை 24மணி நேரமும் இணைத் துக்கொள்ள கூடிய களமாக ரி.ஆர்.ரி. வானொலி ஆரம்பிக்கப் பட்டது. அன்றைய தினம் தாயகத்திலிருந்து வாழ்த்து சொல்லும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

தமது தாயகத்தை பிரிந்து பிறந்த மண்ணையும் மக்களையும் உறவுகளையும் பிரிந்து ஏக்கத்தோடு இருந்த மக்களுக்கு அந்த உறவுகளோடு உரையாடுகின்ற உணர்வை, தென்மை, பலத் தை, கொடுத்தது ரி.ஆர்.ரி தமிழ்ஒலி. தாயக தொப்புள் கொடி உறவு அறுந்துவிடவில்லை என்ற உறுதியையும் தன் நம்பிக் கையும் கொடுத்தது ரி.ஆர்.ரி. தமிழ்ஒலி.

ஒரு வழிப்பாதையாக இருந்த தமிழ் வானொலி ஊடக வர லாற்றில் முதன்முறையாக நேயர்களும் நேரடியாக தொலை பேசி ஊடக பேசும் வாய்ப்பையும் ரி.ஆர்.ரி. தமிழ்ஒலி வழங்கி யது. ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களை தாயக விடுதலை என்ற ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்து அந்த விடுதலைப்போராட்டத்திற்கு ஐரோப்பிய நாட்டிலிருந்து உந்து சக்தியாக இருந்த ஒரேஒரு வானொலி ரி.ஆர்.ரி வானொ லியாகும்.

ரி.ஆர்.ரி வானொலி கடந்த 23வருடங்களில் பல இடர்பாடு களை சந்தித்த போதிலும் தொடர்ந்து செய்தி மற்றும் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தி வருகிறது.

தமிழ் இலத்திரனியல் ஊடகம் அதுவும் தமிழ் வானொலி ஒன்றின் 23 ஆண்டுகால பயணம் என்பது சாதனைதான். பொருளாதார நெருக்கடிகள், அரசியல் நெருக்கடிகள் பல முனை நெருக்கடிகள், சோதனைகள், அச்சுறுத்தல்களை தாண்டிய பயணத்தில் ரி.ஆர்.ரி தமிழ்ஒலி 23 ஆண்டுகளை கடந்திருக்கிறது என்பதை எண்ணும் போது அதனை இமாலய சாதனையாகவே கருத வேண்டும்.

தாயக செய்திகளை உடனுக்குடன் களத்திலிருந்து வழங்குபவர்கள் என்ற பெருமையை கூட ரி.ஆர்.ரி. வானொலி பெற்றிருந்தது.

மாணிக்கவாசகம், அனந்த பாலகிட்ணருடன் இணைந்து நானும் தாயகச்செய்திகளை புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு சொல்வதற்கான களத்தை ரி.ஆர்.ரி. வானொலி ஒருகாலத்தில் வழங்கியிருந்தது. ஆனையிறவு தாக்குதல் வெற்றியின் செய்தியை ஐரோப்பாவில் இருந்த தமிழ் மக்களுக்கு முதலில் வழங்கியது ரி.ஆர்.ரி. வானொலிதான். அந்த நேரத்தில் ஐரோப்பாவில் இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் கூட அப்படி ஒரு செய்தி எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என கைவிரித்து நின்ற போது அந்த வெற்றி செய்தியை முதலில் ஐரோப்பாவில் உள்ள தமிழ் மக்களுக்கு ரி.ஆர்.ரி. தமிழ் ஒலி வழங்கியிருந்தது.

இந்த ஊடக பயணத்தின் வெற்றி என்பது அந்த ஊடகத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் அர்ப்பணிப்பும் துணிச்சலும் என்றுதான் சொல்லுவேன். காலத்தின் தேவை கருதிய பணியை அவர்கள் இன்றும் செய்து வருகின்றனர்.

ஏசுவார்கள், எரிப்பார்கள் உண்மையை எழுது, உண்மையாகவே எழுது என யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலா

வது தமிழ் தினசரியாக ஈழநாடு பத்திரிகைக்கு யோகர் சுவாமி கள் அவர்கள் ஆசி வழங்கியிருந்தார்.

யோகசுவாமிகள் சொன்னது போல ரி.ஆர்.ரி. தமிழ்ஒலி அச்சுறுத்தல்கள், நெருக்கடிகள், அதற்கு அப்பால் பல சவால் களையும் தாண்டியே பயணித்திருக்கிறது. அந்த நெஞ்சுறுதி ரி.ஆர்.ரி. தமிழ்ஒலி கலைஞர்களுக்கு தொடர்ந்து இருக்கும். சத்திய சோதனைகளை தாண்டி அவர்களின் இலட்சிய பயணம் வெற்றி பெறும்.

இந்த வானொலியின் ஆரம்ப காலத்தில் இருந்து எந்த ஊதிய மும் இன்றி ரங்கன் (தர்சன்) மோகன், ராசா, பிலிப்தேவா, போன் றவர்கள் தங்களை அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றனர்.

1995ல் ரி.ஆர்.ரி. வானொலி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வரு டங்களில் 1997. ஜனவரி 14ஆம் திகதி ரி.ஆர்.ரி. தமிழ்ஒளி என்ற பெயரில் ஐரோப்பாவின் முதலாவது தமிழ் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் 24மணிநேர சேவையாக ஆரம்பிக் கப்பட்டது.

ரி.ஆர்.ரி வானொலியை தொடர்ந்து 1997 ஆண்டு யூன் 9ஆம் திகதி லண்டனிலிருந்து ஐ.பி.சி தமிழ் என்ற வானொலியை தாஸீஸியஸ் ஆரம்பித்தார். சில காலங்களின் பின் இவ்வானொ லியையும் விடுதலைப்புலிகள் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

ஐரோப்பாவில் தமிழ் மக்களின் ஆதரவை பெற்று சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்த ரி.ஆர்.ரி. தமிழ்ஒளி தொலைக்காட்சி யை 2001ஆம் ஆண்டு ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் சுவீக ரித்து கொண்டனர். இந்த வளங்களை பயன்படுத்தி ரி.ரி.என் என்ற தொலைக்காட்சியை விடுதலைப்புலிகள் ஆரம்பித்தனர். எனினும் 2006ஆம் ஆண்டு ரி.ரி.என் தொலைக்காட்சி பிரான்ஸ் அரசாங்கத்தால் மூடப்பட்டது.

*****

## நூலாசிரியர் பற்றி...



வடமராட்சி கிழக்கு ஆழியவளையை பிறப்பிடமாக கொண்ட இரா.துரைரத்தினம் 25 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பில் வாழ்ந்தவர். கடந்த 2004ஆம் ஆண்டின் பின் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்து வருகிறார்.

1981ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையின் செய்தியாளராக ஊடகத்துறைக்குள் பிரவேசித்த இவர் சில மாதங்களின் பின்னர் லேக்கவுஸ் பத்திரிகையின் மட்டக்களப்பு பிராந்திய செய்தி யாளரானார். அதன் பின் யாழ்ப்பாணம் முரசொலி பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலும் சிலகாலம் பணியாற்றினார்.

1995ஆம் ஆண்டின் பின் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த விடிவானம் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த இவர் தினக்கதிர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராவார்.

அதே சமகாலத்தில் பிரான்ஸிலிருந்து ஒளிபரப்பான ரி.ஆர்.ரி தொலைக்காட்சி மற்றும் ரி.ஆர்.ரி வானொலி ரி.ரி.என் தொலைக்காட்சி ஒஸ்ரேலியாவிலிருந்து ஒலிப்பரப்பான எஸ்.பி.எஸ் வானொலி ஆகியவற்றின் இலங்கை செய்தி யாளராகவும் தமிழ்நெற் மட்டக்களப்பு செய்தியாளராகவும் பணியாற்றினார். பரிஸ் ஈழநாடு, ஈழமுரசு, உலக தமிழர் ஆகிய பத்திரிகைகளுக்கு நீண்டகாலம் அரசியல் கட்டுரைகளை வாராவாரம் எழுதி வந்தார்.

சுவிஸ் நாட்டில் நிலவரம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஸ்தாபக ஆசிரியராக பணியாற்றினார். அதன் பின் ஐரோப்பா மற்றும் ஒஸ்ரேலியா நாடுகளில் ஒளிப்பரப்பான ஜி.ரி.வி தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியராக சிங்கப்பூர், லண்டன் அலுவலகங்களிலும் பின்னர் சுவிட்சர்லாந்திலும் பணியாற்றினார்.

1981ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அரசியல் கட்டுரைகளை எழுதி வரும் இவர் தற்போதும் கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்தந்தி உட்பட சில வாரப்பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை வாராவாரம் எழுதி வருகிறார். கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக தினக்கதிர் என்ற இணையத்தளத்தையும் நடத்தி வருகிறார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தில் நீண்டகாலம் தலைவராக இருந்த இவர் இலங்கையை விட்டு வெளியேறும் வரை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

# செய்திகளின் மறுபக்கம்

இரா.துரைரத்தினம்